
ஆகாய
கங்கை
லட்சுமி பிரபா



# ஆகாய
# கங்கை

# ஆகாய கங்கை

## 1

வழக்கமாய் அதிகாலை ஐந்து மணிக்கே சாம்பவி கண் விழிப்பவள் என்பதால் தன்னிச்சையாய் இன்றும் விழித்துக் கொண்டாள்.

திறந்திருந்த சன்னல் வழியே சுதந்திரமாய் உட்புகுந்த காற்று, தோட்டத்தில் பூத்திருந்த செண்பகம், இருவாட்சி, பவள மல்லிப் பூக்களின் நறுமணத்தைக் கலவையாய் சுமந்து கொண்டு வந்து சில்லென்று முகத்தில் மோதியது.

ஆழ மூச்செடுத்து சுகந்த மணத்தை ரசித்த சாம்பவி கலைந்த முடியைக் கோதி கொண்டையிட்டுக் கொண்டு நிமிர்ந்து அமர்ந்தாள்.

புருவ மத்தியில் நினைவை நிறுத்தி பதினைந்து நிமிடங்கள் ஆழ்ந்த தியானம் செய்தாள். சிந்தனைகள் ஒருமுகப்பட்டு மனம் வெற்றுத் தாளானது.

புத்துணர்வு பெற்றவளாய் சட்டென்று எழுந்து குளியலறைக்குள் புகுந்தாள் சாம்பவி. பத்து நிமிடங்-களில் வெளிப்பட்டவள், பூத்துவாலையால் முகத்தை இலேசாக ஒற்றியபடியே அடுக்களைக்குள் நுழைந்தாள்.

அம்மா மஞ்சுளா மும்முரமாக வாணலியில் ரவையை வறுத்துக் கொண்டிருந்தாள்.

கண்கள் பனிக்க மகளை ஆசையுடன் ஏற இறங்கப் பார்த்தாள்.

''சாம்பவி! சாமி மாடத்துக்குக் கீழே.. உனக்கு ஒரு புதுச் சேலை வாங்கி வச்சிருக்கேன். நமஸ்காரம் பண்ணிட்டு எடுத்துக் கட்டிக்கோம்மா.''

''இன்னிக்கு என்ன விசேஷம்? கேசரி பண்ணிட் டிருக்கே? புதுச்சேலை வாங்கி வச்சிருக்கே?'' அகன்ற விழிகளில் ஆச்சரியம் மிதக்க ஏறிட்டாள் சாம்பவி.

''நிஜமாவே ஞாபகம் இல்லியா? இன்னிக்கு உன் னோட பிறந்த நாளும்மா... அதான்.''

''அட.. போம்மா! ஒவ்வொரு வருஷமும் என்னோட பிறந்த நாள் எப்ப வருதுன்னு.. உன்னைக் கேட்டுத்தான் தெரிஞ்சுக்க வேண்டியிருக்கு. பிறந்த நட்சத்திரத்தைப் பார்த்து கொண்டாடுகிறவளாச்சே நீ!''

''மகம் நட்சத்திரத்துலே பிறந்தவங்க ஜெகத்தை ஆளுவாங்கன்னு சொல்வாங்க.. ஆனா என் வயித்துல வந்து பொறந்த பாவத்துக்குத்தான்.. நீ வறுமையில வாடி வதங்கிட்டிருக்கே செல்லம்!''

குரலில் ஏகத்திற்கும் சோகம் இழையோடியது. நா தழுதழுத்தது. தாயின் இதழ்கள் துயரத்தில் துடிப்பதைக் கண்டாள் சாம்பவி.



அவள் பேச நினைக்கும் வார்த்தைகள் போட்டி போட்டுக் கொண்டு முன்னால் ஓடி வந்து தொண் டையைத் தாண்டாமல் மவுனம் காத்ததையும் மகள் புரிந்து கொண்டாள்.

மனதின் வலி.. தாயின் இடுங்கிய கண்களில் வெப்ப நீர் ஊற்றை உருவாக்கியது.

''என்னத்துக்கு அம்மா அழறே? எனக்கென்ன குறைச்சல்? கஷ்டப்பட்டு வளர்த்து என்னை ஆளாக்கி யிருக்கே... நர்ஸிங் கோர்ஸ் முடிச்சிட்டு பிரபல மருத்துவ மனையில ட்ரெயினிங் முடிச்ச கையோட.. அங்கேயே வேலை கிடைச்சு கை நிறைய சம்பாதிக்கிறேன்.

''பரம்பரை நாட்டியக் கலையை எனக்குக் கத்து குடுத் திருக்கே... உன்னோட ஃபிரண்ட் தேவகி லயன்ஸ் கிளப் செகரட்டரி.. நான் படிக்கிற காலத்துல ஊக்கத்தொகை கொடுத்து உதவினாங்க... எதிர்த்தாப்பல இருக்கற அப்பார்ட்மெண்ட்டைச் சார்ந்த சில குழந்தைகளுக்கு நான் டான்ஸ் கத்துக் கொடுக்கறேன்.

''தேவகி ஆன்ட்டியோட பலத்த சிபாரிசு இது! நர்ஸ் வேலைக்குப் போறே.. உனக்கு எப்போ டைம் கிடைக் குதோ... அப்ப ட்யூஷன் வச்சுக்கோ. வாரத்துல ரெண்டு நாள் கிளாஸ் எடுத்தாக் கூடப் போறும்னு சொல்லிட் டாங்க...

''ட்யூட்டி, டான்ஸ் கிளாஸ்னு நான் சந்தோஷமா இருக் கேன்மா. அப்பா உயிரோட இருந்தாக் கூட இந்தளவுக்கு எனக்கு பொறுப்பும், கடமையுணர்ச்சியும் இருந்திருக்காது தெரியுமா?

''எங்க ஹாஸ்பிடல்லே நான் வேலை செய்யற விதத்தைப் பார்த்து தலைமை மருத்துவரிலிருந்து கடைநிலை

ஊழியர் வரை.. என்னை ரொம்பவே பாராட்டறாங்க தெரியுமா?''

தாயின் தோளில் கரிசனத்துடன் கை வைத்தாள் சாம்பவி.

மஞ்சுளாவின் விழிகளில் பொங்கிய கண்ணீர் உடைப் பெடுத்துக் கொண்டு வழிந்து கன்னங்களில் வாய்க்கால் போட்டு இறங்கியது.

''என்னோட பிறந்த நாள்னு சொல்றே? இப்படி எதையோ மனசுல வச்சுக்கிட்டு துக்கப்பட்டு அழறே... எனக்கு எவ்ளோ கஷ்டமா இருக்கு தெரியுமா அம்மா? நீ எனக்கு அம்மா மட்டுமில்லே.. என்னோட ஃப்ரண்ட், ஃபிலாஸஃபர், கைட் எல்லாமே நீ தான்னு நான் நெனச் சுட்டிருக்கேன்.

''ஆனா.. ஏதோ ஒரு பெரிய விஷயத்தை உன் மனசுக் குள்ளே போட்டு புதைச்சு வச்சு.. வேதனை தாங்காம புழுவா துடிக்கிறே! அது என்ன விஷயம்னு என் கிட்டே சொல்லக் கூடாதாம்மா? ப்ளீஸ்!''

''ஓரளவுக்கு உனக்கு விஷயம் தெரியுமில்லையா? இப்போதைக்கு அது போறும்.. போம்மா, புதுப் புட வையைக் கட்டிக்கிட்டு வாடா கண்ணா.''

மகளை திசை திருப்பினாள் மஞ்சுளா. சாம்பவி மீண் டும் கேள்விக் கணையைத் தொடுக்கும் முன் துரிதப் படுத்தினாள்.

''புடவையைக் கட்டிக்கிட்டு வந்ததும்.. நடேசன் மாமாகிட்டே போய் ஆசீர்வாதம் வாங்கணும். அப்படியே கற்பகம் அத்தைக்கு பி.பி. செக் பண்ணிட்டு இன்சுலின் இன்ஜெக்ஷன் போட்டுரு. சரியா?''



ஒரு கணம் தாயின் விழிகளை ஊன்றிப் பார்த்துவிட்டு கூடத்தை நோக்கி நகர்ந்தாள் சாம்பவி.

மஞ்சுளா ஒரு விஷயத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டால்.. அது அவ்வளவுதான்! என்னதான் தலைகீழாக நின்று பார்த்து மன்றாடினாலும்.. அவளிடமிருந்து விஷயத்தைக் கறக்கவே முடியாது.

'நடேசன் மாமாவிற்கு ஒரு வேளை முழு விவரமும் தெரிந்து இருக்குமே? அவரிடம் கேட்டுப் பார்த்தால்..? ஊகூம்!

நடேசன் மாமா தங்கை மஞ்சுளா மீது அளவு கடந்த பாசம் கொண்டவர். தங்கையின் விருப்பு, வெறுப்புகளை நன்கு அறிந்த மனிதராயிற்றே?

சாம்பவியின் மேல் பாசமழை பொழிபவர்தான். ஆனால் மஞ்சுளாவைப் பற்றிய விவரங்களைத் தன்னிடம் கூறுவார் என்று நிச்சயம் சொல்ல முடியாதே?'

ஆகாய நீல வண்ணக் காட்டன் புடவையைக் கட்டிக் கொண்டு வந்து, தன் கால்களில் விழுந்து நமஸ்கரித்த சாம்பவியை கண் கொள்ளாமல் ஆசை தீரப் பார்த்தாள் மஞ்சுளா.

'நிகு நிகுவென்று உயரம், உயரத்திற்கேற்ற பருமன், கூர் மூக்கு, ரோஜா இதழ்கள், சங்குக் கழுத்து, பாலில் குங்குமப் பூவைக் கலந்தாற்போன்று அசரடிக்கும் நிறம்... அந்த, வம்சத்திற்கு உரிய கம்பீரம்... அதே ராஜ களை!

'அச்சில் வார்த்தது போல் உரித்துக் கொண்டு வந்து அந்த வம்சத்தைப் பறைசாற்றுகின்ற அழகுத் தோற்றம். யார் கண்களிலாவது இவள் பட்டு விட்டால்?' மஞ்சுளா வுக்கு உள்ளூர திகில் ஊறியது.

# 2

''சவுபாக்கியவதியா.. தீர்க்காயுசா இரும்மா'' தனது பாதங்களைத் தொட்டுப் பணிந்த சாம்பவியின் தோளைத் தொட்டுத் தூக்கினார், நடேசன்.

சட்டைப்பையில் துழாவி ஒரு ஐநூறு ரூபாய் தாளை நீட்டினார்.

''வே.. வேணாம் மாமா! உங்க ஆசீர்வாதமே போறும்.''

''ஊகூம், மறுத்துப் பேசப்படாது. என் திருப்திக்கு வாங்கிக்கோ சாம்பவிம்மா'' நடேசன் மாமா நெகிழ்ந்து போய் பேசவும், சட்டென்று வாங்கிக் கொண்டாள்.

''க... கற்பகம் உள்ளார இருக்கா.. அவ கிட்டயும் ஆசீர்வாதம் வாங்கிக்கோ.. வழக்கம் போல கசகசன்னு பேசத்தான் செய்வா.. எதையும் காதுலே வாங்கிக்காம போயிட்டே இருக்கணும். மனசு வருத்தப்படக் கூடாது சரியாடா?''

கிசுகிசுத்த குரலில் பரிதாபமாகப் பேசியவரை நிமிர்ந்து பார்த்தாள் சாம்பவி.

''எனக்கு எல்லாமே பழகிப்போச்சு மாமா! நான் எதையும் மனசுல வச்சுக்க மாட்டேன். நீங்க கவலைப்படாதீங்க'' முறுவலித்தாள்.

நடேசன் மாமா குணத்தில் பத்தரை மாற்றுத் தங்கம். ஆனால் அவரது சகதர்மிணி கற்பகத்திடம் குன்றுமணி அளவு கூட குணத்தைக் காணவே முடியாது.

தொட்டதற்கு எல்லாம் எரிந்து விழுவாள். முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கும். தான் பணக்காரக் குடும்பத்திலிருந்து வந்தவள் என்ற ஆணவம் சதா விழிகளில் தெறிக்க வளைய வருபவள்.



நடேசன் படித்தவர். நல்ல பதவியில் இருப்பவர்தான்! ஆனால் பரம சாது. பொறுமையும் சகிப்புத் தன்மையும் தங்கை மஞ்சுளாவைப் போன்றே அவரிடமும் விரவிக் கிடந்தன.

கணவரைப் பறி கொடுத்துவிட்டு ஏழு மாத கர்ப்பிணியாய் அண்ணனிடம் அடைக்கலம் புகுந்தவள் மஞ்சுளா. நாத்தனார் நாதியற்று நிர்க்கதியாய் வந்து நிற்கிறாளே என்று துளியளவு கூட கற்பகத்திற்கு ஈரம் சுரக்கவில்லை.

வீட்டு வேலைகள் அனைத்தையும் இழுத்துப்போட்டு செய்தும் மஞ்சுளாவுக்கு அண்ணியின் அன்பு கடைசி வரை கிட்டவே இல்லை. கண்டபோதெல்லாம் கரித்துக் கொட்டிக் கொண்டு தான் இருந்தாள்.

குழந்தை பிறந்து உடம்பு தேறியதும் பக்கத்தில் உள்ள பள்ளியில் டான்ஸ் டீச்சராக வேலைக்குச் சேர்ந்தாள் மஞ்சுளா. மாலையில் வீடு திரும்பியதும் அக்கம் பக்கத்தில் உள்ள குழந்தைகளுக்கு நடன வகுப்பு எடுத்து வருவாய் ஈட்டினாள்.

குழந்தை சாம்பவி வளர்ந்து அவளுக்கு விவரம் புரியத் தொடங்கியதும்.. மஞ்சுளா குழந்தை சாம்பவியுடன் அவுட் ஹவுஸில் தங்கத் தொடங்கினாள்.

அவுட் ஹவுஸில் தங்கினாலும் வீட்டு வேலைகள் முதல் கொண்டு சமையல் வரை கற்பகத்திற்கு சகல விதத்திலும் ஒத்தாசை செய்ய மஞ்சுளா மனம் தளரவே இல்லை.

''உம்! காதலிச்சு கல்யாணம் செய்துகிட்டே? அந்த சாமர்த்தியம் மத்ததுலேயும் இருக்க வேணாம்? தூத்தேறி! எந்த நேரத்துல உன் கழுத்துல மூணு முடிச்சு போட்டானோ.. ஒரு வருஷம் திரும்பறதுக்குள்ளே ஆக்ஸிடெண்ட்லே போய்ச் சேர்ந்துட்டான் புண்ணியவான்.

"பெரிய பணக்கார வீட்டுப் பிள்ளை ஏகப்பட்ட சொத்துக்கு ஒரே வாரிசு.. ஆளு பார்க்க ராஜகளையோட இருக்கான்னு தானே..அவனை வளைச்சுப் பிடிச்சே? அவன் போயிட்டாலும் அவன்விட்டுப் போன வாரிசு இருக்குல்ல... அந்த உரிமையைக் கையிலெடுத்துக்கிட்டு அங்க போயி உட்கார்ந்துகிட்டு அதிகாரம் பண்ணி ஆண்டு அனுபவிக்கிறதை விட்டுட்டு.. இங்க உங்க அண்ணனோட கழுத்தைக் கட்டிக்கிட்டு நீயும் உன் மகளுமா தொங்கறீங்களே.. இது அடுக்குமா? உங்க பாரத்தைச் சேர்த்து இழுத்து இழுத்து எங்களுக்கு நாக்குத் தள்ளிப்போயிடுச்சு. உனக்கு அப்படியென்ன ஒரு வைராக்கியம்? நான் தெரியாம தான் கேட்கறேன்.

"உனக்கு பாத்தியதைப் பட்ட சொத்து அது. அதை அனுபவிக்கிறதை விட்டுட்டு.. உழைச்சு தின்னாத்தான் உடம்புல ஒட்டும்னு வியாக்கியானம் பேசறியே? உனக்கு புத்தி கித்தி மழுங்கிப் போச்சா மஞ்சுளா?"

கற்பகத்திற்கு வெண்கலத் தொண்டை! எட்டு ஊருக்கும் கேட்கும்படி உச்சஸ்தாயியில் தான் கத்திப்பேசுவாள். அவள் எத்தனை தான் கத்தினாலும் கர்ஜித்தாலும்... மஞ்சுளா மறுபேச்சு பேசவே மாட்டாள்.

மஞ்சுளா பொறுமையின் சிகரமாக அமைதி காத்தாலும்.. அவளையும் மீறி அவளது கண்களில் கண்ணீர் 'குபுக்' என்று ஊற்றெடுக்கும்.

தாய் மஞ்சுளா அவமானப்பட்டு அல்லல் படுவதைக் கண்டு சாம்பவிக்கும் துக்கம் பீறிட்டுக் கொண்டு வரும்.

அதையும் மீறி அவளுக்குள் ஒரு கேள்வி அடிக்கடி முளை விடத்தான் செய்தது.



'எதற்கு இந்த அத்தையிடம் அவமானப்பட்டுக் கொண்டு வேலைக்காரியைப் போல் சேவகம் செய்து கொண்டு கஷ்டப்பட்டு சம்பாதிக்க வேண்டும்?

'கற்பகம் அத்தை கேட்பதிலும் ஒரு நியாயம் இருக்கிறதே? எல்லாவற்றையும் உதறிவிட்டு அங்கு சென்றால் என்ன? உரிமை இருந்தும் ஏன் அதை மறுக்க வேண்டும்? மறுப்பதற்கு ஏதாவது ஒரு வலுவான காரணம் இருக்க வேண்டுமே..!

'அது என்னவாக இருக்கும்?

'புரியாத புதிராகவே இருக்கிறதே..? அம்மாவின் மனதுக்குள் புதைந்து கிடக்கும் ரகசியத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

புதிருக்கு உரிய விடையை விரைவில் கண்டறிய வேண்டும். மனதுக்குள் சங்கல்பம் செய்து கொண்டு சாம்பவி சாற்றி இருந்த கதவை இலேசாகத் தட்டிவிட்டு உள்ளே நுழைந்தாள்.

"வா.. சாம்பவி! என்ன.. பிறந்த நாளா இன்னிக்கு?" புன்னகைத்த கற்பகத்தின் முகத்தில் செயற்கைத்தனம் இழையோடியது.

"ஆ.. ஆமா அத்தை" என்றபடி நமஸ்கரித்து எழுந்தவளின் புஜகத்தைப் பற்றிக் கொண்டு அவளது விழிகளை ஊடுருவிப் பார்த்தாள்.

சமீப காலமாக அத்தை கற்பகத்தின் பார்வையே சரி இல்லையே... சிறுவயதிலிருந்தே சாம்பவி கற்பகத்தின் எதிரில் வருவதற்கே தயங்குவாள். கூடுமானவரை ஒதுங்கியே தான் இருப்பாள்.

ஏனென்றால் அவளைக் கண்டாலே கற்பகத்திற்குப் பற்றிக் கொண்டு வரும். அவளிடம் வீணாக மண்டகப் படி வாங்கிக் கட்டிக் கொள்வானேன் என்ற ஆதங்கத்தில் சமயோசிதமாக நடந்து கொள்வாள் சாம்பவி.

கொஞ்சம் வளர்ந்து விவரம் புரியத் தொடங்கியதும் தான் சாம்பவிக்கு உண்மையான காரணமும் விளங்கியது.

நடேசன்-கற்பகம் தம்பதியினருக்கு ஒரே மகன்தான். மகன் கிருஷ்ணாவிற்கு பெரிய கோடீஸ்வரியைப் பார்த்து கட்டி வைக்க வேண்டும் என்று மனக்கோட்டை கட்டி இருந்தாள் கற்பகம்.

'கறிவேப்பிலைக் கொத்து மாதிரி ஒரே புள்ளையைப் பெத்து வச்சிருக்கேன். இந்த சாம்பவி மூக்கும் முழியுமா களையா இருக்காளே..? அத்தை மகளின் பேரில் கிருஷ்ணாவுக்கு காதல் வந்துவிட்டால்..? இவளைத்தான் கட்டிக்குவேன்னு ஒத்தைக் காலில் நின்றுவிட்டால்..?'

தனது ஆசையில் சாம்பவி மண்ணள்ளிப் போட்டு விடுவாளோ என்று உள்ளூர சதா திகில் தான்!

அதே கற்பகம் தான் இப்போது தலைகீழாக மாறி விட் டிருந்தாள். மருமகளின் அழகை ஆசை தீரப் பார்த்தாள்.

''இந்தா.. இதை என் பரிசா வச்சுக்கோ!'' வெள்ளிக் குங்குமச் சிமிழை அவளது கையில் திணித்தாள்.

''மாடியில கிருஷ்ணா இருக்கான். அவனைப் பார்த்து விட்டு வந்துடேன். நீ போறப்போ... எனக்கு இன்சுலின் இன்ஜெக்ஷன் போட்டாப் போறும். சரியா?''

மறுத்துப் பேச முடியவில்லை. சாம்பவிக்கு உடலெங் கும் சிறு நடுக்கம் பரவியது. தயக்கமாய் மாடியேறினாள். கை விரல்கள் சில்லிட்டன.



## 3

வெந்நீர் அறைக்கு அடுத்த அறையில் 'டங்'கென்ற ஓசை!

மூன்று கட்டில்கள் போடப்பட்ட அறை அது. ஒன்றில் முதியவர் ஒரு வரும், இன்னொன்றில் இளைஞன் ஒருவனும் மூன்றாவதில் நடுத்தர வயதுப் பெண்மணியும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

எதற்காக அந்த அறையில் இப்போது அமைதியைக் குலைக்கும் சப்தம்?

சாம்பவி தன் நடையை வேகமாக்கி அந்த அறைக்குள் நுழைந்தாள். நர்ஸ் உடை அவளுக்கு கச்சிதமாகப் பொருந்தி இருந்தது. கம்பீரமான தோற்றத்தைத் தந்து அவளது அழகை இன்னும் தூக்கிக் காண்பித்தது.

முதியவரின் முகத்தில் கோபம் தாண்டவமாடிக் கொண் டிருந்தது. அருகில் அவரது மனைவி நடுக்கத்துடன் நின்று கொண்டிருந்தாள்.

''என்னாச்சு?''

''ஒ.. ஒண்ணுமில்லே சிஸ்டர்'' கணவனும் மனை வியும் ஒரு சேர பதட்டத்துடன் பதிலளித்தனர்.

ஆனால் கீழே விழுந்திருந்த தட்டு இன்னமும் ஒரு நிலைக்கு வராமல் அதிர்வுகளை வெளிப்படுத்திக் கொண்டு வேறு கதையைச் சொன்னது. அதிலிருந்த மூன்று சப்பாத்திகளும் மூலைக்கொன்றாய் சிதறியிருந் ததைப் பார்த்தபோது சாம்பவிக்கு சர்வமும் புரிபட்டது.

''என்னம்மா, காரசாரமா ஏதாவது சாப்பிடணும்னு அடம்பிடிச்சு தட்டை வீசி எறிந்தாரா?'' என்ற சாம்பவி யின் கேள்விக்கு தலைகுனிந்தாள் அந்த முதியவள்.

''சப்பாத்தின்னீங்க ஒத்துக்கிட்டேன். உப்பு குறைஞ்ச சாப்பாடு தான் சாப்பிடணும்னீங்க. அதுக்கும் சரின்னேன். ஆனா.. ஆனா.. ஊறுகாய் கூட கண்ணிலே காமிக்க மாட்டேன்னா எப்படி? நாக்கு செத்துப் போச்சு தெரியுமா?'' என்றார் உறுமலாக.

இதுவரை நாக்கைக் கட்டுப்படுத்தாமலேயே வாழ்ந்து விட்டவர். உயர் ரத்த அழுத்தம் ஏற்பட்டு, 210-ஐ தாண்டி இடது காலும் கையும் வேகமாக அடித்துக் கொள்ளும் நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர். மேலும் தாமதமாயிருந்தால் பக்கவாதத்தில் இழுத்து விட்டிருக்கும். இப்போது சற்று குணமான தெம்பில் அவரது நாக்கு ருசிக்கு அலைகிறது.

''ஊறுகாய் தானே? நீங்க தாராளமா சாப்பிடலாமே சார்! ஏன், ஊறுகாய்க்குக் கூட சாதத்தைத் தொட்டுக்கலாம். என்ன, ரத்த அழுத்தம் எகிறும். தலை சுத்தும். மிஞ்சிப் போனா... மாரடைப்பு வரும். அவ்வளவு தானே? உடனே இங்கே வந்தீங்கன்னா.. நாங்க பிழைக்க வைக்கப் போராட மாட்டோமா என்ன?''

சாம்பவியின் அதிர்ச்சி வைத்தியத்தில் அந்த முதிய வரின் முகம் பேயறைந்தது போலாகிவிட்டது. அவளுக்குத் தெரியும். இது போன்ற நபர்கள் குழந்தையைப் போன்ற வர்கள். 'குழந்தைப் பருவத்தில் இறைவனிடம் பயபக்தி இருக்கும். நாளடைவில் பயம் மறைந்துபோய் பக்தி மட்டுமே தங்கும் என்பார்கள்.

'அதுபோல இது போன்றவர்களிடம் முதலில் தவறான பழக்கத்தால் உண்டாகக்கூடிய விளைவுகளைப் பற்றிச் சற்றாவது கிலியை ஊட்ட வேண்டும். பிறகு விளக்கிச் சொன்னால் அவர்கள் மனத்தில் அது பதியும்.'



''கவலைப்படாதீங்க! உங்களுக்கு அப்படி எதுவும் ஆகாது. ஏன்னா நீங்க உணவில் கட்டுப்பாடோடு தானே இருக்கப் போறீங்க? உங்க உடம்பைப் பற்றி எங்களை விட உங்களுக்குத் தானே அக்கறை அதிகமாக இருக்கும்? சார்.. இரத்த அழுத்தம்னா என்ன தெரியுமா? அது எப்படி இதயத்தைப் பாதிக்கும்னு தெரியுமா? இப்ப உங்க விஷயத்தையே எடுத்துக்குவோம்.''

சாம்பவி எளிய முறையில் விவரிக்க, அந்த முதிய வரும் .அவரது மனைவியும் சுவாரசியமாக அதைக் கேட்கத் தொடங்கினர்.

அதே அறையின் மற்றொரு கட்டிலில் படுத்துக் கொண்டிருந்த இளைஞனும் அதை உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டிருந்தான் என்பது பிறகு புரிந்தது.

''என்ன மிஸ்டர் ராகவ்? பெயின் எதுவும் இல்லையே?''

''நோ நோ! பை தி வே, உங்க இரத்த அழுத்த லெக்சர் பிரமாதம் சிஸ்டர்'' என்றான் புன்முறுவல் பூத்தபடி!

உற்சாகமான இளைஞன். மாவட்ட அளவில் டேபிள் டென்னிஸ் விளையாடுமளவுக்கு வல்லவன். ஹெர்னி யாவுக்காக சிகிச்சைக்கு சேர்ந்திருந்தான். நேற்றே ஆபரேஷன் வெற்றிகரமாக முடிந்து விட்டது. நாளைக்கு டிஸ்சார்ஜ் செய்யப்பட்டு விடுவான்.

''சிஸ்டர்! உங்ககிட்டே எனக்கு மூணு விஷயம் பிடிச் சிருக்கு. ஒண்ணு, உங்களுடைய கடமை உணர்ச்சி, இன்னொன்னு நோயாளிகளை அவங்கவங்களுக்குத் தகுந்த மாதிரி டீல் செய்யும் சாமர்த்தியம். மூணாவது உங்க சுறுசுறுப்பு.. சும்மா வண்டு சுத்தின மாதிரி வந்து வந்து பார்த்து விசாரிக்கிறீங்க.''

'இதெல்லாம் என்னோட கடமை தானே?' என்ற அர்த்தம் பொதிந்த புன்னகையை சிந்தி விட்டு நகர்ந்தாள் சாம்பவி.

அறை வாசலருகே... காரிடாரில் சீஃப் டாக்டர் மகாதேவன் உதவி மருத்துவருடன் நின்று கொண்டிருந்தார்.

அதுவரை நின்று நிதானித்து இவளையே கவனித்துக் கொண்டிருந்தார்கள் போலும்! சாம்பவி திரும்பி அவர்களை ஏறிட்டதும் முறுவலித்து விட்டு ஷூக்கள் சப்திக்க நடக்கத் தொடங்கினார்கள்.

சீஃப் டாக்டர் மகாதேவனின் வலப்புறமாக மெதுவாக நடந்தவன் - ஆறடி உயரத்தில் ஆஜானுபாகுவான தோற்றத்தில் சபாரி சூட்டில் இருந்தவன் - இவளை விழுங்கி விடுவது போல பார்த்துக் கொண்டிருந்தான்.

அதிர்ச்சியும் ஆச்சரியம் கலந்த உணர்வும் தான் முகத்தில் ததும்பி நின்றது.

கால்கள் பூமியை விட்டுப் பெயர மறுத்து விட்ட தினுசில்... அரை மனதோடு தான் அவன் மெல்ல அகன்று செல்வதைப் போலிருந்தது.

'யாராக இருக்கும்? சீஃப் டாக்டருக்கு மிகவும் வேண்டப்பட்டவராக இருக்குமோ? இவரும் ஒரு டாக்டராகத் தான் இருக்க வேண்டும்! என்னை ஏன் அப்படிப் பார்க்க வேண்டும்?'

புத்தி குறுகுறுத்தது. இவளைக் கேள்வி கேட்டு திணறடித்தது.

மனதைத் தட்டி அடக்கினாள் சாம்பவி.

‘‘ஷி இஸ் சாம்பவி. ஸச் எ டேலண்டட் கேர்ள்.. யூ நோ!’’ டாக்டர் மகாதேவன் இவளைப் பற்றிப் பெருமிதமாக



கூறுவது, சன்னமாக இவளது காதுகளில் விழத்தான் செய்தது.

‘‘இஸிட்?’’ என்றவன் மீண்டும் ஒரு முறை அவளது முகத்தில் தனது பார்வையைப் பதித்தான். அவனது இதழ்க்கடையில் ஒரு குட்டி முறுவல் பூத்திருந்தது.

கட்டுக்கடங்கா ஆவலும் ஆச்சரியமும் போட்டி போட்டுக் கொண்டு அவனைப் பந்தாடின.

மகாதேவனின் தோளை உரசியபடி நடந்து கொண்டே குனிந்து மெல்லிய குரலில் ஏதோ கேட்கவும் செய்தான்.

தாடையை இலேசாகத் தடவிக் கொண்டே அவர் ஏதோ பதிலளிப்பதும் தெரிந்தது. அவ்வளவுதான்! மூவரும் சீஃப் டாக்டரின் அறைக்குள் புகுந்து கொண்டனர்.

யோசனையுடன் வெளி நோயாளிகள் பிரிவிற்குச் சென்றாள். அடுத்தடுத்து வேலைகள் காத்துக் கொண்டிருந்தது. வேலை மும்முரத்தில் எதையும் நினைத்துப் பார்க்க அவளுக்கு நேரமில்லை.

சாம்பவி எப்போதும் அப்படித்தான்! வேலையில் முழு கவனம் செலுத்தி அக்கறையாக உழைப்பவள். நோயாளிகளை அன்புடனும் கரிசனத்துடனும், அக்கறையுடனும் கவனிக்கும் தருணங்களில்.. வீடு, அம்மா மற்றும் தன்னையே மறந்து விடுவாள் என்பது நிஜம்.

அன்று மதியம் இரண்டே முக்காலுக்கு மேல் தான் அவளுக்கு சாப்பிட நேரமே கிடைத்தது.

ஹேண்ட் பாக்கில் இருந்த டிபன் பாக்ஸைத் திறந்தாள். குப்பென்று வெஜிடபிள் பிரியாணியின் வாசம் அறையை நிறைந்தது.

அவளுக்கு மிகவும் பிடிக்கும் என்று வெஜிடபிள் பிரியாணி, உருளைக் கிழங்கு கறி செய்திருந்தாள்

அம்மா மஞ்சுளா. ஓரத்தில் நெய் மணக்கும் கேசரியும் இருந்தது.

சுவையும் மணமுமாக இருந்த பிரியாணியை சிறிது அள்ளி வாயில் திணித்துக் கொண்ட போது சாம்பவிக்கு திடுதிப்பென்று கிருஷ்ணாவின் ஞாபகம் வந்து தொலைத்தது.

''வா.. வா சாம்பவி! மெனி ஹேப்பி ரிடர்ன்ஸ் ஆஃப் த டே டார்லிங்... என்ன அப்படிப் பார்க்கிறே? கீழே நீ அப்பாகிட்டே பேசிக் கிட்டிருந்ததை நான் பார்த்துட்டு இருந்தேன்.''

''அத்தை உங்களைப் பார்த்துட்டு வரச் சொன்னாங்க. அதான்!''

''முன் கூட்டியே இந்த விஷயம் தெரிஞ்சிருந்தா.. உனக்கொரு நல்ல கிஃப்ட் வாங்கி வச்சிருப்பேன். எனி ஹவ் கங்கிராட்ஸ்.''

சட்டென்று அவளது கையைப் பிடித்துக் கொண்டான் கிருஷ்ணா. விடிந்ததும் விடியாததுமாக எழுந்ததும் சிகரெட் பிடிப்பான் போலும்.

குப்பென்று சிகரெட் நாத்தம் முகத்தில் மோதியது. நெருப்பு பட்டாற்போன்று சரக்கென்று கையை உருவிக் கொண்டாள் சாம்பவி.

இரண்டடி பின்னுக்கு நகர்ந்து கொண்டாள்.

''தேங்க்ஸ்! அத்தைக்கு இன்சுலின் இன்ஜெக்ஷன் போட்டுட்டு நான் ட்யூட்டிக்கு கிளம்பணும். டைமாச்சு. வரேன்.''

''என்ன சாம்பவி.. ஓடறதுலேயே குறியா இருக்கே? நான் என்ன வேத்து மனுஷனா? ஆற அமர உட்கார்ந்து



ஆசையா கொஞ்ச நேரம் பேசினா குறைஞ்சா போயிடுவே?'' பேசிக் கொண்டே பார்வையால் அவளை அளவெடுத்தபடியே கிட்டே நெருங்கினான்.

'இரவில் குடித்திருப்பான் போலும்! கண்கள் வேறு ஏகத்திற்கும் சிவந்திருக்கிறதே.'

அருவருப்பிலும், பயத்திலும் சாம்பவிக்கு உடல் பதறியது.

''எ..எனக்கு டைமாச்சு. வரேன்.''

சிட்டாய் பறந்தாள் சாம்பவி.

அத்தை மகள் என்ற நெருங்கிய உறவு. நிகரற்ற அழகி, படித்தவள் என்ற தகுதிகள் இருந்தும்.. சாம்பவியைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம், கிருஷ்ணாவிற்கு தோன்றவே இல்லை.

தாய்க்கேற்ற தனயனாக அவன் இருந்தான். அவுட் ஹவுஸில் அபலையாக நம்மை அண்டி வாழ்பவள் தானே என்ற அசட்டை ஏழை என்ற இளக்காரம்!

அம்மா கற்பகம் இரண்டு வருடங்களுக்கு முன் ஒரு கோடீஸ்வரியை வலை வீசித் தேடிப் பிடித்திருந்தாள்.

'கோடீஸ்வரிக்கு மாலையிடுகின்றோம்' என்ற மமதையில் திரிந்தவனுக்கு மற்ற எதுவும் கண்களில் படவில்லை...

ஆனால்.. இப்போது? சட்டெனக் கலைந்தாள். சல்லித்தனமான அவனது பார்வையை நினைத்துப் பார்த்துக் கோபத்தில் பற்களை நறநறத்தாள்.

திடீரென்று.. பார்வையாலேயே அவளை வருடிச் சென்ற வாலிபனின் ஞாபகம் அவளுக்குள் தலை தூக்கியது. உள்ளூர சாமரம் வீசியது போலிருந்தது. யாராக இருக்கும்? கேள்வி அவளைக் குடைந்தது.

# 4

''சிஸ்டர், எமர்ஜென்ஸி'' ரத்னச் சுருக்கமாக வார்டு பாய் அறிவிக்க, சாம்பவி துரிதமாக அவசர சிகிச்சைப் பிரிவுக்கு விரைந்தாள்.

''ப்ளீஸ், என்னை ஏமாத்திடாதேம்மா, டியர்.. ஐ லவ் யூடா, உனக்கொண்ணும் இல்லேம்மா'' என்றெல்லாம் விதவிதமாக அரற்றிக் கொண்டிருந்தான் அந்த இளம் கணவன்.

ஸ்ட்ரெச்சரில் படுக்க வைக்கப்பட்டிருந்த அவனது மனைவிக்கு உடல் வியர்த்திருந்தது. எழுந்து உட்கார முயற்சி செய்த அவள் முகத்தில் சில மாறுதல்கள்.

''சிஸ்டர், அவங்களுக்கு வாந்தி வருதுன்னு நினைக்கிறேன். அந்த 'ஸ்பிட் ட்ரே'யை எடுங்க'' என்றாள் சாம்பவி.

சக நர்ஸ் வாணி சட்டென்று அந்த ட்ரேயை எடுத்து நீட்டினாள்.

சாம்பவி அனுசரணையாக 'ஸ்பிட் ட்ரே'யை அந்தப் பெண்ணின் வாயருகே நீட்டினாள்.

''இப்படி நிறைய தடவை வாந்தி எடுத்துட்டா சிஸ்டர்'' என்றவன் மீண்டும் தன் மனைவியைப் பார்த்து ''என்னம்மா செய்யுது?'' என்று அழும் குரலில் கேட்டான்.

''சார், நீங்க வெளியில இருங்க'' என்றாள் நர்ஸ் வாணி.

''பரவாயில்ல சிஸ்டர். அவர் இங்கேயே இருக்கட்டும். சார்.. நீங்க அந்த மூலையில இருக்கற சேர்லே உட்காருங்க.. எப்போலேயிருந்து அவங்களுக்கு வாந்தியும், வியர்த்துக் கொட்டலும்?''

பேசிக்கொண்டே சாம்பவி ரத்த அழுத்தத்தைச் சோதித்தாள். பிறகு வேறு சில கேள்விகளை அந்தப் பெண்ணிடம் கேட்டாள்.



''இ.ஸி.ஜி. அறையை ரெடி பண்ணிட்டு டாக்டருக்கு ஃபோன் பண்ணிடலாமா சாம்பவி'' மெல்லிய குரலில் கேட்டாள் நர்ஸ் வாணி.

வேறு சில சோதனைகளையும் செய்து முடித்த சாம்பவி, ''அதற்கெல்லாம் இப்போ தேவையிருக்காது சிஸ்டர். கொஞ்ச நேரத்துலே வாந்தியெல்லாம் நின்னுடும்னு நினைக்கிறேன். க்ளூக்கோஸ் கொடுத்து.. இந்த மாத்திரையைக் கொடுப்போம். அரைமணி நேரம் அப்சர்வேஷனில் இருக்கட்டும். அப்புறம் அவங்களைக் கூட்டிட்டுப் போயிடலாம்.''

'ஒன்றுமில்லையா? இவ்வளவு தானா?' அந்த இளைஞனால் நம்பவே முடியவில்லை.

பொங்கிய வியர்வை என்ற ஒரே காரணத்தை வைத்துக் கொண்டு மாரடைப்பு என்ற முடிவுக்கு வந்து 'ஆஞ்சியோகிராம், பைபாஸ், தீவிர சிகிச்சைப் பிரிவு' என்று தனக்குத் தெரிந்த எல்லா இதய சிக்கல் சிகிச்சைகளையும் மனத்தில் கொண்டு வந்து பதறிக் கொண்டிருந்தான் அவன்.

பத்து நிமிடம் கழித்து அந்த இளைஞனிடம் சாம்பவி விளக்கத் தொடங்கினாள்.

''உங்க மனைவிக்கு கார்ப் பயணம் ஒத்துக்கலைன்னு நினைக்கிறேன். அதுவும் நிறைய நேரம் இன்னிக்குக் காரிலே பயணம் செய்திருக்காங்க.''

''என்ன சிஸ்டர் இது? பஸ் ஜார்னி தான் சிலருக்கு ஒத்துக்காதுன்னு கேள்விப்பட்டிருக்கேன்'' என்று அவன் வியக்க, பொறுமையாக விளக்கினாள் சாம்பவி.

''பஸ்ஸோ, கப்பலோ, ரயிலோ, காரோ அது பிரச்சனையில்லை. வேகமான பயணங்கிறது தான் முக்கியம்.

காதுக்குள்ளே நம் உடம்பை பாலன்ஸ் செய்யும் மையம் இருக்கிறது. வேகமான பயணத்தின் போது சிலருக்கு இந்த மையம் பாதிக்கப்படுது.

'உடனே அங்கேயிருக்கிற நரம்புகள் மூளையிலே இருக்கும் ஒரு குறிப்பிட்ட' பகுதியைத் தூண்டி விடுது. இதனாலே தான் வாந்தி. இந்தச் சமயத்திலே என்னவோ ஏதோன்னு பயந்து போனா.. இன்னும் காம்ப்ளிகேட் ஆயிடுது.''

''அப்ப இனிமே காரிலே போகக்கூடாதா சிஸ்டர்?'' என்று பரிதாபமாகக் கேட்டான் அவன்.

''போகலாம். ஆனால் சில முன்னெச்சரிக்கைகளை எடுத்துக்கணும்'' கூறியபடியே சாம்பவி ஒரு தாளில் தனது விளக்கத்தைப் பாயிண்டுகளாக எழுதத் தொடங்கினாள்.

''காரிலே போவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னே லேசான உணவு தான் சாப்பிடணும். பயணத்தின்போது தண்ணீர், ஜூஸ், இந்த மாதிரி திரவத்தைத்தான் குடிக்கணும். அப்பப்போ சின்ன ப்ரேக் கொடுத்து காரிலிருந்து வெளியேறி நல்ல காற்றை சுவாசிக்கணும்.

''காரிலே போகும்போது பக்கத்திலே இருக்கிற விஷயங்களை உற்றுப்பார்ப்பதை விட... ஆகாயம், மலை இந்த மாதிரி தூரத்திலே இருக்கிற காட்சிகளைப் பார்க்கப் பழகிக்கணும். காதுகளிலே பஞ்சை அடைச்சுக்கலாம். தலைக்குக் கீழே ஏதாவது துண்டையோ சின்னத் தலையணையையோ வச்சுக்கலாம்.''

அந்தத் தாளை அவனிடம் நீட்டி விட்டு சில மாத்திரைகளை எழுதிக் கொடுத்தாள்.



''இன்னும் கொஞ்ச நேரத்துல ட்யூட்டி டாக்டர் வந்துடுவாரு. டாக்டர் வந்து ஒரு பார்வை பார்த்ததும்.. நீங்க கிளம்பலாம்'' முறுவலித்தாள் சாம்பவி.

''ரொம்ப நன்றி சிஸ்டர். இப்பத்தான் எனக்கு உயிரே வந்திருக்கு. டாக்டர் வர்ற வரைக்கும் காத்திருக்கணும்னா... பயத்துலேயே ஒரு வழி ஆயிருப்பேன். நல்ல காலம்... நீங்களே ட்ரீட்மெண்ட்டை குடுத்துட்டீங்க.

''உடம்பிலே என்ன கோளாறு இருக்கு... எதனாலே இப்படி ஆச்சுன்னு அருமையா விளக்கம் குடுத்தீங்க. என்னென்ன முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்துக்கணும்னு.. விலாவாரியா பாயிண்ட் போட்டு எழுதியே குடுத்துட்டீங்க...

''ஒரு டாக்டர் கூட இந்தளவுக்கு எக்ஸ்ப்ளெயின் பண்ண மாட்டாங்க. மேலெழுந்தவாரியா சொல்லிட்டுப் போயிடுவாங்க. உங்க சின்ஸியாரிட்டியை ரொம்பவே பாராட்டுறேன் சிஸ்டர். தேங்க் யூ ஸோ மச்!''

''சாம்பவி! நான் ஒண்ணு சொல்லட்டுமா? நோயாளிகளின் உடல் பிரச்சனைகளைக் கண்டு பிடிப்பதும் அதைத் தீர்ப்பதும் தான் நம்ம வேலை'' எரிச்சலுடன் கூறினாள் நர்ஸ் வாணி.

''நான் இல்லேன்னு சொன்னேனா சிஸ்டர்?''

''அதைத் தவிர வேறெதுவும் நம்ம வேலை இல்லேன்னு சொன்னேன்.''

நர்ஸ் வாணி, சாம்பவியைக் கண்டு பொறாமையில் வெந்து கொண்டிருந்தாள். ஆறு வருடங்களுக்கும் மேலாகப் பணி புரிந்தும் அவளால் நல்ல பெயரைச் சம்பாதிக்கவே முடியவில்லை.

சமீபத்தில் தான் வேலைக்குச் சேர்ந்திருந்தாள் சாம்பவி. குறுகிய காலத்திற்குள் தலைமை மருத்துவர் முதல் நோயாளிகள் வரை அவளைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடுகின்றார்கள்.

அன்பு, திறமை, பணிவு, கடமை உணர்ச்சி போன்ற பண்புகளால் அனைவரது மனங்களையும் கட்டிப் போட்டிருந்தாள் சாம்பவி.

''புரியலே வாணி சிஸ்டர்.''

''பேஷண்ட்டுக்கு இவ்ளோ விலாவாரியா எக்ஸ்ப்ளைன் பண்ணிட்டிருக்கியே.. இது அனாவசியம்! தவிர ஏதோ மெடிக்கல் மாணவனுக்குப் பாடம் எடுக்கிற மாதிரி நீ பல நோயாளிகளிடம் நடந்துக்கிறே.''

''இரண்டு விதத்திலே நான் இதை மறுக்கிறேன் சிஸ்டர். நோயாளியின் எந்த வித மருத்துவச் சந்தேகத்தையும் போக்குவது நம்ம கடமை. சரியான சிகிச்சை கொடுத்தாலும் அது சரியான சிகிச்சைன்னு அவங்களை நம்ப வைப்பதும் முக்கியம். நோய் குணமாக மனசும் ஒரு காரணம்னு உங்களுக்கு நல்லாத் தெரியும்.''

''உன்னுடைய இன்னொரு அப்ஜெக்ஷன் என்ன?'' வெடுக்கென்று எரிச்சலுடன் கேட்டாள் நர்ஸ் வாணி.

'''கடமையே கடவுள்'னு நம்பறவ நான். என்னோட கடமையை நான் செய்யறேன். அதுலே யார் தலையிட்டாலும் எனக்குப் பிடிக்காது. நீங்க இப்படி மூக்கை நுழைக்கிறது எனக்கு சுத்தமா பிடிக்கலை.''

குரலை சிறிதும் உயர்த்தாமல், மலர்ந்த முகத்துடன் நாசுக்காக பட்டு கத்தரித்தாற் போன்று.. தனது கருத்தை ஆணித்தரமாகக் கூறிவிட்டு நடந்தாள் சாம்பவி.



காரிடாரில், நான்கடி தூரத்தில் மார்புக்குக் குறுக்கே கைகளைக் கட்டியபடி இவளை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.. அந்த சபாரி சூட் வாலிபன்!

அவனை ஏறிட்டுப் பார்த்ததும் சாம்பவிக்கு பக்கென்றிருந்தது. அவளது இதயக் கூட்டிற்குள் புறா சிறகடித்தது.

'யார் இவர்? எதற்காக என்னையே கண்காணிக்கிறார்? கிருஷ்ணா பார்க்கும் பார்வையில் 'ஒரு சல்லித்தனம்' இருக்கும். உடம்பே கூசிப் போகும்.

'ஆனால் இவரது பார்வை அப்படியல்ல! ஆச்சரியமும் ஆவலும் கண்களில் ததும்புகின்றன.

'எதையோ சொல்லத் துடிப்பது போன்ற முக பாவனை. அது என்னவாக இருக்கும்?

'இவர் அடிக்கடி என்னையே நோட்டமிடுவதைக் கண்டு.. நியாயமாக எனக்கு கோபமோ வெறுப்போ தானே ஏற்பட வேண்டும்?

'மாறாக.. இதயம் படபடக்கிறது.

'மனம் மத்தளம் வாசிக்கின்றது.

'உள்ளூர மகிழ்ச்சி நீரூற்று பொங்கி உயர்கின்றதே.. அது ஏன்?

'இதற்கு என்ன அர்த்தம்?'

கேள்விகளைச் சுமந்த வண்ணம் எண்ண அலைகள் எழும்பி மோதின.

'என்னது இது? எனக்குள் ஏனிந்த மாற்றம்?'

மனசாட்சி மணலாக உறுத்தியது. மிகப் பெரிய அதிர்ச்சி அவளுக்காக காத்துக் கொண்டிருக்கிறது என்பதை அவள் எவ்விதம் அறிவாள்?

## 5

சர்வ தேச மருத்துவ இதழைப் புரட்டிக் கொண்டிருந்தான் வசந்தன். அவன் மனம் அந்தப் புத்தகத்தில் லயிக்கவில்லை என்பது பார்க்கும் போதே தெரிந்தது.

''என்ன வசந்தன்? புத்தகத்தைத் தலைகீழாக வச்சுக்கிட்டுப் படிக்கும் கலை உனக்குத் தெரியும்னு நீ இதுவரை என்கிட்ட சொன்னதே இல்லையே?'' என்று சிரித்தபடி கேட்டார் டாக்டர் மகாதேவன்.

இலேசான திடுக்கிடலுடன் புத்தகத்தை நோட்டமிட்ட வசந்தன் சங்கோஜமாய் நிமிர்ந்தான்.

''புத்தகத்தை நேரே தான் வச்சிட்டிருக்கே. ஆனால் அதைப் பத்தின உணர்வே இல்லாததினாலே தான்.. நான் சொன்னதிலே சந்தேகம் ஏற்பட்டு அதைப் பார்த்திருக்கே. வாட் ஹாப்பண்ட் டூ யூ வசந்தன்? உன் மனசுலே ஏதோ ஒண்ணு நெருடிக்கிட்டிருக்கு.

''வசந்தன், நீ இந்த வாட்டி மருத்துவக் கருத்தரங்கத்துலே கலந்துக்கிறதுக்கு தானே.. இங்க வந்திருக்கே? உன் முகத்துலே வழக்கமா தெரியற கலகலப்பு மிஸ் ஆனதக்கு என்ன காரணம் கண்ணா? ஷல் ஐ நோ தட்?''

அவரது விழிகள் வசந்தனது நெஞ்சைத் துளைப்பது போல ஊடுருவியதைக் கண்டதும்.. தனது தயக்கத்தை உதறி மெல்ல தொண்டையைக் கனைத்து விட்டு நிமிர்ந்தான்.

டாக்டர் மகாதேவன் வசந்தனின் தந்தை விஸ்வநாதனுக்கு நெருங்கிய சிநேகிதர் மட்டுமல்ல... அவருக்கு ஒரு வகையில் தூரத்து உறவினரும் கூட!



''குன்னூர்லே.. சாம்பசிவம் எஸ்டேட்னு கேள்விப்பட்டிருக்கிங்களா அங்கிள்? அந்த சாம்பவசிவம் ரொம்ப காலத்துக்கு முன்னே மறைஞ்சுட்டார். அவரோட மனைவி பார்வதவர்த்தினி அம்மாள் தான் எல்லாத்தையும் நிர்வாகம் பண்ணிட்டிருக்காங்க. சுருக்கமா.. பார்வதம் அம்மாள்னு எல்லோரும் கூப்பிடுவாங்க..''

''என்னப்பா இது? கேள்விப்பட்டிருக்கீங்களான்னு சாதாரணமா கேட்டுட்டே? 'சாம்பசிவம் எஸ்டேட்'னா குன்னூர்லே மட்டுமில்ல.. கோத்தகிரி ஊட்டி வட்டாரத்துக்கே தெரியுமே? உங்கப்பா விஸ்வத்தைப் பார்க்க.. நா எத்தன வாட்டி அங்க வந்திருக்கேன்.

''சாம்பசிவம் ஐயாவுக்கு திரும்பின பக்கமெல்லாம் எஸ்டேட் சொந்தமா இருந்துச்சு! பெரிய மிராசுதாரர் ஆச்சே? அவர் போனதுக்கு அப்புறம்.. பார்வதம் அம்மா தான் நிர்வாகம் பண்ணிட்டிருக்கிறதா உங்கப்பா சொல்லியிருக்கான்.

''அந்த குடும்பத்துக்கே உங்கப்பா தானே வைத்தியம் பார்த்தான். ஃபேமிலி டாக்டராச்சே?''

''ஆமா அங்கிள்! 'எஸ்.எஸ். ஸ்கூல்', 'எஸ்.எஸ். காலேஜ்' 'எஸ்.எஸ். விற்பனைக் கூடம்', 'எஸ்.எஸ். மோட்டர்ஸ்'னு ஏகப்பட்ட நிறுவனங்க்ள். மறைந்த சாம்பசிவம் ஐயாவோட பேர்லே ஆரம்பிச்சிருக்காங்க...

இப்போ கடைசியா 'எஸ்.எஸ். ஹாஸ்பிடல்' கட்டிட்டு இருக்காங்க. இன்னும் மூணு மாசத்துலே கட்டட வேலைகள் முடிஞ்சிடும். ஒரு புகழ் பெற்ற மருத்துவமனையா.. 'எஸ்.எஸ். ஹாஸ்பிடலை' கொண்டு வரணும்கிறது தான்... பார்வதம் அம்மாளோட லட்சியம்!''

''புரியுது. நீயும் எம்.பி.பி.எஸ் முடிச்ச கையோட யு.எஸ்-க்கு போயி அங்கே எம்.எஸ். முடிச்சிட்டு மெரிட்டிலே தேறி வந்திருக்கே? ஃபேமிலி டாக்டரோட பையன் நீ.. நிர்வாகத்தை உன்கிட்டே ஒப்படைக்க லாம்னு இருக்காங்களா? வசந்தன்... உன்கிட்டே டேலண்ட் இருக்கு.. ஜமாய்க்க வேண்டியது தானே?''

''நோ நோ! அது ஒரு பெரிய பிரச்சனையே இல்ல அங்கிள். நா அதுக்கு தயங்கவே இல்லை. இன்னிக்கு கார்த்தால நாம்ப பார்த்தோமே.. அந்த''

''எக்ஸ்க்யூஸ் மீ சார்!'' தேன் போன்று வழிந்த குரலைக் கேட்டதும் டக்கென்று பேச்சை நிறுத்தினான் வசந்தன்.

குரலைத் தொடர்ந்து தென்றலாய் உள்ளே புகுந்தாள் சாம்பவி. அவளது ட்யூட்டி முடிந்துவிட்டது போலும். நர்ஸ் யூனிஃபார்மை களைந்துவிட்டு ஆகாய நீல வண்ணக் காட்டன் புடவைக்கு மாறி இருந்தாள்.

''வாம்மா சாம்பவி? ட்யூட்டி முடிஞ்சிடுத்தா?''

''ஆமா டாக்டர்! சிகாகோவில போன வாரம் நடந்த மருத்துவ ஆராய்ச்சி பற்றி சில விவரங்கள் கேட்டிருந் தீங்களே? ஒரு வழியா அதை 'நெட்'டிலே தேடி கண்டுபிடிச்சிட்டேன். நோட்ஸ் எடுத்து வச்சிருக்கேன். அதை உங்க கிட்டே கொடுத்துட்டுப் போலாம்னு தான் வந்தேன்.. நான் உங்களை டிஸ்டர்ப் பண்ணிட்டேனா சார்?''

புன்னகையுடன் வசந்தனையும் ஒரு முறை ஏறிட்டு விட்டு, தனது ஹேண்ட் பாக்கிலிருந்த அந்த சிறு டைரியை எடுத்து பவ்யமாய் மேஜையில் வைத்தாள் சாம்பவி.



''அப்படியெல்லாம் ஒண்ணுமில்லைம்மா! ஆங்... சொல்ல மறந்துட்டேனே? இவன் டாக்டர் வசந்தன். என் ஃபிரண்டோட சன்! எம்.எஸ்.லே மெரிட்டிலே வந்துருக் கான் அதுவும் யு.எஸ்.லே... மருத்துவ ஆராய்ச்சியிலே மிகுந்த ஈடுபாடு உண்டு. ஃப்யூச்சர்லே பெரிய ஆளா வருவான். என்னையெல்லாம் தூக்கிச் சாப்பிடுடுவான் பாரு.''

''சும்மா இருங்க அங்கிள். க்ளாட் டு மீட் யூ மிஸ். சாம்பவி! உங்களை மாதிரி திறமையான, பணிவான ட்யூட்டி கான்ஷியஸோட இருக்கிற நர்ஸை சந்திச்சதிலே.. எனக்கும் ரொம்ப சந்தோஷம் தான்.''

''தே.. தேங்க்யூ டாக்டர். ஹேப்பி டு மீட் யூ'' வசந்தன் திடுதிப்பென்று தன்னிடம் பேசுவான் என்று சாம்பவி சற்றும் எதிர்பார்க்கவில்லை என்பது அவள் இலேசாகத் திணறியதிலிருந்தே தெரிந்தது.

''தேங்க் யூ ஸோ மச் சாம்பவிம்மா. உன்கிட்டே எந்தப் பொறுப்பை ஒப்படைச்சாலும் அதை மறக்காமல் நீட்டா செய்து முடிச்சுடறே... உன்கிட்டே எனக்கு ரொம்பப் பிடிச்ச குணம் இதுதான்'' டாக்டர் மகாதேவனின் பாராட்டுக்குப் புன்னகையை பதிலாக்கினாள் சாம்பவி.

விடை பெற்றுச் செல்லும்போது சாம்பவியின் சாந்தம் தவழும் விழிகள் வசந்தனை ஒரு கணம் ஏறிட்டன.

நான்கு விழிகளும் மோதிக் கொண்டன. பார்வையில் மின்னல் வெட்டியது.

'அதே அசரடிக்கும் தாழம்பூ நிறம்.. அதே உயரம் அதே கம்பீரமான அழகு.. அதே ராஜகளை.. இது எப்படி சாத்தியம்?

'யார் இவள்? அவருக்கும் இவளுக்கும் என்ன உறவு?'

குழப்பம், வசந்தனை ஆட்டிப் படைத்து வதைத்தது.

''எதையோ சொல்ல வந்தியே வசந்தன்?'' டாக்டர். மகாதேவனின் குரல், வசந்தனின் சிந்தனையைக் கலைத்தது.

''அங்கிள்! இந்த சாம்பவி யாரு? எப்போ இங்கே வேலைக்குச் சேர்ந்தாங்க? சாம்பவியைப் பத்தி.. ஐ மீன் ஃபேமிலி பேக்ரவுண்டைப் பத்தி உங்களுக்கு ஏதாச்சும் தெரியுமா?

''இவங்களை இங்க பாத்ததிலிருந்து... ஒரே குழப்பம் தான்! 'ஷாக்'லே இருந்து இன்னும் நான் மீளவே இல்லை தெரியுமா?

''நிகு நிகுன்னு அதே உயரம்.. அதே ராஜ களை.. அச்சில வார்த்தாப்பல அதே ஜாடை.... எனக்கு ரொம்ப அதிசயமா இருக்கு அங்கிள்!.. எ.. என்ன அங்கிள் அப்படிப் பார்க்கீறங்க?''

டாக்டரின் முக மாறுதலைக் கண்டதும் அவர் வேறு விதமாகப் புரிந்து கொண்டாரோ என்று வசந்தனுக்கு சிறு சந்தேகம் தலை தூக்கியது.

இலேசான பதற்றம் அவனை வந்து தொற்றிக் கொள்ளவும் செய்தது.

''அ.. அங்கிள்! சாம்பவியோட அழகையும் திறமையும் பாத்துட்டு.. எனக்கு வேறு விதமான அபிப்பிராயம் தோணியிருக்கும்னு நெனச்சுட்டீங்களா?

''என்னோட இந்த ஆர்வத்துக்கான முதல் காரணமே பார்வதவர்த்தினி அம்மாள் தான். எங்க குடும்பத்துக்காக அவங்க நிறைய செய்திருக்காங்க. எங்க குடும்பமே அவங்களுக்கு கடன் பட்டிருக்குன்னு சொல்லலாம். உங்களுக்குகே இது தெரியுமே அங்கிள்?



''இந்தப் பொண்ணு சாம்பவி.. அச்சு அசலா அவங்க மாதிரியே இருக்கா. பர்வதம் அம்மாவோட சின்ன வயசு ஃபோட்டோவை நான் பாத்திருக்கேன். ஆளுயர ஃபோட்டோவில்.. தீர்க்கமான மூக்கும் கம்பீரம் கலந்த கண்களும்.. அப்சரஸ் மாதிரி ரவி வர்மாவின் ஓவியம் மாதிரி.. அந்த ராஜகளை நம்மை அசரடிக்கும்.

''இத்தனை வயசாகியும் அந்தம்மா கிட்ட இன்னமும் அந்த கம்பீரம் குறையலை... சுறுசுறுப்பா அம்சமா வளைய வர்றாங்க. இந்த சாம்பவி பேசும்போது.. திரும்பிப் பார்க்கும்போது, நடக்கும் போதுன்னு.. ஒவ்வொரு கோணத்துலேயும் எனக்கு பர்வதம் அம்மாவையே பார்க்கற மாதிரி இருக்கு அங்கிள்!

''சாம்பவி யாரு? அவங்களுக்கும் இவளுக்கும் என்ன தொடர்பு? என்ன உறவுன்னு நான் தெரிஞ்சுக்கணும்.

''சாம்பவியோட பிறப்புல ஏதாவது மர்மம் இருந்து.. அவ நான் நெனச்ச மாதிரி எஸ்.எஸ். ஐயாவோட வாரிசா இருந்தா.. இவளை எப்படியாவது அங்கே கொண்டு சேர்க்கணும். அது என்னோட கடமைன்னு நான் நெனக்கிறேன் அங்கிள்.

''ஏன்னா.. அந்த ராஜ வம்சத்துக்கு வாரிசு வேணும்னு பர்வதம் அம்மா தன்னோட ஒண்ணு விட்ட தங்கையின் குடும்பத்தை கூடவே வச்சிருக்காங்க. அவங்க பேரனைத் தான் தன்னோட வாரிசா கொண்டு வரப்போறாங்கன்னு.. கேள்விப்பட்டேன். எனக்குத் தெரிஞ்சவரைக்கும்.. அவங்க சொத்துக்கு குறி வைச்சுத்தான் பர்வதம் அம்மாவைச் சுத்திச் சுத்தி வர்றாங்கன்னு தோணுது.

''அவங்களைப் பார்த்ததுமே எனக்கு நல்ல அபிப்ராயம் தோணலை. அந்திம காலத்துலே பாவம்... கண்டவங்

பார்வதம் அம்மா களை நம்பி ஏமாந்து போறாங்களோன்னு.. பார்வதம் அம்மா மேல இரக்கம் தான் உண்டாச்சு!

''சரி, நாம்ப சாம்பவி விஷயத்துக்கு வருவோம். அவளைப் பத்தி சொல்லுங்க அங்கிள்?''

அவனது ஆர்வத்தையும், பதட்டத்தையும் புரிந்து கொண்ட தினுசில் மெல்ல தலையாட்டிக் கொண்டார் மகாதேவன்.

''வெல்டன் மை பாய்! ஒரு ஃபேமிலி டாக்டரா இருந்தும்.. அந்தக் குடும்பத்து மேல நீ வச்சிருக்கற மரியாதை, விஸ்வாசம்.. இதெல்லாம் பிரமிக்க வைக்குது. எஸ்.எஸ். ஐயாவோட அத்தனை சொத்தும்.. உண்மை யான வாரிசைப் போய்ச் சேரணும்கிற அக்கறையைப் பாராட்டியே ஆகணும்.

''யார் எக்கேடு கெட்டாலும் எனக்கென்னன்னு சுய நலமா போயிட்டிருக்கிற இந்தக் காலத்துல.. அடுத்தவங்க நலன்லே அக்கறை எடுத்து மெனக்கெடணும்னு நெனக் கிறே பார்.. நீ நல்லா வருவே வசந்தன்!

''உம்! எனக்குத் தெரிஞ்ச வரைக்கும் சாம்பவி, அவங் கம்மாவுக்கு ஒரே பொண்ணுதான்! அவங்க ஒரு டான்சர். டான்ஸ் டீச்சரா ஒரு ஸ்கூல்லே வேலை பார்த்திருக்காங்க. பாரம்பரியமான நடனக்கலையை தன்னோட பொண் ணுக்கும் கத்துக் குடுத்திருக்காங்க.

''சாம்பவியும் ஒரு டான்சர்தான். அரங்கேற்றம் பண்ணி இருக்கா. டைம் கிடைக்கற சமயத்துல அக்கம் பக்கம் இருக்கற குழந்தைகளுக்கு டான்ஸ் கத்துக் குடுக்கறா...

''வீடு.. அவங்க தாய் மாமாவோட அவுட் ஹவுஸிலே தான் தங்கி இருக்காங்க.. இத்தனை காலமும் தாய்



மாமாவோட சப்போர்ட்லே தான் இருந்துட்டு வர்றாங்க. அவ்ளோ தான் எனக்குத் தெரியும்.

''இதெல்லாம் சாம்பவி ஒருநாள் என்கிட்டே மனசு விட்டுப் பேசிட்டிருக்கும்போது.. சொன்ன விவரங்கள், போதுமா வசந்தன்?

''போதாது அங்கிள். நான் சாம்பவியோட தாயாரைச் சந்திக்கணும். அவ அட்ரஸ் வேணும். நாளைக்கே போய் பார்க்கணும்!''

வசந்தனது குரலில் உறுதி தொனித்தது.

## 6

சாம்பவிக்கு உள்ளுக்குள் உதறல் எடுத்தது.

''சாப்பிட்டுப் பாரேன்! உனக்காகத் தான் பாதாம் அல்வா செய்திருக்கேன்'' கற்பகத்தின் குரலில் பாசமும் பரிவும் ஏகத்திற்கும் வழிந்தோடின.

தட்டிலிருந்த பாதாம் அல்வாவை ஸ்பூனால் சிறிது அள்ளி எடுத்து வாய்க்குள் திணித்துக் கொண்டாள் சாம்பவி.

''நல்லாயிருக்குல்ல? கிருஷ்ணா உனக்காக ஏதோ கிஃப்ட் வாங்கி வச்சிருக்கான். கார்த்தால தான் நீ அவசரமா ஓடிட்டியே? குழந்தைக்கு என் கையால ஸ்வீட் செய்து வைக்கணும்னு ஆசை... உடம்பு படுத்தினதைக் கூடப் பொருட்படுத்தாம செய்தேன்.''

''ந.. நல்லாயிருக்கு அத்தே! உடம்புக்கு முடியாதவங்க நீங்க... என்னத்துக்கு உடம்பை அலட்டிக்கிறீங்க..? நான் என்ன வேத்து மனுஷியா?''

''வேத்து மனுஷியான்னு கேட்டே பாரு.. எனக்கு மனசு நிறைஞ்சு போச்சு சாம்பவி. இந்த நெனப்பு எப்பவும் உனக்கு இருக்கும்னு நம்பறேன்'' பூடகமாகப் பேசி விட்டு சிரித்தாள் கற்பகம்.

'அம்மாவும் மகனுமாய் போட்டி போட்டுக் கொண்டு பாசமழை பொழிகிறார்களே? என்னவாக இருக்கும்? சோழியன் குடுமி சும்மா ஆடுமா?'

'ஏதோ வேட்டு வைக்கக் காத்திருக்கிறார்கள் என்பது மட்டும் நன்கு புரிந்தது. பாதாம் அல்வா வெறுப்பின் மிகுதியில் அவளுக்கு எட்டிக் காயாக கசந்து தொலைத்தது.

''ஸ்வீட் சாப்பிட்டுட்டு கிருஷ்ணாவைப் பாத்துட்டு வந்துடு. என்ன?''

அதற்கு மேல் பாதாம் அல்வா அவளுக்கு இறங்கவே இல்லை. தொண்டைக்குள் சிக்கிக் கொண்டது போன்ற அவஸ்தையில் தவித்துப் போனாள்.

கற்பகத்திடம் மறுத்துப் பேசி விட முடியுமா?

''சரிங்க அத்தே'' மிடறு விழுங்கினாள் சாம்பவி.

தன் விதியை நொந்தபடியே மாடியேறினாள்.

''வா.. வா சாம்பவி! உனக்காகத்தான் ஆவலா காத்திட்டிருக்கேன் உட்கார்... ப்ளீஸ் உட்காரேன்.''

அகம்பாவமும் அலட்சியமுமாய் இவளைப் புழுவைப் பார்ப்பது போன்று ஏறிட்டுச் சென்றவன் தான் இந்த கிருஷ்ணா.

இப்போதோ லிட்டர் கணக்கில் அசடு வழிந்து கொண்டிருக்கிறானே?

கோடீஸ்வரி கிடைத்தால் போதும் என்று கண்களை மூடிக் கொண்டு கறுப்பாய் குண்டாய் ரோடு ரோலர்



சைஸில் இருந்த அருந்ததிக்கு தாலி கட்டினான் கிருஷ்ணா.

கோடீஸ்வரி அருந்ததி தனது அருமை மனைவி ஆகி விட்டாள் என்ற பெருமிதத்தில் கிருஷ்ணா அந்தரத்தில் மிதந்து கொண்டு இருந்தான்.

நாளாக ஆக தனது அபரிமிதமான அழகுக்கு அருந்ததி நிகரில்லையே என்ற எண்ணம் அவனுக்குள் முளை விடத் தொடங்கி விட்டது.

இருவருக்கும் மனக்கசப்பு வளரத் தொடங்கியது என்று சாம்பவி கேள்விப்பட்டாள்.

அருந்ததி கர்ப்பமாக இருக்கிறாள் என்று செய்தி அவளுக்கு எட்டியபோது உண்மையில் சாம்பவியின் மனதில் சிறு நிம்மதி பரவியது நிஜம்.

ஆனால் பிரசவம் நெருங்க நெருங்க அருந்ததிக்கு பி.பி. எகிறி விட்டிருந்தது. ஏற்கனவே தடித்த உடம்பு வேறு இன்னமும் கூடுதலாக உப்பி விட்டிருந்தாள்.

சிசேரியன் மூலம் பெண் குழந்தையை ஈன்றெடுத்த பின் திடீரென்று அருந்ததிக்கு வலிப்பு ஏற்பட்டு விட்டது. மருத்துவர்கள் எவ்வளவோ போராடியும் அருந்ததியை எமனிடமிருந்து மீட்க முடியவில்லை.

அருந்ததி அற்பாயுசில் கண்ணை மூடுவாள் என்று யாரும் எதிர்பார்க்கவில்லைதான்! குழந்தை பிறந்து மூன்று மாதங்களாகி விட்டன. அந்த சின்ன சிசு அருந்ததியின் பெற்றோர்களின் கவனிப்பில் வளர்ந்து வருகிறது.

''உன் கிட்டே மனசு விட்டுப் பேசணும் சாம்பவி. நைட்டெல்லாம் தூக்கமே வரலை. நினைச்சாலே..

ரொம்ப ரொம்ப வேதனையா இருக்கும்மா.'' நெகிழ்ந்து பேசியபடி கிருஷ்ணா சாம்பவியின் வலது கையை இறுகப் பிடித்துக் கொண்டான்.

'மனைவியை இழந்துவிட்டான். தாயைப் பிரிந்த சின்னக் குழந்தையையும் எண்ணி வேதனைப்படுகிறான். பாவம்!' பச்சாதாபம் ஏற்பட்டது அவன் மேல்!

''எல்லாம் விதி. நம்ம கையில ஒண்ணுமே இல்ல. போனவங்களைப் பத்தியோ சதா கவலைப்பட்டு.... உங்க உடம்பைக் கெடுத்துக்காதீங்க. அருந்ததி உங்களுக்கு அழகான பெண் குழந்தையை விட்டுட்டுப் போய் இருக்காங்க.

''அதை நல்லபடியா வளர்த்து ஆளாக்கணும்கிற வைராக்கியத்தோட நீங்க வாழப் பழகிக்கணும்'' ஆறுதல் சொன்னாள் சாம்பவி.

''ப்ச்! நா ஒண்ணும் அதைப் பத்தி வேதனைப்படலை. நான் அருந்ததியைக் கல்யாணமே செய்திருக்கக் கூடாது. ஆரம்பத்துலேயே என் மனசைத் தொட்டவ நீ தான். முறைப் பொண்ணு நீ.. அம்மாகிட்டே அடம் பண்ணி உன் கழுத்துலே தாலி கட்டியிருக்கணும்.

''காலம் கடந்த பின்னாடி தான் ஞானோதயம் பிறந்திருக்கு. என் அழகுக்கும், அறிவுக்கும், திறமைக்கும் ஏத்தவ நீ தான் சாம்பவி! என்னைக்கும் நீ தான். எனக்கு நீ மனைவியாகணும்.

''என் குழந்தைக்கு நீ தாயாகணும். அவளை நல்ல படியா வளர்க்கணும். எ..எனக்கு நீ வேணும் சாம்பவி. நா ஆரம்பிச்ச சாஃப்ட் வேர் கம்பெனி ஓஹோன்னு வளர்ந்து லட்ச லட்சமா லாபம் வருது.



''ஆனா மனசுல சந்தோஷம் இல்ல. எனக்கு நீ கிடைச்சா.. நான் ரொம்ப சந்தோஷமா இருப்பேன் சாம்பவி! நீ வேலைக்குப் போறது எனக்கு சுத்தமா பிடிக்கலை. ரிசைன் பண்ணிடு.

''நீ மட்டும் 'உம்'னு ஒரு வார்த்தை சொல்லு. நாளைக்குக் கார்த்தாலயே தாலி கட்டிடறேன். என்னையும் குழந்தையையும் கவனிச்சுகிட்டு ராணி மாதிரி இரு.

''இந்தா.. என்னோட அன்புப் பரிசு'' என்றபடி வைரக்கல் பதித்த மோதிரத்தை எடுத்து அவளது விரலில் அணிவிக்க முற்பட்டான் கிருஷ்ணா.

படக்கென்று கையை உருவிக் கொண்டாள் சாம்பவி.

'ச்சீ! இவனெல்லாம் ஒரு மனிதனா? மனைவியை இழந்த துக்கத்தில் வேதனைப்படுகிறான் என்று நினைத்தேனே? மனைவியைப் புதைத்த இடத்தில் இன்னமும் புல் கூட முளைத்திருக்காது.. அதற்குள் புது மனைவி மூலம் சுகம் தேட நினைக்கிறானே? சுயநலப் பிசாசு!

'இதற்குத் தான் அம்மாவும் மகனுமாய் பாசமாய் இருப்பதாகப் பாசாங்கு செய்கிறார்களோ?

'என்னைக் கிள்ளுக் கீரை என்று நினைத்து விட்டார்களே!'

விருட்டென்று எழுந்து நின்றாள் சாம்பவி.

''ப்ளீஸ் கிருஷ்ணா! எனக்கு எதுவும் வேணாம். என் விருப்பம் என்னன்னு கூடக் கேட்காம நீங்க பாட்டுக்கு உங்க முடிவைச் சொல்லிட்டீங்க. நான் இப்போ கல்யாணம் செய்துக்கிடற மனநிலையில இல்லை.''

''அந்த பச்சைக் குழந்தை தாயன்புக்காக ஏங்குதே.. நீ ஒரு நர்ஸ். அதை மனசுலே நினைச்சுக்கிட்டாவது.. என்னை ஏத்துக்கலாம் இல்லையா?''

''இல்லை. எனக்கு இதுல உடன்பாடு இல்லை. மன்னிச்சுடுங்க கிருஷ்ணா. நீங்க வேற நல்ல பெண்ணா பார்த்து கல்யாணம் செய்துக்கோங்க.''

''நோ சாம்பவி! இன்னொரு வாட்டி நான் உன்னை மிஸ் பண்ணவே மாட்டேன். அட் எனி காஸ்ட், உன்னை மனைவியா அடைஞ்சே தீருவேன்'' வெறி பிடித்த தினுசில் பேசியபடி சட்டென்று அவளது தோளைப் பற்றினான்.

'இவனது வெறியையும் வேகத்தையும் பார்த்தால் இவன் எந்த எல்லைக்கும் போவான் போலிருக்கின்றதே.'

முழு பலத்தையும் திரட்டி அவனைத் தள்ளிவிட்டு விருட்டென்று வெளியில் ஓடினாள் சாம்பவி.

ஹாலிலிருந்த கற்பகம் ஏதோ பேச முன்வந்தபோது கூட அவள் நிற்கவே இல்லை. அவுட் ஹவுஸில் புகுந்து கதவைச் சாத்திக் கொண்டவளுக்கு மூச்சிரைத்தது.

அம்மா மஞ்சுளா பக்கத்திலிருந்த கோவிலுக்குச் சென்று விட்டிருந்தாள். 'ச்சே! அபலையாக நாதியற்று இவர்களை அண்டி இருப்பதால் தானே.. கிருஷ்ணா வுக்கும் கற்பகத்திற்கும் இத்தனை துணிச்சல் வந்திருக் கிறது?'

சுய பச்சாதாபம் மனதின் ரணத்தை இன்னமும் கீறிக் கிளறி விட.... அவளுக்கு அழுகை முட்டிக் கொண்டு வந்தது. ஹேண்ட் பாக்கிலிருந்த 'செல்' கிணுகிணுத்தது. 'ஆன்' செய்தாள்.

''நானே தான் சாம்பவி! இனி எங்கிட்டேயிருந்து நீ தப்பவே முடியாது. இந்த உலகத்துலே நீ எங்கே ஓடி ஒளிஞ்சாலும் சரி.. என் பார்வையிலிருந்து தப்ப முடியாது. தெரிஞ்சுக்கோ.''



கர்ஜித்தான் கிருஷ்ணா.

சாம்பவியின் அடிவயிற்றில் ஒரு பயப்பந்து வேகமாய் உருண்டது.

# 7

சாம்பவியின் இதயத் துடிப்பு பயத்தில் ஏகத்திற்கும் எகிறத் தொடங்கியது.

''சரின்னு ஒரு வார்த்தையில.. உன்னோட சம்மதத்தைத் தெரிவிச்சுட்டா உனக்கு கவுரவம்! என்னைத் தள்ளி விட்டுட்டு ஓடினே.. பாரு! என் நெஞ்சு திகுதிகுன்னு எரியுது. என்னையா வேண்டாம்னு நிராகரிச்சுட்டு ஓடறே?

''எனக்கென்னடி குறைச்சல்? அழகில்லையா? அறிவில்லையா? லட்ச லட்சமா கை நிறைய சம்பாதிக்கலையா? நீ சம்மதிக்க மறுத்துட்டா என்ன நடக்கும் தெரியுமா சாம்பவி?

''நீயே கதறிட்டு என் கால்லே விழுந்து கெஞ்சுவே! வேற யாரும் உன் கழுத்துலே தாலி கட்ட முடியாதபடி.. ஐ மீன் எந்த லெவலுக்கும் நான் இறங்கிடுவேன். புரியலையா?

''உன்னை சூறையாடவும் நான் தயங்க மாட்டேன். வீணா சீன் க்ரியேட் பண்ண மாட்டேன்னு நம்பறேன். நல்ல பதிலா சொல்லிடு என்ன?''

விக்கித்து நின்று விட்டாள் சாம்பவி.

பொங்கி வந்த விம்மலை அடக்கிய வண்ணம் சுவரில் சாய்ந்து நின்றிருந்தவள்.. கையாலாகாதவளாய் விரக்தி மேலிட அப்படியே சரிந்து தரையில் அமர்ந்தாள்.

'என்ன செய்யப் போகிறேன் நான்?'

குழப்பத்தில் தத்தளித்தாள்.

'டொக்.. டொக்'

"யா... யாரது?" திகிலுடன் குரல் கொடுத்தாள் சாம்பவி.

"நான் தான் சாம்பவி!"

அம்மா மஞ்சுளாவின் மெல்லிய குரலைக் கேட்டதும் பெருமூச்செறிந்தபடி கதவைத் திறந்தாள் சாம்பவி.

"என்னடா, முகமெல்லாம் வாட்டமா இருக்கு? ஏன் இப்படி வேர்த்துக் கொட்டுது.. என்னது இது? லைட் போடாம ஃபேன் போட்டுக்காம இருட்டுல உட்கார்ந்துட்டிருக்கே?"

மகளின் முகத்தில் பூத்திருந்த வியர்வையை தனது சேலைத் தலைப்பால் ஒற்றியபடியே கேட்டாள் மஞ்சுளா.

"ஏம்மா? நான் எத்தன வாட்டி சொல்லியிருக்கேன்? பேசாம நாம்ப தூரமா ஒரு வீட்டைப் பாத்துட்டு குடி போயிருவோம். இந்த கற்பகம் அத்தை கிட்டே ஏச்சு பேச்சு வாங்காம நிம்மதியா கஞ்சி குடிக்கலாம்னு படிச்சு படிச்சு சொன்னேனே கேட்டியா?

"இங்க இருக்கறது தான் நமக்கு பாதுகாப்பு. ஒரு பெண்ணப் பெத்து வச்சிருக்கேன். ஆம்பளைத் துணையில்லாம நாம்ப தனியா இருந்தா.. வெறும் வாயை மெல்லுறவங்களுக்கு அவல் கிடைச்ச மாதிரியாயிடும். கண்டபடி பேசுவாங்க.

"அதனாலதான் அண்ணன் குடும்பத்தோட அண்டி இருக்கேன்'னு சொல்லி... என்னை வாயை அடைச்சிடுவியே... இப்ப பாரு முதலுக்கே மோசம் வந்திருச்சு!"

தழுதழுத்தாள் சாம்பவி.

"எ... என்னாச்சு சாம்பவி?" மஞ்சுளாவின் பெற்ற வயிறு பதறியது.



தேம்பிக் கொண்டே கூறி முடித்தாள் சாம்பவி.

தேற்றும் வழி தெரியாமல் திகிலில் விழித்துக் கொண்டு நின்றாள் மஞ்சுளா.

அண்ணி கற்பகம் ராட்சசி தான். ராங்கிக்காரி தான். அவளுக்குத் தப்பாமல் பிறந்திருந்தான் கிருஷ்ணா.

இந்தப் படுபாவி என்னவெல்லாம்கொடுமை செய்தானோ அந்த அருந்ததி.. பாவம் வாழும் வயதில் போய்ச் சேர்ந்து விட்டாளே?'

என்ற எண்ணம் தான் மஞ்சுளாவுக்குள் அடிக்கடி எழும்பும்.

சாம்பவியைப் பூப்போல் வளர்த்தேனே? அவள் மென்மையான இதயம் படைத்தவளாயிற்றே? கிளியை வளர்த்துப் பூனையின் கையில் கொடுத்தது போலாகி விடுமே?

'இது நாள் வரை உனக்கு அடைக்கலம் கொடுத்தோமே? அதற்கு கைம்மாறாக உன் மகளை என் மகனுக்கு இரண்டாம் தாரமாக கட்டி வைக்க வேண்டும்' என்று அண்ணி கற்பகம் கொஞ்சமும் தயக்கமின்றி உத்தரவிடத் தான் போகின்றாள்.

"அம்மா! இப்பவாவது என்னண்ட மறைக்காம சொல்லக் கூடாதா? அப்பா வசதி படைச்சவருன்னு கேள்விப் பட்டிருக்கேன். அவர் பக்கம் நமக்கு சொந்தக்காரங்க இருக்காங்களா? கற்பகம் அத்தை கிட்டயும் அவங்க புள்ளை கிட்டயும் பட்டுட்டு இருக்கறதுக்கு.. நாம்ப பேசாம அப்பாவோட வீட்டுக்கே போயி... எந்தக் கஷ்டத்தையும் பட்டுக்கலாம் அம்மா.

"இதுக்கு அது எவ்வளவோ தேவலாம்னு என் மனசுக்குப் படுதும்மா.

''மாமா வாயில்லாப் பூச்சிம்மா. அவரு நியாயத்தை எடுத்துச் சொன்னாலும்.. கற்பகம் அத்தையும், கிருஷ்ணாவும் சட்டையே பண்ண மாட்டாங்க.

''கிருஷ்ணாவைப் பத்தி தான் உனக்கே தெரியுமே? நெனச்சதை சாதிக்காம விட மாட்டான். அவனால அசிங்கப்படறதுக்கு முன்னாடி நாம்ப போயிடலாமே அம்மா?

''மனசுலே போட்டு மருகிட்டிருக்கற விஷயத்தை உடைச்சு இன்னிக்காவது சொல்லேன். ப்ளீஸ்!''

அங்கே சுற்றி இங்கே சுற்றி சரியான மையப்புள்ளியில் வந்து மகள் நின்றதும்... மஞ்சுளாவை பயம் ஒரு பக்கமும், கவலை ஒரு பக்கமும் பிடுங்கித் தின்றன.

பதில் சொல்லத் திராணியற்றவளாய்.. தலை குனிந்து கொண்டாள்.

இமைக் கரைகளை உடைத்துக்கொண்டு கண்ணீர் பொங்கிப் பெருகியது.

''அது வந்து..'' திணறித் திண்டாடினாள் மஞ்சுளா.

''அக்கா.. அக்கா..'' கூவியபடி நாலைந்து சிறுமிகள் திடுதிப்பென்று உள்ளே நுழைந்ததும் திகைத்து ஏறிட்டாள் சாம்பவி.

''நாளைக்கு டான்ஸ் கிளாஸ் இருக்கா அக்கா?'' கோரஸாய் கேட்டனர். ''உம்! நாளைக்கு சன்டே இல்லே? காலைலே நான் ஃப்ரீதான்... சீக்கிரமா வந்துடுங்க'' புன்னகைத்தாள் சாம்பவி.

சிறுமிகளின் குதூகலமான முகங்களைக் கண்டதும்... புண்பட்ட இதயத்திற்கு மயிலிறகால் மருந்து தடவியது போலிருந்தது.

நாளை காலை அந்தப் புதிருக்கான விடை தெரிந்து விடும் என்பதையும் 'இதைவிட பெரிய இக்கட்டில் மாட்டிக் கொள்ளப் போகிறாள்' என்பதையும் அவள் எவ்விதம் அறிவாள்?



# 8

வசந்தனுக்கு உள்ளூர தர்ம சங்கடமாகத்தான் இருந்தது. டாக்டர் மகாதேவனின் மூலமாக சாம்பவியின் முகவரியைத் தெரிந்து கொண்டு அதை துண்டுக் காகிதத்தில் குறித்துக் கொண்டு வந்திருந்தான்.

ஒரு வேகத்தில் கிளம்பி விட்டானே தவிர.. உள்ளூர தயக்கமாகவும் தான் சொல்லப்போகும் விஷயத்தை சாம்பவி எவ்வளவு தூரம் நம்புவாள் என்று நெருடலாகவும் இருந்தது.

'அம்மாவும் பெண்ணும் ஒருவேளை என்னைப் பற்றி தவறாக நினைத்து விட்டால் என்ன செய்வது?' என்ற தவிப்பு உள்ளுக்குள் அலை மோதவே செய்தது.

பர்வதம் அம்மாளின் முகம் ஒரு கணம் அவனது மனக்கண்ணில் தோன்றி மறைந்ததும்.. மற்ற சங்கடங்களை ஒதுக்கித் தள்ளி விட்டு துணிவுடன் காரை விட்டிறங்கினான் வசந்தன்.

அவுட் ஹவுஸை நெருங்கும்போதே சலங்கை ஒலியும், ஜதி சொல்லும் இனிமையான குரலும் ஒரு சேரக் கச்சிதமாக ஒலித்ததும்.. அதீத ஆர்வத்தினால் கால்களை எட்டிப் போட்டு மிக வேகமாக வீட்டை நெருங்கினான்.

சாம்பவி தான் கால்களில் சலங்கையைக் கட்டிக் கொண்டு ஜதி சொல்லியபடி நடன முத்திரைகளை மாணவிகளுக்கு கற்றுத் தந்து கொண்டிருந்தாள்.

கண் மூடித் திறப்பதற்குள் பிளாட்டிங் பேப்பரில் ஊறிப் போன மை போல காதுக்குள் நுழைந்து மனதை நிறைத்தது அவளது இனிய குரல்.

''தா கிட்டதக்க ஜம், தரி கிட்டதக்க
தத்தித் தகணக ஜம் தரி கிட்டதக்க...''

அந்த முகம், பாவங்கள், அந்த நளினம், அந்த லாவகம், வளைவு, அந்த இடை, அந்தக் கவர்ச்சி, அபிநயங்களைப் பார்த்த வசந்தன் கிறுகிறுத்தான்.

ஜதிகள் போட்டு முத்திரைகளை அவள் காட்டக் காட்ட இவன் நீரூற்றாய் உயரே கிளம்பி ஆர்ப்பரித்தான்.

பளீரென்று எலுமிச்சை மஞ்சள் நிறமாய் நடுமத்தியில் உட்புறமாய் குவிந்து வளைந்த அழகான பாதங்களை முத்தமிட வேண்டும் என்று உள்ளுக்குள் எழுந்த ஆவலை உடனே மண்டையில் தட்டி அடக்கினான்.

சட்டென்று பக்கவாட்டில் திரும்பிப் பார்த்துவிட்டாள் சாம்பவி. ''அட.. மைகாட்! வாங்க வசந்தன் சார்.. உள்ளே வாங்க ப்ளீஸ்.''

ஆடுவதற்குத் தோதாக சேலைக் கொசுவத்தை சற்று உயர்த்தி இடுப்பில் சொருகி இருந்ததை அவிழ்த்துத் தழைய விட்டாள்.

''குட்டீஸ்! அக்கா சொல்லிக் குடுத்த முத்திரைகளை வீட்டுக்குப் போய் பிராக்டீஸ் பண்ணிப் பாருங்க.. நாம்ப அப்புறமா பார்க்கலாம். ஓ.கே?''

சிறுமிகள் பவ்யமாய் வணங்கி வரிசையாய் சென்ற நேர்த்தியைப் பார்த்துவிட்டு பெருமிதத்துடன் திரும்பி னாள் சாம்பவி.

''உட்காருங்க சார்! இவ்ளோ தூரம் தேடி வந்திருக் கீங்களே? ரொம்ப முக்கியமான விஷயமா சார்?''



வசந்தனது எதிரில் தானும் ஒரு சேரை இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்து கொண்டாள் சாம்பவி.

பார்வையால் வீட்டைத் துழாவினான் வசந்தன்.

யாருமற்ற தனிமையில் இவ்வளவு நெருக்கத்தில் சாம்பவியைக் கண்ட போது.. சுவர்க்கத்தின் ஒரு பாகத்தைப் பிட்டு யாரோ அவன் கையில் கொடுத்துவிட்டது போன்ற பரவசத்தில் திளைத்துப் போனான்.

அவனது எதிர்பாராத வருகையைக் கண்டு... மனசுக் குள் சலசலவென்று சன்னமான ஓசையுடன் நீரோடை ஒன்று ஓடுவதை உணர்ந்த போது சாம்பவிக்கும் சந் தோஷமாக இருந்தது.

''மிஸ். சாம்பவி! நா.. நான் உங்கம்மாவைப் பார்த்துப் பேசணுமே.''

''அவங்க.. எங்க கற்பகம் அத்தைக்கு சமையல்லே ஒத்தாசை செய்யப் போனாங்க.. இ... இதோ கூட்டிட்டு வந்துடறேன்.''

'விஷயம் என்னவாக இருக்கும்?' என்ற குழப்பம் அவளது அகன்ற விழிகளில் சதிராட.. சட்டென்று வெளியில் விரைந்தாள்.

ஐந்து நிமிடங்கள் கரைந்திருக்கும். புடவைத் தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டு மகளின் பின்னால் விரைந்து வந்த மஞ்சுளாவைக் கண்டதும் சட்டென்று எழுந்து நின்றான்.

''வணக்கம்மா! குன்னூர்லே... டாக்டர் விஸ்வநாதன்னு கேள்விப்பட்டிருக்கீங்களா? அவரோட மகன் வசந்தன். எங்கப்பா மூணு மாசத்துக்கு முன்னாடி தவறிட்டார்.

''எஸ்.எஸ். எஸ்டேட்ஸ் பத்தி நீங்க கேள்விப்பட்டிருக் கீங்களா? ஐ.மீன்... 'சாம்பசிவம் எஸ்டேட்ஸ்...' அந்தப்

பெரிய குடும்பத்துக்கு... எங்கப்பா தான் ஃபேமிலி டாக்டரா இருந்தார்.''

'குன்னூர்' என்ற வார்த்தையைக் கேட்டதும்.. அதிலும் 'சாம்பசிவம் எஸ்டேட்ஸ்' என்ற பெயரைக் கேட்டதும்.. மஞ்சுளாவுக்கு அடி வயிற்றைப் பிசைவது போலிருந்தது.

கால்களுக்கு கீழே பூமி நகர்கின்ற மாதிரியான உணர்வில் தள்ளாடினாள் மஞ்சுளா.

திகிலுடன் தொப்பென்று சேரில் அமர்ந்து கொண்டாள்.

''சாம்பசிவம் ஐயாவோட மனைவி பர்வதம் அம்மாளை நான் சின்ன வயசிலேர்ந்து பாத்திருக்கேன். அச்சு அசலா, அவங்களை மாதிரியே சாம்பவி இருந்ததைப் பார்த்தும் 'ஷாக்' ஆயிட்டேன் அம்மா!

''கண்டிப்பா அந்தக் குடும்பத்துக்கும் உங்களுக்கும் ஏதோ நெருங்கின உறவு இருந்தாகணும். எங்க குடும்பமே எஸ்.எஸ். ஐயாவுக்கு கடமைப்பட்டிருக்கு. அந்திமா காலத்துல அந்த சொத்துக்கு வாரிசு வேணுமேங்கிற காரணத்துக்காக.. பர்வதம் அம்மா தப்பான மனுஷங் களைத் தன்னோட சேர்த்துட்டிருக்காங்க. உங்களுக் குள்ளே உறவு இருந்துச்சுன்னா.. உங்களை அந்தக் குடும் பத்தோட சேர்க்கணும். உண்மையான வாரிசுக்கு அந்த சொத்து போய்ச் சேரணும்கிறது தான் என்னோட நோக்கம்.

''நீங்க சொல்லப் போற பதில்லே தான் சாம்பவியோட வளமான வாழ்க்கையே அடங்கியிருக்குன்னு.. நான் நெனக்கிறேன். சொல்லுங்கம்மா.''

நிறுத்தி நிதானமான குரலில் தெளிவாகப் பேசி முடித் தான் வசந்தன்.

'புதிருக்கான' விடை தெரியாமல் இது நாள் வரை குழப்பத்திலும் வேதனையிலும் புழுவாய் துடித்துக் கொண் டிருந்தாள் சாம்பவி.



வீடு தேடி வந்து அந்தப் புதிருக்கான முடிச்சை அவிழ்த்து விட்ட வசந்தனை... கண்ணீர்ப் பெருக்கோடு ஏறிட்டாள்.

மஞ்சுளாவுக்கு தொண்டை வறண்டது. நா உலர்ந்து போனது. குப்பென்று வியர்த்துக் கொட்ட.. சேரில் அமர்ந்திருந்தவள் சரிந்து விழத் தொடங்கினாள்.

சட்டென்று தாங்கிக் கொண்டான் வசந்தன்.

''சாம்பவி! இவங்களுக்கு பி.பி. இருக்கா? ரொம்பவும் உணர்ச்சி வசப்பட்டிருக்காங்கன்னு நெனக்கிறேன்.''

தனது கர்ச்சீப்பால் அவளது முகத்தில் வழிந்த வியர்வையைத் துடைத்தான்.

''பி.பி. இல்ல சார்.. விஷயத்தைக் கேட்டதும் 'ஷாக்' ஆயிட்டாங்க.. இது விஷயமா எப்போ பேச்சை எடுத் தாலும் ரொம்பவே பயந்து பதறிடுவாங்க. இன்னிக்கு நீங்க என் முன்னாடி விஷயத்தைப் போட்டு உடைச்சதும் ரொம்பவே கலவரமாயிட்டாங்க அதான்.''

பேசியபடி கிச்சனுக்குள் புகுந்து சொம்பில் நீர் மொண்டு வந்தாள் சாம்பவி.

தாயின் முகத்தில் தண்ணீரைத் தெளித்து.. தனது முந்தானையால் மெல்லத் துடைத்துவிட்டாள். இமை களை மலர்த்தி மலங்க விழித்த மஞ்சுளாவின் அருகே மண்டியிட்டு அமர்ந்தாள் மகள்.

''இனியும் மறைச்சுப் பிரயோஜனம் இல்லேம்மா... நான் ரொம்ப இக்கட்டில் மாட்டிட்டிருக்கேன். ப்ளீஸ்மா... சொல்லிடும்மா.''

''ஆ... ஆமா! நீ அந்தக் குடும்பத்தோட வாரிசு தான் சாம்பவி'' அம்மா மெல்லிய குரலில் முணுமுணுத்தாள்.

படாரென்று எழுந்து நின்று ''தேங்க்யூ.. தேங்கயூ ஸோ மச் வசந்தன் சார்'' கை கூப்பினாள் சாம்பவி.

''இந்த விஷயம் வெளியே தெரிஞ்சா... உன் உயிருக்கு ஆபத்துன்னுதான்.. இது நாள் வரை நான் மூடி மறைச்சேன்'' விசும்பினாள் மஞ்சுளா.

பொங்கி வந்த மகிழ்ச்சி சட்டென்று நீர்க்குமிழியாய் உடைந்து போனது.

''என்னம்மா சொல்றே?'' என்று கேட்ட சாம்பவிக்குள் திகில் கிளை விட்டுப் படர்ந்தது.

## 9

ஜீப் இரக்கமின்றி சாம்பவியின் உடலைத் தூக்கிப் போட்டு பந்தாடியது.

சாலையின் குண்டு குழி போதாதென்று நிமிடத்திற்கு நான்கு வளைவுகள். உடல் சரிந்து சாய்ந்து தள்ளாடினாலும் கண் முழுக்கக் குளிர்ச்சி!

ஒடுங்கிய சாலையில் யார் யார் வருகிறார்கள் என்று காற்றில் தலையாட்டியபடி தேக்கு, பாக்கு, பலா மரங்கள்.. பலவற்றில் உடம்பு முழுக்க மிளகுக் கொடிகளின் படர்வு!

ஒவ்வொன்றின் இலையும் யாரோ மெனக்கெட்டு நீவிக் கழுவி விட்ட தினுசில் பளபளவென்று கண்களைக் கட்டிப் போட்டன.

'பூம் பூம்..' எதிரே வந்த லாரி கர்ண கடூரமாய் அலற இவளது ஜீப் லாவகமாய் சாலையோரமாய் ஒண்டியது.

சரிந்த பள்ளத்தைப் பார்க்கத் துணிவின்றி விழிகளை மூடிக் கொண்டாள் சாம்பவி.



ஜீப்பை ஓட்டிக்கொண்டே திரும்பிப் பார்த்த வசந்தன் மெல்ல நகைத்தான்.

''பயமா இருக்கா சாம்பவி? எல்லாம்... உங்க தோட்டத்து அன்னாசி, பப்பாளி, சாத்துக்குடி, காலிஃப்ளவர், உருளைக்கிழங்கு, முட்டைக்கோஸ், தக்காளி தான் லாரியில் கீழே இறங்குது.''

அவன் 'உங்க தோட்டத்து...' என்று குறிப்பிட்டு பேசியதும் சாம்பவிக்கு 'சுருக்'கென்று தைத்தது.

''நம்ம தோட்டத்து' என்று உரிமையுடன் கூறினால் என்னவாம்?'' என்று கேட்டு விடத் துடித்த நாவை சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

பதிலுக்கு ஒன்றும் கூறாமல் முறுவலித்தாள்.

அவளது முகத்தில் மத்தாப்பு சிதறியது.

அவளுக்கு வசந்தனின் மீது நிமிடத்திற்கு நிமிடம் மதிப்பும், மரியாதையும், நம்பிக்கையும், நன்றி உணர்ச்சியும் பெருகிக் கொண்டே இருந்தன.

அது மட்டுமல்ல... நெஞ்சுக்குள் பொங்கி எழும் சிலிர்ப்பையும், கண்களில் பிரதிபலிக்கும் மின்னலையும்... வெளிப்பட்டு விடாமல் கட்டுப்படுத்த அவள் மிகவும் பிரயத்தனம் செய்ய வேண்டி இருந்தது.

வசந்தனுடன் தனியாக குன்னூர் எஸ்டேட்டுக்கு கிளம்பி வந்ததை நினைக்கும்போது.. அவளுக்கு இது கனவா, நிஜமா என்ற ஐயம் தான் தலைதூக்கியது.

அம்மா மஞ்சுளா பேசிய வார்த்தைகள் ஒவ்வொன்றும் மனதில் இன்னமும் ரீங்காரமிட்டுக் கொண்டுதான் இருந்தன. அன்று நடந்த சம்பவம் மனக்கண்ணில் மீண்டும் தோன்றியது.

'எங்கப்பா சபேசன் ஒரு பரத நாட்டியக் கலைஞர். தனக்குத் தெரிஞ்ச உன்னதமான கலையை எனக்கும் அண்ணனுக்கும் கத்துக் குடுத்துடணும்கிறது அவரோட தீராத தாகம்.

''அந்தக் கலையை கத்துக்கிடறதுலே அண்ணன் அவ்வளவா ஆர்வம் காட்டலை. ஆனா நான் சிரத்தையோட கத்துக்கிட்டேன்.

''உள்ளூர ஏமாற்றமா இருந்தாலும் அண்ணனை சக்திக்கு மீறி செலவழிச்சு நல்லா படிக்க வைச்சாரு. பிரபலமான கல்லூரியில எங்கண்ணா சேர்ந்து படிக்கும் போது.. அறிமுகம் ஆனவர்தான் உங்கப்பா... என்ன அப்படிப் பார்க்கிறே? குன்னூர்லே இருந்து சென்னைக்கு வந்து இங்கே ஹாஸ்டல்லே தங்கித் தான் படிச்சாரு.''

மேற்கொண்டு பேச முடியாமல் துக்கம் பந்தாய் எழும்பி மஞ்சுளாவின் தொண்டையை அடைத்தது.

''அம்மா! சாம்பவியோட அப்பா பேரு ராஜதுரை தானே?'' மிக மிருதுவான குரலில் கேட்டான் வசந்தன்.

கன்னங்களில் கோடு போட்டுக் கொண்டு வழிந்த கண்ணீரை புறங்கையால் துடைத்தபடியே தலையாட்டினாள் மஞ்சுளா.

''அவருக்கும் அண்ணனுக்கும் இடையே ஒரு ஆழமான நட்பு வேர் விட்டு வளர்ந்துச்சு. அந்த சமயத்துலே தான் என்னோட அரங்கேற்றம் நடந்துச்சு.

''அரங்கேற்றத்துக்கு அவரை எங்கண்ணன் அழைச்சுட்டு வந்திருந்தாரு... பார்த்த மாத்திரத்திலேயே எங்க ரெண்டு பேத்துக்கும் காதல் அரும்பி மலரத் தொடங்கிடுச்சு... அடிக்கடி அவர் எங்க வீட்டுக்கு உரிமையோட வர ஆரம்பிச்சாரு.



''வார விடுமுறை நாட்கள்லே தன்னோட நண்பனை வீட்டுக்கு சாப்பிட அழைச்சுட்டு வந்துடுவாரு அண்ணன். காரசாரமா சுவையும் மணமுமா நான் சமைக்கிற சமையலை.. அவர் ரொம்பவே ரசிச்சு சாப்பிடுவாரு.

''அப்போ எல்லாம் எனக்கு.. அவர் ஒரு பெரிய பணக்காரர் என்கிற விஷயமெல்லாம் சத்தியமா தெரியாது. அவரும் பருத்தி சட்டை போட்டுக்கிட்டு ரொம்பவும் எளிமையாத்தான் இருப்பாரு...

''பெரிய மிராசுதாரர் குடும்பத்துக்கு ஒரே வாரிசு அவருன்னு தெரிஞ்சிருந்தா.. சத்தியமா என்னோட காதலை மனசுக்குள்ளேயே புதைச்சிருப்பேன்.

''கல்யாணம் செய்துக்கப்போற சமயத்துலே தான் உங்கப்பா என்கிட்டே உண்மையைச் சொன்னாரு.

''அப்படியே குலை நடுங்கிப் போயிட்டேன். வேற வேற ஜாதி... அந்தஸ்துன்னு பார்த்தா... எங்க ரெண்டு பேத்துக்கும் ஏணி வச்சாக் கூட எட்டாதே?

''இது சரிப்பட்டு வராது'ன்னு கதறினேன். என்னை வற்புறுத்தி கல்யாணத்துக்கு சம்மதிக்க வச்சார் உங்கப்பா. திருநீர்மலையிலே தான் எளிமையா கல்யாணம் செய்துக்கிட்டோம்.

''மாலையும் கழுத்துமா எங்களைப் பார்த்ததும் எங்கப்பா 'நம்பிக்கை துரோகம் பண்ணிட்டியே'ன்னு கோபத்துல குதிச்சார். அண்ணா தாடை இறுக மௌனமா இருந்துட்டாரு.

''அப்புறம் உங்கப்பா என்னை குன்னூருக்கு அழைச்சுட்டுப் போனாரு.. அந்த பிரமாண்டமான பங்களாவைப் பார்த்ததுமே எனக்கு மூச்சே நின்னு போச்சு தெரியுமா?''

அம்மாவின் கரத்தை ஆதுரமாக இறுகப் பற்றிக் கொண்டாள் சாம்பவி. அம்மா சொல்லச் சொல்ல.. அந்தக் காட்சி அவளது கண் முன்னே படமாய் விரிந்தது போலிருந்தது.

''உ.... உங்க பாட்டி வெண்பட்டை உடுத்திக்கிட்டு கம்பீரமா வெளியில வந்தாங்க. கூடவே அவங்க தங் கையும் தங்கை கணவரும் உக்கிரமா வந்தாங்க.. வசந்தன் தம்பி சொன்னாரே? ஒண்ணுவிட்ட தங்கச்சி குடும்பம்னு.. அவங்களே தான்!

அவங்க அப்பவே அடிக்கடி உங்க பாட்டி வீட்டுலே
''அவங்க அப்பவே அடிக்கடி உங்க பாட்டி வீட்டுலே வந்து மாசக் கணக்குல டேரா போடுறவங்களாம்... உங்கப்பா சொல்லி இருக்காரு. அவங்க ஏகத்துக்கும் துாபம் போட்டு பாட்டியை ஏத்திவிட்டாங்க.

''உங்க பாட்டி 'இனிமே என் முகத்துல முழிக்காதே'ன்னு கோபமா பேசினாங்க. அவங்க தங்கையும் அவங்க கண வரும் என்னை ரொம்பவும் கேவலமா பேசித் திட்டினாங்க.

''பெரிய பணக்கார வீட்டுப் பிள்ளையை மயக்கி வளைச்சுப் போட்டுட்டியே'ன்னு ஏசினாங்க. 'என் மனை வியைப் பேசறதுக்கு இங்க யாருக்கும் அதிகாரம் கிடை யாது'ன்னு உங்கப்பா ஆவேசமா சொன்னதும் மிரண்டு நகர்ந்தாங்க...

''உங்கப்பா தனது நண்பர்கள் சிலரோட உதவியோட... அங்க குன்னூர்லேயே சின்னதா ஒரு வீட்டைப் பாத்து வச்சிருந்தாரு.. சில மாசங்கள் நாங்க அங்க வாழ்ந்தோம். அந்தச் சமயத்துல நான் கர்ப்பமானேன்.

''உங்கப்பா பொங்கிப் பூரிச்சுப் போயிட்டாரு.. இந்த விஷயத்தை உங்க பாட்டிகிட்ட போய் சொன்னாராம். 'தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்' இல்லையா?



''அம்மாவுக்கு உள்ளூர ரொம்ப சந்தோஷம் மஞ்சு. கூடிய சீக்கிரமே நம்மை அவங்க ஏத்துப்பாங்க'ன்னு சொல்லி சிரிச்சார்.

''அடிக்கடி உங்க பாட்டியை அவர் பாத்துட்டு வந்தாரு... எனக்கு ஆறுமாசம் இருக்கும். உங்க பாட்டியைப் பாத் துட்டு திரும்ப வர்ற வழியிலே... மலைப்பாதையில லாரி மோதி அ.. அவரு என்னை நிராதரவா தவிக்க விட் டுட்டுப் போயிட்டாரும்மா.

''அலறியடிச்சுக்கிட்டு ஓடினேன். அவரோட உடம்பைப் பார்க்கறதுக்கு கூட.. உங்க பாட்டியோட தங்கை கணவர் என்னை அனுமதிக்கலை. வெளியில கேட்டுலே வைச்சே என்னைத் துரத்தியடிச்சாரு...

''உன்னைக் கை பிடிச்ச பாவத்துக்குத்தான் விபத்துல உருத்தெரியாமல போயிட்டான்னு நாக்குல நரம்பில்லாம பேசினாங்க.. அந்தாளு கூட அஞ்சாறு கைத்தடிங்க வேற.. சுத்தி வளைச்சு நின்னு வெந்த புண்ணுல வேலைப் பாய்ச்சினாங்க...

''என் கணவரோட முகத்தையாவது பார்த்துட்டுப் போயிடறேன். அவரோட குழந்தை என் வயித்துல வளருது. இரக்கம் காட்டுங்க'ன்னு கதறினேன்.

''வாரிசு வளருதுன்னு காரணம் காட்டி உரிமை கொண் டாடலாம்னு கனவு காணாதே.. கண் காணாம போயிடு.. இல்ல... ராஜதுரைக்கு ஏற்பட்ட கதி தான் உனக்கும்! எங்களை மீறினா.. நிர்மூலமாக்கிடுவோம். ஜாக்கிரதை' அப்படின்னு அந்த தடியங்க மிரட்டினாங்க.

''கழுத்தைப் பிடிச்சு நெட்டித் தள்ளினாங்க... இடறி விழப் பார்த்து எப்படியோ சமாளிச்சு நின்னு தேம்பிக் கிட்டே.. அந்த எடத்தை விட்டு வெளியேறினேன்.

"அவரோட அன்புக்கு அடையாளமா என் வயித்துல வளர்ந்த சிசுவைக் காப்பாத்த வேண்டியது என் கடமை இல்லையா?

"அதே சமயம் உங்கப்பாவோட சாவுலேயும் ஏதோ மர்மம் இருக்கறதா எனக்குப் பட்டுச்சு... இதே கும்பல் சொத்துக்கு ஆசைப்பட்டு அவரோட உயிருக்கே உலை வைச்சுட்டாங்களோன்னு.. உள்ளுக்குள்ளே ஊமையா கதறித் துடிச்சேன்.

"என் அன்பு தெய்வம் விட்டுட்டுப் போன செல்வத்துக்காக வேண்டியாவது நான் உயிர் வாழ்ந்து தானே ஆகணும்?

"வாழ வேண்டிய வயசுலே, விதவைக் கோலத்தோட, நடைப்பிணமா நான் வந்து சேர்ந்ததைப் பார்த்ததும்.. தலையில் இடி விழுந்தாப்பல எங்கப்பா நொறுங்கிப் போயிட்டாரு.

"அந்த அதிர்ச்சியே அந்த உன்னதமான கலைஞரோட உயிரை உறிஞ்சிடுச்சு.

"என்னோட புகுந்த வீட்டுக்காரங்களோட விவரத்தை யார்கிட்டயும் நான் மூச்சே விடலை.

"சதிகார கும்பலுக்கு நாம இருக்கறது தெரிஞ்சா.. சொத்துக்கு உரிமை கொண்டாடி வந்துடுவோமோன்னு பயந்து.. நம்ம உயிருக்கே வேட்டு வச்சுடுவாங்க... அதான் இந்த உண்மையை இது நாள் வரைக்கும் என் மனசுக்குள்ளேயே போட்டுப் புதைச்சுட்டேன்."

சாம்பவிக்கு துக்கம் பீறிட்டுக் கொண்டு வந்தது. கண்களில் கண்ணீர் ஊற்றெடுத்துப் பொங்கியது.

சட்டென்று முழங்காலில் முகம் புதைத்து விம்மினாள்.



"சாம்பவிம்மா.. என்னடா?" நடுங்கும் கரத்தினால் மகளின் தலையை வருடினாள் மஞ்சுளா.

"விரும்பிக் கரம் பிடிச்சவரை விபத்துல பறி கொடுத்துட்டு நிறைமாசக் கர்ப்பிணியா.... அப்பாவோட முகத்தைக் கூடப் பார்க்க முடியாத சோகத்தை முழுங்கிட்டு.. எனக்காக உயிரைக் கையில பிடிச்சுக்கிட்டு வாழ்ந்திருக்கே!

"கற்பகம் அத்தை கிட்ட கண்டபடி திட்டு வாங்கிட்டு ஒரு வேலைக்காரி மாதிரி சேவகம் செஞ்சு.. டான்ஸ் டீச்சரா ஆடி சம்பாதிச்சு... கஷ்டப்பட்டு என்னை வளர்த்து ஆளாக்கி இருக்கே...

"மனசுக்குள்ளே இவ்வளவு பெரிய பாரத்தை சுமந்துட்டு இருந்திருக்கியே? நீ ரொம்ப பாவம்மா.. உன் வயித்துல பிறந்ததுக்கு நா ரொம்பவே குடுத்து வச்சிருக்கணும்மா" கேவியபடி பேசிய மகளை இழுத்து தன் மார்போடு அணைத்துக் கொண்டாள் மஞ்சுளா.

"சாம்பவி! கண்ட்ரோல் யுவர் செல்ஃப்... அம்மாவுக்கு நீங்க தானே தைரியம் சொல்லணும்? நீங்களே இப்படி உடைஞ்சு போய் அழுதா.. பாவம் அவங்க ரொம்பவே வேதனைப் பட மாட்டாங்களா?

"ப்ளீஸ்.. சாம்பவி! கண்ணைத் துடைச்சுக்கிட்டு எந்திரிங்க.. நாம்ப இப்ப முக்கியமான முடிவெடுக்க வேண்டியிருக்கு. எழுந்திரிங்க...

"அம்மா! நீங்களும்தான்.. பயத்தை உதறிட்டு துணிஞ்சு ஒரு முடிவெடுக்கணும்."

உரிமையாய் வசந்தன் அதட்டியதும், சட்டென்று துக்கத்தை விழுங்கிக் கொண்டு முட்டிக் கொண்டு வந்த அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண்டு மெல்ல எழுந்து நின்றாள் சாம்பவி.

''நான் நெனச்சது சரியாப் போச்சு! பர்வதம் அம்மாளைச் சுத்தி இருக்கறவங்க ரொம்ப மோசமானவங்கன்னு.. என் மனசுக்குப் பட்டுச்சு.

''ஆனா.. சொத்துக்காக கொலை செய்யற அளவுக்கு துணிஞ்ச ஈன புத்திக்காரங்கன்னு இப்பதான் தெரிஞ்சுகிட்டேன்.

''அந்தப் பிணம் தின்னிக் கழுகுகளுக்கு அந்த சொத்து போய்ச் சேரக்கூடாது.

''உங்க உரிமையை விட்டுக் கொடுக்கவே கூடாது. கண்ட நாய்ங்க சொத்தை அனுபவிச்சது போதும்.

''உண்மையான வாரிசு நீங்க.. பாவம் வறுமையில வாடி வதங்கிட்டிங்க.. வாங்க என் கூட... குன்னூருக்குப் போகலாம். நான் இருக்கேன். உங்களுக்கு எந்த ஆபத்தும் வராம பாத்துக்கிறேன்.''

''த.. தம்பி... அங்க வரக்கூடிய அளவுக்கு எனக்கு தைரியம் வரலை. வே.. வேணாம் இவளையும் என்னால இழக்க முடியாது.''

''போம்மா! இனிமே இங்க இருக்கவும் முடியாதே? இங்க இருந்தாலும் ஆபத்துதான்... அதை மறந்துட்டியா? 'குன்னூர்'ங்கிற வார்த்தையைக் கேட்டாலே.. உன் உடம்பே பதறுது.

''நீ வர வேணாம். நான் போறேன் அம்மா. என் அப்பா பிறந்து வளர்ந்த இடத்தை நான் பார்க்கணும். என்னை அனுமதிம்மா... ப்ளீஸ் நான் போறேன்.''

அம்மாவின் மோவாயைத் தொட்டு ஏகத்திற்கும் கெஞ்சிக் கூத்தாடினாள் சாம்பவி.



''உ... உன்னை மட்டும் எப்படி நான் தனியா அனுப்புவேன் செல்லம்?''

தயக்கமும் பயமும் மஞ்சுளாவை ஆட்டிப் படைத்தன.

''சாம்பவி மேல ஒரு தூசு கூட படாம நான் ஜாக்கிரதையா பாத்துக்கிறேன். தைரியமா அனுப்பிவையுங்க... என்.. என் மேல உங்களுக்கு நம்பிக்கை இருக்குல்லே?''

''சேச்சே! என்ன தம்பி இப்படிக் கேட்டுட்டீங்க? எங்க குடும்பத்து மேல இவ்ளோ விசுவாசம் வச்சிருக்கீங்க. உண்மையான அக்கறையோட மெனக்கெடறதைப் பார்த்ததுமே.. உங்க நல்ல குணத்தையும், உயர்ந்த எண்ணத்தையும் நான் புரிஞ்சுகிட்டேன்.

''சாம்பவிக்காகத்தான் நா உசுரைப் புடிச்சுக்கிட்டு வாழ்ந்துட்டிருக்கேன். அவளுக்கு ஏதாவது ஆயிடுமோன்னு தான் பயப்படறேன் தம்பி.''

''உங்க பயத்தை மூட்டை கட்டி வையிங்க. நான் இருக்கேன். சாம்பவியை வளமா ஏகபோகமா வாழ வைக்க வேண்டியது என் பொறுப்பு. சரியா?

ஆங்.. ஒரு விஷயத்தைச் சொல்ல மறந்துட்டேனே? உங்க பொண்ணு ஒரு திறமையான நர்ஸ் மட்டுமில்லை அருமையான டான்ஸரும் கூட.. அவங்க நாட்டியத்தைப் பாத்துட்டு நான் மெய் மறந்து நின்னுட்டேன். பாராட்டுக்கள்.''

''ஓ...!'' மஞ்சுளா இதமாகச் சிரித்தாள்.

சந்தோஷத்திலும் வெட்கத்திலும் சிரித்த சாம்பவியின் முகம் செக்கர் வானமாய் சிவந்து போனது.

விதியும் சிரித்தது. சாம்பவி ஆபத்தில் வசமாய் சிக்கிக் கொள்வாள் என்று வசந்தன் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

# 10

''என்ன சாம்பவி? பலத்த சிந்தனையில் மூழ்கிட்டீங்க போலிருக்கு'' ஜீப்பை லாவகமாக வளைத்துத் திருப்பியபடி கேட்டான் வசந்தன்.

''இல்ல.. என் வாழ்க்கையில இப்படியொரு திருப்பம் வரும்னு.. நான் எதிர்பார்க்கவே இல்ல... உங்க கூட வந்தது கூட கனவா நிஜமான்னு அப்பப்ப சந்தேகம் கிளம்பிடுது.

''மாமன் மகன் கிருஷ்ணா கிட்டேயிருந்து எப்படி தப்பிக்கப் போறோம்னு தவிச்சுக்கிட்டிருந்தேன். கண்ணைக் கட்டி காட்டில விட்டாப்பல.. ஒரு வழியும் புலப்படாம மனசை சூனியம் கவ்விக்கிட்டிருந்துச்சு.

''ஆபத்பாந்தவனா நீங்க வந்தது என்னோட அதிர்ஷ்டம் வசந்தன் சார்.''

நெகிழ்ந்து போய் கண்களில் நீர்த்திரையிட அவனை ஏறிட்டாள் சாம்பவி.

''சாம்பவி.. இந்த 'சார்.. மோர்' எல்லாம் வேண்டாமே ப்ளீஸ்..'' என்றபடி அவளது கண்களை ஊடுருவிப் பார்த்தான் வசந்தன். சட்டென்று திரும்பி வேடிக்கை பார்த்தாள்.

மனதிற்குள் மகிழ்ச்சிக் கொப்பளங்கள் வெடித்தன.

குட்டி குட்டி மேகங்கள் திட்டு திட்டாய் மலையை முத்தமிட்டபடி மிதந்து கொண்டிருந்தன. பச்சைக் கிளிகளும், மைனாக்களும், கொக்குகளும் குபீர் குபீரென்று சிறகடித்துப் பறந்து கொண்டிருந்தன.

பாதையோர ஆலமரத்தில்... குரங்குகள் கூட்டமாய் குதித்து விளையாடிக் கொண்டிருந்தன.

ஆழ மூச்செடுத்தாள் சாம்பவி.



யப்பா.. சுத்தமான மலைக்காற்று நெஞ்சு முழுக்கப் பரவியது.

குளிர் வெட வெடக்க வைத்தது.

சாலையோரங்களில் இருந்த புதர்ப் பகுதிகளில் வெள்ளை, ஆரஞ்சு, மஞ்சள் வண்ணப் பூக்கள் கொத்துக் கொத்தாய் பூத்து காற்றில் தலையாட்டிச் சிரித்து வரவேற்றன.

இரு கைகளையும் நன்றாக சூடு பறக்கத் தேய்த்து, கன்னங்களில் ஒத்தடமிட்ட படியே வசந்தனைத் திரும்பிப் பார்த்தாள்.

''உலகத்துல இருக்கற ஒட்டு மொத்த அழகையும் இங்கே யாரோ கொண்டு வந்து கொட்டி வச்சிருக்கிற மாதிரி இருக்குல்லே.. வசந்த்?''

வசந்தன் என்ற பெயரை சுருக்கி 'வசந்த்' என்று அவள் கூப்பிட்ட போது.. செவிகளில் தேனோடை பாய்ந்தது போலிருந்தது.

''இதுக்கே இவ்ளோ பிரமிச்சுப் போயிட்டா எப்படி? நிறைய இடங்களைச் சுத்திக் காட்டறேன். பார்த்து ரசிக்க வேண்டிய எடங்கள் எவ்வளவோ இருக்கு சாம்பவி.

''முதல்லே இப்போ நம்ம வீட்டுக்குப் போறோம். குளிச்சுட்டு சாப்பிட்டுட்டு களைப்புத் தீர ஓய்வெடுங்க. உங்களைப் பார்வதம் அம்மாவோட பங்களாவுக்கு... நாளைக்கு கூட்டிட்டுப் போறேன். சரிங்களா?''

''ஒரு வேண்டுகோள் வசந்த்! என்னை நீங்க.. வா, போன்னு ஒருமையில கூப்பிடுங்க.. ப்ளீஸ்... எனக்கு சங்கடமா இருக்கு.''

''வேண்டுகோளா? அடக்கடவுளே... 'எஸ்.எஸ். நிறுவனங்களோட ஏக போக வாரிசு.. அதுவும் பார்வதவர்த்தினி

அம்மாளோட பேத்தி உத்தரவு போட்டா.. அதை நான் மீற முடியுமா?'' கூறி விட்டு கலகலவென்று நகைத்தான் வசந்தன்.

வரிசை பற்கள் பளீரிட அவன் நகைத்தபோது.. மாநிறத் தில் களை பொருந்திய முகம் கூடுதல் பொலிவுடன் மிளிர்ந்ததை விழிகள் விரியப் பார்த்தாள்.

நான்கு விழிகளும் சந்தித்துக் கொண்டதும்.. தயக்க மாய் பார்வையைத் தழைத்துக் கொண்ட சாம்பவி,

''நான் முதல்லே நர்ஸ் சாம்பவிதான். உத்தரவு அது இதுன்னு பெரிய வார்த்தைகளைச் சொல்லாதீங்க வசந்த். எனக்கு வருத்தமா இருக்கு.

''மனசளவில் நா என்னிக்கும் வெறும் சாம்பவி தான். அதைப் புரிஞ்சுக்கோங்க.. ப்ளீஸ்.''

கரிய பெரிய விழிகளில் கண்ணீர் 'குபுக்' என்று பொங் கியது. இமைக் கரையைத் தாண்டி வழிந்து செல்லட்டுமா என்று வினவியது.

'வசந்த்.. நான் உங்களை மனசார விரும்புறேன். நான் அறியத் துடிச்ச ரகசியத்தை அம்பலத்துக்கு கொண்டு வந்து.. என் குழப்பத்தைத் தெளிய வச்சவர் நீங்க.

'என் பிறவிக்கு ஒரு அர்த்தம் கிடைச்சிருக்கே.. அது உங்க புண்ணியத்தால தான். உங்களைப் பார்த்த மாத்திரத்திலேயே.. நான் மனசைப் பறி கொடுத்துட்டேன். இது நிச்சயம் பூர்வ ஜென்ம பந்தமாத்தான் இருக்க முடியும்.

'வசந்த்! கோடீஸ்வரி பார்வதவர்த்தினியோட பேத்தியா என்னைப் பார்க்காதீங்க. அந்தஸ்து பேதத்தைக் காரணம் காட்டி என் காதலை ஏத்துக்க மறுத்துடுவீங்களோன்னு..



எனக்கு பயமா இருக்கு. வேணாம்.. எனக்கு எந்த சொத்து பத்தும் வேணாம்.

'உங்க உன்னதமான அன்பு கிடைச்சா போதும். உங்க இதயத்துல எனக்கொரு இடம் தருவீங்களா வசந்த்?' என்று கேட்டு விட அவளது நாக்கு துடித்தது.

ஆனால் பெண்மைக்கே உரிய நாணம் அவளுக்கு முட்டுக்கட்டை போட்டது.

'ஐ லவ் யூ' என்று தொண்டை வரை முட்டிக் கொண்டு வந்த வார்த்தைகளை சிரமப்பட்டு விழுங்கினாள்.

பார்வதவர்த்தினி அம்மாள் குடும்பத்திற்கு மிகவும் விசுவாசமாக இருக்கிறார். அந்த அம்மாளின் பேரில் மிகுந்த மரியாதை வைத்திருக்கிறார் வசந்த்.

அச்சு அசலாக பாட்டியை உரித்துக் கொண்டு வந்திருக் கிறேன். என்னை இவர் நேசிக்கிறாரா? அல்லது அந்தக் குடும்பத்தின் வாரிசு என் ரீதியில் அக்கறை மட்டும் காட்டுகிறாரா?

வசந்த் என்னைக் காதலிக்காவிட்டால் என்ன செய்வது?'

சந்தேகம் அவளை ஆக்கிரமித்து கேள்விக்கணை களைத் தொடுத்தது.

அவளது தேகம் மெல்ல நடுங்கத் தொடங்கியது. அவளது ரோஜா இதழ்கள் துயரத்தில் துடித்தன.

''சாரி சாம்பவி! நான் ஏதோ தமாஷா பேசினேன். உன்னை வருத்தப்படுத்தியிருந்தா.. மன்னிச்சுடு. சரியா?'' முறுவலித்தான்.

''ஊகூம்! மறுபடியும் எனக்கு வருத்தமா இருக்கு. 'மன் னிப்பு'ங்கிற பெரிய வார்த்தை எதுக்கு நமக்குள்ளே?''

''அடடா.. மறுபடியும் வருத்தப்படுத்திட்டேனா? அப்ப சாரி சாம்பவி. ஐயோ.. மறுபடியும் வருத்தப்படு வியா? சொல்லு.''

கண்களில் குறும்புத்தனம் மின்ன அப்பாவியாய் முகத்தை வைத்துக் கொண்டு அவன் கேட்டதும்'களுக்' என்று சிரித்து விட்டாள்.

கன்னத்தில் குழி விழ சிரித்த அந்த அழகுப் பெட் டகத்தை சட்டென்று அணைத்து முத்தமிட வேண்டும் என்று ஆவல் எழுந்தது.

மறுகணமே மனதிற்கு கடிவாளம் போட்டு அடக்கினான். 'இவளை நாளைக்கு பர்வதம் அம்மாளிடம் ஒப்படைக்க வேண்டும். இவளது உரிமையை நிலைநாட்டுவதற்கு பல இடையூறுகளும் தடைகளும் வரலாம்.

'அத்தனையையும் தாண்டிக் கடந்தாக வேண்டும். காதல் வயப்பட்டு விட்டால் கவனம் சிதறக்கூடும். இவளை அங்கு ஒப்படைத்த பின்பு.. எட்டாத கனியாகிவிடு வாளோ? இவள் எனக்குக் கிட்டுவாளா?

'அப்பழுக்கில்லாத இந்த அன்பு தேவதை எனக்கு கிடைக்காமலே போய் விட்டால்...?'

உள்ளுக்குள் 'மளுக்' என்று எதுவோ உடைந்தது போலிருந்தது.

அந்த இரு உள்ளங்களையும் காதல் தன் வசப்படுத்தி விட்டு.. அழகாய் கண்ணாமூச்சி ஆட்டம் ஆடியது.

# 11

பசும் தோட்டத்திற்கு நடுவே விஸ் தாரமான வெள்ளைக் கட்டிடம். முகப்பு



நெடுக படிகளும், அலங்கார வளைவுகளுமான கம்பீர பங்களா அது.

''வா... சாம்பவி! எங்கப்பா காலத்துல கட்டின வீடு இது. அம்மா சின்ன வயசிலேயே போயிட்டாங்க... ஒரே ஒரு அக்கா தான்.. கல்யாணமாகி அமெரிக்காவுலே செட்டி லாயிட்டாங்க.

''ரெண்டு வருஷத்துக்கு ஒரு வாட்டி வந்து போவாங்க. அப்பா போன பின்னாடி வீடே வெறிச்சோடி கிடக்கு. வா.. உள்ளே வா.''

நாலாபுறமும் பார்வையைச் சுழல விட்டாள் சாம்பவி. படுசுத்தமாய் கச்சிதமாய் இருந்தது.

''வசந்த்! இதை வீடுன்னு சொல்லாதீங்க.. பங்களான்னு சொல்லுங்க. ஆமா.. யாருமே இல்லன்னு சொல்றீங்க? இவ்ளோ சுத்தமா பராமரிக்கப்பட்டு இருக்கே?''

ஆச்சரியத்தில் அவளது விழிகள் மேலும் விரிந்தன.

''உம்! இது பங்களாவா? உங்க பாட்டியோட பங்க ளாவைப் பார்த்தீன்னா மயக்கமே போட்டுடுவே போலி ருக்கே? இதே மாதிரி நாலஞ்சு பங்களாவை அதுலே அடக்கிடலாம் தெரியுமா?

''இந்த வீட்டை சுத்தமா அழகா பராமரிச்ச பெருமை இதோ.. இவங்களைத்தான் சேரும்.'' அவன் சுட்டு விரலை நீட்டிய திசையில் பார்வையைத் திருப்பினாள்.

வயதான கணவனும் மனைவியும் பவ்யமாய் நின்று கொண்டிருந்தனர்.

''இவர் சாமிக்கண்ணு.. இவங்க வேலம்மா. தோட்டத் தையும் வீட்டையும் இவங்க தான் பராமரிக்கிறாங்க. வேலம்மா சமையலை சாப்பிட்டுட்டு அப்புறமா சொல்லு.. படு டேஸ்டா சமைப்பாங்க.

''ஏதோ ஒரு வகையில நான் கொடுத்து வச்சிருக்கேன். அதனாலதான் இவங்க எனக்கு வாய்ச்சிருக்காங்க.. சாம்பவி.''

''ஐயோ! பெரிய வார்த்தையெல்லாம் சொல்லாதீங்க ஐயா.. அம்மா வணக்கம்மா! மூணு பசங்களைப் பெத்தோம் அதுக அதுக கல்யாணமானதும் எங்களை உதறிட்டுப் போயிடுச்சுங்க... இவருக்கு ஆஸ்துமா பிரச்சினை. ஐயா கிட்டதான் வைத்தியம் பாத்துப்பாரு.. பசங்க எங்களைக் கை விட்டுப் போனதும் மருந்து மாத்திரை வாங்கக் கூட காசு இல்ல.. இந்தஊர்லே நாதியத்துப்போய் இருக்கப் பிடிக்கலை.

''கண்காணாம வேற ஊருக்குப் போயிடலாம்னு கிளம்பின நேரத்துல.. ஐயா அவுக பாத்துட்டாரு. இவரு மொகத்தைப் பார்த்ததும் கொட்டித் தீர்த்துக் கதறிட்டோம்.

''என்னை உங்க மகனா நினைச்சுக்கோங்க.. நானும் யாருமில்லாம அனாதை மாதிரி இருக்கேன். நாம ஒருத்தருக்கொருத்தர் ஆதரவா... அனுசரணையா இருந்துட்டுப் போவோமே? என்னத்தை அள்ளிட்டுப் போகப் போறோம்'னு ஐயா கேட்டாரு.

''மறுக்க முடியாம வந்துட்டோம் தாயி. இப்படி பாசமா கரிசனத்தோட நடந்துக்கற புள்ளையை ஊரு உலகத்துல எங்கயும் பார்க்கவே முடியாதும்மா...

''அடுத்தவங்களுக்கு உபகாரம் பண்றதுன்னா.. ஐயாவுக்கு வெல்லம் சாப்பிடற மாதிரி.. அப்படியொரு தங்கமான மனசு தாயி...

''நாங்க குடுத்து வச்சிருக்கோம் தாயி.''

நெற்றியில் குங்குமம் துலங்க கொண்டையைச் சுற்றி மல்லிகைச் சரத்தை சுற்றிக்கொண்டு, சுங்கடி சேலையில்



படு சுத்தமாய் தெரிந்த வேலம்மாளின் குரலில் நன்றி உணர்வு நன்கு பிரதிபலித்தது.

''அட.. என்ன வேலம்மா நீங்க? வந்ததும் வராததுமா இதெல்லாம் சொல்லிட்டிருக்கீங்க? சாம்பவி ரொம்ப களைப்பா தெரியறா.. அவ தங்கப் போற அறையைக் காட்டுங்க.

''சாம்பவி! குளிச்சுட்டு வா. சேர்ந்து சாப்பிடலாம்.'' மாடிப்படிகளை இரண்டு இரண்டாகத் தாவி ஏறிச் சென்றவனையே கண் கொட்டாமல் பார்த்தாள்.

'பெற்றவர்களையே துச்சமாகத் தூக்கியெறிந்து விட்டுச் செல்லும் மனிதர்களின் மத்தியில்... ஒட்டு, உறவில்லாதவர்களை அழைத்து வந்து வீட்டில் சகல உரிமையோடு தங்க வைத்து உறவாட.. எப்பேர்ப்பட்ட மனசு இருக்க வேண்டும்?

'எங்கள் குடும்பத்தின் மீது வைத்த விசுவாசத்தின் பேரில் தான்.. எனக்கு உதவுகின்றார் என்று நினைத்தேனே? அது எவ்வளவு பெரிய தவறு?'

எப்பேர்ப்பட்ட பரோபகாரி வசந்த்...

வசந்தனின் மீது மதிப்பும் மரியாதையும், காதலும் பெருகிக் கொண்டே போனது.

எந்தக் கோணங்களிலிருந்து பார்த்தாலும் இப்படி காட்டாறு போல திபுதிபுவென்று நிமிடத்திற்கு நிமிடம் தீவிரமடைந்து வரும் காதல்.. அவளை அலைக்கழித்தது.

அன்றிரவு தூக்கம் வராமல் வெகுநேரம் புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தாள் சாம்பவி.

அன்று குளித்து சாப்பிட்டுவிட்டு அசதி தீர சற்றுக் கண் அயரலாம் என்று படுத்தவள் தான்.. அடித்துப்

போட்டது போல் மாலை வரை உறங்கி விட்டிருந்தாள்.

வசந்தன் தனது நர்ஸிங்ஹோமை கவனிக்கச் சென்று விட்டிருந்தான்.

''மதியம் சாப்பாடு தயாரானதும் உங்களை எழுப்பலாம்னு பாத்தேன். வசந்தன் ஐயா தூக்கத்தைக் கெடுக்க வேண்டாம்னு சொல்லிட்டாரு...

''மாலை டிபனுக்கு அடை அவியல் பண்ணியிருக்கேன். சூடா தேங்காய் பால் காபியும் இருக்கு. சாப்பிட நீங்களா அம்மா?''

அக்கறையாய் கேட்ட வேலம்மாவைப் பார்த்து இதமாய் புன்னகைத்தாள்.

''உம்! அடைன்னா.. எனக்கு ரொம்பவும் பிடிக்கும். ஆமா.. தேங்காய் பால் காபியா? வித்தியாசமா இருக்கே?

கையில் ஏந்திய தட்டையும் பிளாஸ்கையும் மோடாவில் ஆர்வமாய் வைத்தாள் வேலம்மா.

''தேங்காயைப் பிழிஞ்சு பாலெடுத்து அதுலே கருப்பட்டி தட்டிப் போட்டு காபி போடணும். வசந்தன் ஐயாவுக்கு இந்த காபி ரொம்பவும் பிடிக்கும். பருப்பு அடைன்னா... அவருக்கு உசிரு..''

உண்மையிலேயே அடை சூடாக சுவையும் மணமுமாக இருந்தது. தேங்காய்ப் பால் காபி கமகமவென்று வெகு ருசியாக இருந்தது.

''அடடா.. வேலம்மா! நாக்கைச் சுழட்டறாப்பல... என்னவொரு ருசி? இந்த கைப் பக்குவத்துக்கு பரிசா தங்கக்காப்பு போடணும்.''



''போங்கம்மா. ஐயாவும் இதே மாதிரி தான் அடிக்கடி சொல்லுவாரு'' சங்கோஜமாய் தட்டை எடுத்துக் கொண்டு நகர்ந்தாள் வேலம்மா.

சாம்பவிக்கு உள்ளூர சந்தோஷம் மொட்டு விட்டது.

'இருவருக்கும் ஒரே மருத்துவத்துறை.. ஒரே மாதிரியான ரசனை, ஆர்வம், ஈடுபாடு எல்லாம் ஒரே அலைவரிசையில் அமைந்திருக்கின்றனவே...

'அவரைக் கைப் பிடிக்கும் பாக்கியம் மட்டும் கிடைத்து விட்டால்... நான் அதிர்ஷ்டசாலிதான்.

'பகவானே.. இந்தப் பேதைப் பெண்ணுக்கு இரக்கம் காட்டு.. ஐயனே! உனக்கு நான் வடை மாலை சாத்தறேன்.'

நங்கநல்லூர் ஆஞ்சநேயரை உள்ளம் உருக வேண்டிப் பிரார்த்தனை செய்தாள் சாம்பவி.

அதன்பின் பொழுதே அவளுக்கு நகரவில்லை. கால்கள் ஓயும்வரை தோட்டத்தில் உலாத்திக் கொண்டிருந்து விட்டு இருள் கவியத் தொடங்கியதும் தான் வீட்டிற்குள் நுழைந்தாள்.

வசந்தன் வந்ததும் அவனுடன் சேர்ந்து சாப்பிடலாம் என்று ஆர்வமாய் காத்திருந்தவளுக்கு ஏமாற்றம் தான் மிஞ்சியது.

இரவு ஒன்பது மணி வாக்கில் வசந்தன் ஃபோன் செய்து பேசினான்.

''சாரி சாம்பவி! இவ்ளோ நேரமா சாப்பிடாம.. எனக்காக காத்திட்டிருக்கியா? அவுட் பேஷண்ட்ஸ் இன்னிக்கு ஜாஸ்தி.. நகர முடியல.. கிளம்பற நேரத்துல எமர்ஜென்ஸி கேஸ் வந்திருச்சு.. நான் வரதுக்கு லேட் நைட்டாயிடும்.

''சாப்பிட்டுட்டு நிம்மதியா தூங்கு. காலைலே பார்க்கலாம்.''

''நானும் உங்க கூடவே வந்திருக்கணும் வசந்த். எமர்ஜென்ஸி கேஸ்லே.. ஒரு நர்ஸா இருந்து உங்களுக்கு உதவலாம் இல்லையா?''

''உம்! உதவலாம் தான்.. ஆனா உங்க பாட்டிக்கு இது தெரிஞ்சா... என்னை மாறுகால், மாறுகை வாங்கிட்டுத் தான் மறுவேலை பார்ப்பாங்க.. அவ்ளோ ப்ரஸ்டீஜ். நீ வெறும் சாம்பவியா இருந்திருந்தா... நான் உரிமையா நர்ஸிங்ஹோமுக்கு கூட்டிட்டுப் போயிருப்பேன் தெரியுமா? விடிஞ்சா.. உன்னோட அந்தஸ்தே வேற...

''சரி.. நிம்மதியா தூங்கு. காலையிலே பாட்டியைப் பார்க்கப் போகும்போது புத்துணர்ச்சியோட பொலிவா இருக்கணும். குட் நைட்.''

மறுமுனையில் சிரித்தபடி ஃபோனை வைத்துவிட்டான் வசந்தன். 'வசந்த்! நான் நர்ஸ் சாம்பவிதான். உங்க கையைக் கோர்த்துக்கிட்டு மருத்துவத்துறையில நிறைய சேவை செய்யணும். ஒரு நல்ல மனைவியா இருபத்து நாலு மணிநேரமும் உங்களை.. நான் பார்த்துக்கணும்னு துடிக்கிறேன். இது உங்களுக்குப் புரியலையா?

'இந்த பாழாய் போன அந்தஸ்து என்னைச் சுத்தி அரண்போட்டு.. உங்களை என்கிட்டயே அண்டவிடாது போலிருக்கே?'

சாம்பவியின் உள் மனம் கூக்குரலிட்டது. அவளது விழியோரங்களில் வாய்க்கால் போட்டுக் கொண்டு இறங்கிய கண்ணீர்.. தலையணையை நனைத்தது.

மிகப்பெரிய ஆபத்து.. அவளுக்காக வழி மேல் விழி வைத்துக் காத்துக் கொண்டிருந்தது.



## 12

மருத்துவ நாளேட்டைப் புரட்டிக் கொண்டிருந்த வசந்தன், சாம்பவி அருகில் வந்து நின்றதும் மெல்ல ஏறிட்டான்.

குளித்துவிட்டு தளரப் பின்னியிருந்த நீண்ட கூந்தலில் காதோரத்தில் ஒற்றை ரோஜாவைச் செருகி இருந்தாள்.

சரிகை பார்டர் போட்ட சாம்பல் நிற காட்டன் புடவையில் பாந்தமாகவும் படு கம்பீரமாகவும் நின்றிருந்தாள்.

கண்களில் ஒரு வித சோகம் குடியிருந்தது. ஏதோ அவனிடம் சொல்லத் துடிப்பது போன்ற முக பாவம்...

முதல் நாள் பள்ளிக்குச் செல்லும் பிஞ்சுக் குழந்தையைப் போன்ற மனோபாவம்.. விட்டால் கோவென்று அழுது விடுவாள் போலிருந்தது.

''என்ன சாம்பவி இது? உங்கபாட்டி வீட்டுக்குத்தானே போறோம்? உங்கப்பா பிறந்து வளர்ந்த இடத்தைப் பார்க்கணும்னு ஆசைப்பட்டுத்தானே வந்தே?

''மனசுக்குப் பிடிக்காத இடத்துக்கு.. வேண்டா வெறுப்பா கிளம்பி வர்ற மாதிரி இருக்கு? புது இடம்னு.. நைட்லே சரியா தூக்கம் பிடிக்கலையா? கண்ணெல்லாம் வீங்கி இருக்கு.. பயமா இருக்கா?

''பீ சியர் ஃபுல்! நானிருக்கேன் இல்ல?'' பொங்கி வந்த அழுகையை உதட்டைக் கடித்து அடக்கிக் கொண்டாள்.

மனதில் உள்ளதைக் கொட்டித் தீர்த்து.. அவனது மார்பில் சாய்ந்து கதற வேண்டும் போலிருந்தது.

தயக்கமாய் அவனை ஏறிட்டபோது.. வசந்தனது பார்வை சிறு ரசனையுடன் அவளது இதழ்களில் படிந்து மீண்டதை கவனித்து விட்டாள்.

'இந்தக் கண்களில் மிதப்பது வெறும் கனிவு மட்டு மல்ல... காதலும்தான்.'

அவளது உள் மனம் அறுதியிட்டு உறுதி செய்தது.

குபீரென்று மகிழ்ச்சி வெள்ளம் கரை புரண்டது. சந் தோஷத்தில் அவளது முகம் குங்குமமாய் சிவந்து போனது.

''பயம்தான்! பாட்டி கூடவே இருக்கற அந்த கும்பலை நெனச்சா.. ரொம்பவே திகிலா இருக்கு வசந்த்.''

''பயத்தைத் தூக்கி எறி சாம்பவி... இதோ வலது பக்கமா இருக்கற பூஜை அறைக்குள்ளே போயி நல்லா வேண்டிக் கிட்டு விபூதி வச்சுக்கிட்டு கிளம்பு போலாம்.''

'ஊகூம்! இவள் என்னிடமே மறைக்கிறாள். இவளது முக வாட்டத்திற்குக் காரணம் வெறும் பயம் தானா? இல்லை...

'எதுவாக இருந்தாலும் சரி. இவளுக்கு ஒன்றுமே நேராமல் காப்பது என் கடமை. உயிரைக் கொடுத்தாவது இவளை நான் காப்பாற்றியாக வேண்டும்.'

தனக்குள்ளே பேசிக் கொண்டான் வசந்தன்.

உண்மையில் அவனுக்கும் உதறலாகத்தான் இருந்தது.

'பர்வதம் அம்மாளிடம் அவளது பேத்தியை மட்டுமா ஒப்படைக்கப் போகிறான்? அவனது உயிரையே ஒப் படைக்கப் போகிறானே?'

அவன் மனம் பதறாமல் இருக்குமா? மனதைக் கவர்ந்த இனியவள்.. உயிரினும் மேலானவளாயிற்றே?'

பூஜையறையிலிருந்து வெளிப்பட்டு வேலம்மாவிட மும், சாமிக் கண்ணுவிடமும் சொல்லிக் கொண்டு விடைபெற்றாள் சாம்பவி.



வெகு லாவகமாய் ஜீப்பை ஓட்டினான் வசந்த். வளை வுகளில் வாகனம் சரிந்து திரும்பாமல் பதமாய் சென்றது.

இரு இளம் உள்ளங்களிலும் பதற்றம் பந்தாய் மோதி அலைந்தது.

அந்த பங்களா மிகப் பிரம்மாண்டம்தான். அவற்றின் ஆறடி உயர கண்ணாடி ஜன்னல்கள்.. காலைச் சூரியனில் பளபளவென்று ஜொலித்தன.

ஒவ்வொரு ஜன்னலின் மீதும் குடை விரித்தாற்போல் சிகப்பு செங்கல் அமைப்பு. வீட்டு அமைப்பைத் தூக்கி காட்டுவதற்கென்றே சுற்றிலும் மரகதப் புல்வெளி. பாத்திகள்.. சிகப்பு சால்வியா மலர்கள்.. சற்றுத்தள்ளி ஜோடியாய் செண்பக மரங்கள்...

அகல முன் போர்டிகோவில் ஒருங்கே ஆறேழு பென்ஸ் கார்கள் நிற்கலாம். அதைத்தாண்டி விஸ்தாரமான புல்வெளி.

அதன் நடு நடுவே வித விதமான வண்ணங்களில் ரோஜாச் செடிகள்... ஆங்காங்கே பால் முட்டை விளக்கு களுடனான பளிங்குத் தூண்களுமாய்.. கலை நயத்துடன் கண்களைக் கவர்ந்து மனதைக் கட்டிப் போட்டதை.. வியப்புடன் பார்த்தாள் சாம்பவி.

''வா சாம்பவி'' என்று கூறிவிட்டு இறங்கி நடந்தான். தாடை இறுக விரைந்தவனின் பின்னால் அரக்கப் பரக்க விழித்தபடி ஓட்டமும் நடையுமாகச் சென்றாள்.

''வணக்கம் டாக்டர் ஐயா! நல்லாயிருக்கீங்களா? வாங்க.. அம்மா அவுக பூஜை ரூம்லே இருக்காக... வர்ற நேரம் தேன். உட்காருங்க.''

அழகிய வேலைப்பாட்டுடன் திகழ்ந்த பூ ஜாடியில், அன்றலர்ந்த ரோஜா மலர்களை நேர்த்தியாக அடுக்கிக் கொண்டிருந்த வேலைக்காரி அஞ்சலை உரிமையுடன் வசந்தனைப் பார்த்துப் பேசினாள்.

அவனுக்குப் பின்னால் தயங்கி வந்து நின்ற பெண்ணைப் பார்த்ததும் அவளுக்கு திக்கென்றிருந்தது.

''அட! இது என்னாடி அதிசயம்'' தனக்குள் முணுமுணுத்துக் கொண்டவளுக்கு... அதற்கு மேல் அங்கே இருப்புக் கொள்ளவில்லை.

தான் கண்ட அதிசயத்தை சமையல்காரியிடமும் மற்ற ஊழியர்களிடமும் உடனடியாகக் கூறாவிட்டால்.. அவளுக்கு மண்டையே வெடித்து விடுமே..

பங்களாவின் உள் அலங்காரத்தைப் பார்த்து ஏகத்திற்கும் பிரமித்துப் போயிருந்த சாம்பவி ஆவலுடன் பார்வையைச் சுழலவிட்டாள்.

சந்தன மாலை சூடப்பட்டிருந்த அந்த ஆளுயர போட்டோவில் அவளது விழிகள் படிந்தன.

''அவர் தான் சாம்பவசிவம் ஐயா.. எஸ்.எஸ். ஐயான்னு எல்லாரும் சுருக்கமா கூப்பிடுவாங்க... இதோ எதிர்த்தாப்பல பார்.. இவர் தான் ராஜதுரை.''

வசந்தன் மெல்லிய குரலில் சொல்லி முடித்தது தான் தாமதம்.. படாரென்று எழுந்து அந்த போட்டோவின் அருகே சென்று அண்ணாந்து பார்த்தாள்.

ஓங்கி உயரமாக பார்ப்பதற்கு ராஜகளையுடன் அம்சமாகத் திகழ்ந்த அப்பாவின் உருவத்தை விழிகள் விரியப்பார்த்து மனதில் பதித்துக் கொண்டாள்.



''அ... அப்பா! உங்களோடு வாழ எங்களுக்கு கொடுத்து வைக்கலியே?'' அவளையும் அறியாமல் துக்கத்திலும் பாசத்திலும் மெல்லப் புலம்பினாள்.

''வசந்த்! இன்னிக்குத்தான் இவரோட ஃபோட்டோவை பார்க்கற பாக்கியமே கிடைச்சிருக்கு. பிரச்சினை வரும்னு பயந்ததாலயோ என்னமோ... ஒரு பாஸ்போர்ட் சைஸ் போட்டோவைக் கூட அம்மா என்கிட்ட காட்டினதில்லை.

''கணவரோட ஞாபகார்த்தமா தன் கிட்ட எந்தப் பொருளையும் வச்சிக்கலை.. எனக்காக எவ்ளோ தியாகம் பண்ணியிருக்காங்க அம்மா'' தளர்ந்த நடையுடன் வந்தமர்ந்தாள்.

மெல்ல விசும்பத் தொடங்கியவளின் தோளில் ஆதுரமாக கை வைத்தான்.

''கண்ட்ரோல் யுவர்செல்ஃப் சாம்பவி! நல்லகாலம்.. அந்தக் கழுகுங்க யாரும் கண்ணுலேயே படலை. தைரியமா இருந்தாத்தான் எதையும் சமாளிக்க முடியும். அதோ.. பர்வதம் அம்மா வர்றாங்க.. பார்.''

சட்டென்று எழுந்து நின்றான் வசந்தன். அவனது பார்வை சென்ற திசையிலேயே பயணித்தவள்.. ஸ்தம்பித்துப் போய் நின்றுவிட்டாள்.

''வாப்பா வசந்தன்! சென்னைக்கு.. ஏதோ கருத்தரங்கத்திற்கு போனே இல்ல..? டெய்லி செக்கப்புக்கு உன்னோட உதவி டாக்டரை அனுப்புனே இல்லையா? சரியான கத்துக்குட்டி பயல்..''

சால்வையைப் போர்த்தியபடி பூஜை அறையிலிருந்து வெளிப்பட்ட பர்வதவர்த்தினி.. கையில் வைத்திருந்த தங்க பிரேமிட்ட கண்ணாடியை நாசுக்காக சால்வையால் துடைத்தபடி பேசிக் கொண்டே நெருங்கி வந்தார்.

''உட்காருப்பா.. உங்கப்பாவுக்கு அப்புறமா.. உன்கிட்ட வைத்தியம் பாத்துக்கிட்டாத்தான் எனக்கு திருப்தி. அந்த கத்துக்குட்டி வைத்தியரை திட்டி அனுப்பிச்சுட்டேன். உட்கார்.. ஆமா.. யார் இந்தப் பொண்ணு..?''

மூக்கு கண்ணாடியை அணிந்து கொண்டு ஏறிட்டவருக்கு தூக்கி வாரிப்போட்டது.

## 13

அன்று அதிகாலையிலிருந்தே பர்வத்தின் மனம் நிலைகொள்ளாமல் தவித்தது. இனம் புரியாத பரவசத்தில் மனம் தத்தளித்தது.

அதற்கு காரணம் அவர் கண்ட கனவுதான்.

மகன் ராஜதுரையின் ஆளுயர படத்திற்குக் கீழே சுருண்டு படுத்திருக்கிறார் பர்வதம். குளிர் காய்ச்சல் வந்தது போல் அவரது உடம்பு வெடவெடவென்று நடுங்கிக் கொண்டு இருக்கிறது.

ஒரு பொட்டு வெளிச்சம்கூட இல்லாமல் எங்கும் மையிருட்டு அப்பிக் கிடக்கிறது.

''பர்வதம்.. பர்வதம்! எழுந்துக்கோ.. ஏன் இப்படி சுருண்டு படுத்திருக்கே?''

மறைந்த சாம்பசிவத்தின் பரிவான குரலைக் கேட்டதும்.. வாரிச் சுருட்டி எழுந்து கொண்டார் பர்வதம்.

'குரல் மட்டும் கேட்கிறதே? எதையும் பார்க்க முடியாமல் இருள் சூழ்ந்து கொண்டிக்கிறதே?'' பரிதவிக்கிறார் பர்வதம்.



''என்ன பர்வதம்? அப்பாவும் புள்ளையுமா நம்மை தவிக்க விட்டுட்டுப் போயிட்டாங்களேன்னு.. துடிக்கிறியா?

'இந்த வம்சத்துக்கு வாரிசு இல்லையேன்னு வேதனைப் படறியா? நம்ம வம்சம் பட்டுப்போச்சுன்னு பைத்தியக் காரத்தனமா ஏன் நெனக்கிறே?

''வாழையபடி வாழையா அது தழைக்கத்தான் போகுது பர்வதம்.''

மீண்டும் சாம்பசிவத்தின் குரல் கணீரென்று கேட்கிறது.

''என்னங்க சொல்றீங்க?''நடுங்கிய குரலில் அவர் கேட்டு முடிப்பதற்குள்.. பளீரென்று கண்களைக் கூச வைக்குமளவு வெளிச்சம் பரவி இருட்டை விரட்டுகிறது.

''வாழையடி வாழையா நம்ம வம்சம்.. தழைக்கும்னா சொல்றீங்க...? நீங்க எங்கே இருக்கீங்க.. என்னங்க?''

கண்களில் தாரை தாரையாகக் கண்ணீர் வழிய நாலாபுறமும் திரும்பித் திரும்பி தேடுகிறார் பர்வதம்.

''என்னங்க..'' கத்தியபடி சடாரென்று எழுந்து அமர்ந்தார் பர்வதம்.

இதுவரை கண்டது கனவுதான்.. நிஜமல்ல என்பது சில நிமிடங்களில் புரிபட மெல்லப் பக்கவாட்டில் திரும்பினார்.

இரவு விளக்கின் வெளிச்சம் மங்கலாக அழுது வடிந்து கொண்டிருக்க.. பட்டனைத் தட்டி குழல் விளக்கைப் பொருத்தி சுவர்க் கடிகாரத்தை அண்ணாந்து பார்த்தார்.

நாலரை மணி...

அதிகாலை கண்ட கனவு பலிக்கும் என்று சொல்வார்களே?

கணவர் சாம்பசிவத்தின் குரல் அசரீரி போல் ஒலித்ததே? 'அவர் கூறியதுபோல் இந்த வம்சம் தழைக்குமா? இருக்கும் ஒரே மகனைத்தான் எமனுக்கு வாரிக் கொடுத்து விட்டேனே?

எப்படி வம்சம் தழைக்குமாம்?

இந்தக் கனவுக்கு என்ன அர்த்தம்?'

இனம் புரியாத இன்ப உணர்வில் மெய் சிலிர்த்தது... உள்ளத்தில் குதூகலமும் பரவசமும் குதியாட்டம் போட்டன.

தலைமாட்டில் கணவரும் மகனுமாய் இணைந்திருந்த புகைப்படத்தைத் தொட்டு வணங்கி விட்டு... யோசனையில் மூழ்கியபடி மீண்டும் படுக்கையில் சரிந்து படுத்தார்.

அவரது நினைவலைகள் பின்னோக்கிச் சுழன்றன.

மகன் ராஜதுரையின் மீது அவர் உயிரையே வைத்திருந்தார்.

அவரிடம் ஒரு வார்த்தை கூட கூறாமல் ராஜதுரை மஞ்சுளாவைத் திருமணம் செய்து கொண்டு வந்து நின்றதும்.. பர்வத்தின் இதயத்தில் இடியே விழுந்தது போலிருந்தது.

'அம்மாவின் மனம் என்ன பாடுபடும்? என்று நினைத்துப் பார்க்காமல்.. குடும்ப கௌரவத்தைக் குழி தோண்டிப் புதைத்து விட்டானே?

'எப்பேர்ப்பட்ட பாரம்பரியமான குடும்பத்தில் பிறந்து விட்டு தன் அந்தஸ்தை மறந்துவிட்டு.. ஊர், பேர் தெரியாத நாட்டியக்காரிக்கு தாலி கட்டி விட்டானே?'

வெறுப்பின் மிகுதியில் வெகுண்டு போனார் பர்வதம். ராஜதுரையிடம் பாராமுகமாய் இருந்தவர்தான்... நாளடை



வில் அவரது மனம் இளகத் தொடங்கியது.. மருமகள் மஞ்சுளா கர்ப்பமடைந்த விஷயத்தைக் கேள்விப்பட்டதிலிருந்து அவருக்கு இருப்பே கொள்ளவில்லை.

மகனையும் மருமகளையும் வீட்டிற்கு அழைத்து வந்துவிட உள்ளம் துடித்தது.

'தப்பு செய்தது அந்தப் பயல்தானே? சரி.. ஏதோ நடந்தது நடந்து போச்சு.. எங்களை மன்னிச்சு ஏத்துக்கோம்மா..' அப்படின்னு மனைவியை அழைத்துக் கொண்டு வந்தால்.. நானென்ன வேண்டாம்னு உதறவா போறேன்?

'நான் இறங்கிப்போய் கெஞ்சிக் கூப்பிட்டாத்தான் வருவாங்களா? இந்தப் பயலுக்கு இவ்வளவு வறட்டு கவுரவமா?'

தனக்குள் அடிக்கடி புலம்பிக் கொண்டார். இன்னும் ஒரு மாதம் கழித்து மஞ்சுளாவை அழைத்து வந்து ஆசை தீர சீராட்டி விட வேண்டும் என்று முடிவு செய்திருந்த தருணத்தில் தான் அந்தக் கோர விபத்து நடந்துவிட்டது.

மகனை இழந்த துக்கம் அவரை உலுக்கி நொறுக்கி விட்டது.

'பட்ட காலிலேயே படும். கெட்ட குடியே கெடும்' என்பதற்கேற்ப இன்னொரு அதிர்ச்சி.. அவரது தலையில் அணுகுண்டைப் போட்டது.

அவரது ஒன்றுவிட்ட தங்கை விசாலத்தின் கணவர் மார்த்தாண்டம் விழிகள் சிவக்க கேவியபடி ஓடி வந்தார்.

''அண்ணி! ராஜதுரை இறந்த துக்கம் தாளாம அந்தப் பொண்ணு... அதான் உங்க மருமக தலைவிரி கோலமா மலைமுகட்டிலேர்ந்து குதிச்சு தற்கொலை பண்ணிக்கிடுச்சு அண்ணி.. நம்ம தேயிலைத் தோட்டத்து முனியன்தான் அதைப் பாத்துட்டு சொன்னான்.''

''ஐயோ! இந்த வீட்டு வாரிசை சுமந்துட்டிருந்தாளே பாவிப்பொண்ணு.. இப்படியொரு காரியத்தைப் பண்ணிட் டாளே ஐயோ.. நான் என்ன பண்ணுவேன்?''

முகத்தில் அறைந்து கொண்டு கதறினார் பர்வதம். 'பிறந்த வீட்டு ஆதரவும் இல்லை. புகுந்த வீட்டில் ஏற்றுக் கொள்ளவும் இல்லை. காதலித்துக் கரம் பிடித்த கணவன் விபத்தில் அகால மரணமடைந்துவிட்டான். இனி இந்த உலகத்தில் நிர்க்கதியாய் வாழ வேண்டுமா?' என்ற விரக்தி யில் மருமகள் மஞ்சுளா தற்கொலை செய்து கொண்டதை எண்ணி.. குற்றவுணர்வில் அனலிடைப்பட்ட புழுவாய் துடித்துப்போனார் பர்வதம்.

''ஐயோ! மஞ்சுளா... நா அன்னிக்கே உங்களை ஏத்துக்காம போனேனேம்மா.. நா ஏத்துக்கிட்டிருந்தா.. நிச்சயமா நீ இந்த முடிவுக்கே வந்திருக்க மாட்டியேம்மா... நான் கர்ப்பிணியை சாக விட்டுட்டேனே? மகா பாவத் துக்கு ஆளாயிட்டேனே?''

கல் மனதும் கரையும் வண்ணம் கதறினார் மரகதம்.

அந்த அதிர்ச்சியிலிருந்து மீண்டு வர பல மாதங்கள் பிடித்தன.

பர்வதவர்த்தினிக்கு தியானம், ஆன்மிகம் ஆகியவற் றில் நாட்டம் அதிகம்.

மாபெரும் சோகக் கடலிலிருந்து மீண்டு வர.. அவை அவருக்குத் துடுப்புகளாக பயன்பட்டன.

எஸ்.எஸ். நிறுவனங்களை நம்பி ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வாழுகின்றனவே...



அவற்றைக் கட்டிக் காப்பது தன் தலையாய கடமை ஆயிற்றே என்று உணர்ந்த பர்வதம்.. கை தேர்ந்த ஆட்களை நியமித்து அவர்களின் துணையுடன் தானே.. அத்தனை நிறுவனங்களையும் நிர்வகித்தார்.

''கிருஷ்ணா.. ராமா'' என்று கோவில் குளத்தைச் சுற்றிக் கொண்டு 'அக்கடா' என்று இருக்க வேண்டிய வயதில்.. மிகப்பெரிய பாரத்தை சுமக்க வேண்டியிருக்கிறதே என்று உள்ளூர ஆதங்கப்பட்டார் பர்வதம்.

விசாலம் - மார்த்தாண்டம் தம்பதியினரின் மகள் வயிற்றுப் பேரன் கவுதம்... பர்வதத்தின் மனதை காந்த மாய் ஈர்த்து விட்டிருந்தான்.

ராஜதுரையின் மரணத்திற்குப் பிறகு..அவ்வப்போது வந்து தங்கிச் சென்ற விசாலம் தம்பதியினர். ஒரேயடியாக பர்வதத்தின் பங்களாவிலேயே 'டேரா' அடித்து விட்டனர்.

மகனை இழந்து வம்ச வாரிசும் அழிந்து விட்ட கவலையில் வறண்டு கிடந்த பர்வதத்தின் நெஞ்சில்... பாச நீரூற்றைச் சுரக்கச் செய்தவன் கவுதம்!

ஐந்து வயது சிறுவனாக 'பாட்டிம்மா.. பாட்டிம்மா' என்று அவரது கால்களைச் சுற்றி வந்து.. அவரைப் பாசத்தால் கட்டிப் போட்டான் கவுதம்.

பேரன் கவுதமை ஒரு துருப்புச் சீட்டாகப் பயன் படுத்தி அன்பால் பர்வதத்தை இளக வைத்து.. பாச வலைக்குள் வசமாக சிக்க வைத்திருந்தனர் விசாலம் தம்பதியினர்.

சமீபத்தில்... பாரினில் எம்.பி.ஏ. முடித்து விட்டு வந்த கவுதம் எஸ்.எஸ். நிறுவனங்கள் அனைத்தையும் நிர்வகிக்கத் தொடங்கினான்.

சரி வர நிர்வகிக்கின்றானா? என்று கண்காணித்துக் கொண்டிருந்த பர்வதத்திற்கு ஓரளவு திருப்தி ஏற்பட்டிருந்தது.

எஸ்.எஸ். குடும்பத்தின் அனைத்துச் சொத்துக்களுக்கும் 'கவுதம் தான் வாரிசு' என்று ஊர் மக்களும் ஊழியர்களும் ஊர்ஜிதமாக நம்பிக் கொண்டிருந்தனர்.

குடும்ப வக்கீலை அழைத்து கவுதமுக்கே அனைத்து சொத்துக்களும் சேர வேண்டும் என்று எழுதி வைத்துவிட தீர்மானித்திருந்தார் பர்வதம்.

இன்று அதிகாலை கண்ட கனவுக்குப் பின்பு.. அவருக்கு தூக்கமே வரவில்லை.

பேரன் கவுதமும் விசாலம் தம்பதியினரும் திருச்சிக்குச் சென்று விட்டனர். உறவினர் வீட்டுத் திருமணத்தில் கலந்து கொள்வதற்காகச் சென்றுவிட்டிருந்தனர்.

உற்சாக மிகுதியில் சால்வையைப் போர்த்திக்கொண்டு தோட்டத்தில் வெகுநேரம் 'வாக்கிங்' செய்துவிட்டு குளித்தார். குளித்து விட்டு பூஜையறைக்குச் சென்று தியானத்தில் அமர்ந்து விட்டிருந்தார்.

''வசந்தன்.. வச.. வசந்தன்.. யாருப்பா? இவ.. இந்தப் பொண்ணு.. அப்படியே அச்சு அசலா ராஜதுரையை உரிச்சுட்டு வந்திருக்கா...

''எப்படி? எப்.. எப்படி வசந்தன்? இன்னிக்குக் கார்த்தால கனவுல.. ஐயா சொன்னாப்பல நடக்குதே? ஐயோ இதுவும் கனவு தானா?

''வசந்தன்.. என்னப்பா இது? சீக்கிரம் சொல்லேன்.''

அதீதமாக உணர்ச்சி வசப்பட்டதாலோ.. தள்ளாமையினாலோ.. அவரது கரங்கள் கிடுகிடுவென்று நடுங்கின.



''மேடம்.. எந்திரிங்க! நாம்ப உங்க ரூமுக்குப் போகலாம். உங்களுக்கு செக்கப் செய்துட்டு நிதானமா சொல்றேன். பதட்டப்படாதீங்க.. வாங்க.''

அந்த விஸ்தாரமான ஹாலில் அமர்ந்து விஷயத்தை வெட்ட வெளிச்சமாக்க விரும்பவில்லை.

மனதில் துளிர்த்த சந்தேகத்தை.. அவரது காதில் போட்டு வைத்து எச்சரிக்கையுடன் இருக்கச் சொல்ல வேண்டும் என்று விரும்பினான் வசந்தன்.

## 14

நாட்கள் ஜெட் வேகத்தில் பறந்தன. சாம்பவி, பாட்டி பார்வதத்திடம் வந்து சேர்ந்து மூன்று மாதங்கள் ஆகிவிட்டன.

சாம்பவி தணலில் நின்றிருப்பது போன்று உள்ளூர தவித்துத்தான் போனாள்.

எஸ்.எஸ். நிறுவனங்களின் நிர்வாகத்தை.. வயது முதிர்ந்த அனுபவமிக்க நபரின் மூலமும் கவுதமின் மூலமும்.. சகலமும் அசுர வேகத்தில் கற்றுக்கொண்டு.. தனி மனுஷியாய் அதை நிர்வகிக்கும் அளவு தேறி விட்டிருந்தாள்.

அன்று.. கல்யாணத்திற்குச் சென்று விட்டு சாவகாசமாக வந்து இறங்கிய கவுதம், விசாலம், மார்த்தாண்டம் ஆகியோர்.. இவளைப் பார்த்தும் கதி கலங்கி விட்டனர்.

'சொத்தை ஆள உண்மையான வாரிசு வந்து விட்டதே? கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் போய் விட்டதே? இத்தனை காலமும் நம் கண்ணிலேயே அகப்படாதவள்.. திடுதிப்பென்று எங்கே இருந்து வந்து குதித்தாள்?'

விசாலமும் மார்த்தாண்டமும் அவளைப் பார்வையா லேயே எரித்து சாம்பலாக்கி விடுவது போல் குரூரமாகப் பார்த்தனர்.

கவுதமின் மனமும் எரிமலையாய் குமுறியதை... அவனைப் பார்த்தாலே புரிந்து கொள்ள முடிந்தது.

ஆனால் பாட்டி பார்வதம் இதையெல்லாம் கண்டு கொண்டதாகவே தெரியவில்லை.

''விசாலம்.. கவுதம்! நீங்க எல்லாரும் வர்ற வரைக்கும் காத்துட்டிருக்கேன். நாளைக்கு முக்கியமான வி.ஐ.பி. களை அழைக்கணும். நம்ம ஊழியர்களுக்கும் அழைப்பு விடுக்கணும். நம்ம பங்களாவிலே.. நாளை இரவு தேநீர் விருந்து வைச்சு... என் செல்லப் பேத்தியை அறிமுகப் படுத்தணும்.

''கவுதம்! ரொம்ப காலத்துக்கு அப்புறம்.. இந்த வீட்டுலே ஒரு சந்தோஷமான சமாச்சாரம் நடந்திருக்கு. விருந்து அமர்க்களமா நடக்கணும்.

''நம்ம ஊழியர்களுக்கு.. ஒரு மாச போனஸ் குடுத்துட லாம். அவங்க மனசு நிறைஞ்சு குழந்தையை வாழ்த் தட்டும். அதான் ரொம்ப முக்கியம். சரியா?''

பர்வதம் உற்சாகமாய் கட்டளையிட்டபோது.. கவுதம் தனது உள்ளத்து உணர்வுகளை சிரமப்பட்டு மறைத்துக் கொண்டு.. செயற்கையாய் முறுவலித்தான்.

மறுநாள் இரவு விருந்து வெகு விமரிசையாய் அமர்க் களப்பட்டது. பாட்டி பர்வதம் அந்த கனத்த பேழையைத் திறந்து.. குவிந்திருந்த நகைகளைக் காட்டினார்.

''இதெல்லாம் உனக்குத்தான் அம்மு... உங்கம்மா உனக்கு தாத்தாவோட பேரையே வச்சுட்டா.. நான் வாய் நிறைய கூப்பிட முடியாதே? அம்முன்னே கூப்பிடறேன்.



''இந்த நகைகளை அணிஞ்சுகிட்டு ஒரு இளவரசி மாதிரி இறங்கி வாடா கண்ணா. ஆசை தீரப் பார்க்கணும்.''

ஆனால் சாம்பவி இளம் பச்சை வண்ண மைசூர் சில்க் புடவை கட்டி.. கழுத்தில் பச்சைக்கல் பதித்த மெல்லிய பதக்கத்தை அணிந்து கொண்டாள். கைகளில் ஒரு ஜோடி கங்கண வளையல்கள்.. காதுகளில் பச்சைக்கல் பதித்த அடுக்கு ஜிமிக்கிகள்.. நீண்ட கூந்தலின் நடுவில் கிளிப் வைத்து வாராமல் அப்படியே விரித்து விட்டிருந்தாள்.

எளிய அலங்காரத்திலேயே தேவதையாக ஜொலித் தாள் சாம்பவி.

பாட்டி பர்வதம் காரை அனுப்பி மருமகள் மஞ்சுளாவை வரவழைத்து விட்டிருந்தார். வாட்டியெடுக்கும் குன்னூர் குளிரிலும் கூட..அவளுக்கு வியர்த்துக் கொட்டியது. மார்த்தாண்டத்தை ஏறிட்டுப் பார்க்கத் தெம்பின்றி தலைகுனிந்து நின்றிருந்தாள் மஞ்சுளா.

விழாவுக்கு வந்திருந்த வசந்த்.. அவளை வாழ்த்தி விட்டு கூட்டத்தோடு அமர்ந்து கொண்டிருந்தான். சாம்பவியின் விழிகள் அவளையும் அறியாமல் சதா வசந்த் மீது படிந்து மீண்டன.

பர்வதம் அவளை அறிமுகப்படுத்திவிட்டுப் பேச ஆரம்பித்தார். சாம்பவியின் காதல் வயப்பட்ட மனம் வசந்தையே சுற்றி சுற்றி வந்ததால்.. பாட்டியின் ஆரம்பக் கட்ட பேச்சை அவள் கவனிக்கவே இல்லை.

பாட்டி அப்படியொரு குண்டைப் போடுவார் என்று அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

''என் பேத்தி படிச்சவ.. சீக்கிரமே நிர்வகிக்கக் கத்துப் பாள். எதிர்காலத்துல அவளும் அவளோட கணவனும

காக்கணும்கிறது தான் எஸ்.எஸ். நிறுவனங்களைக் கட்டிக் என்னோட ஆசை.

''இன்னும் நாலஞ்சு மாசத்துலே.. கவுதமுக்கும் என் பேத்திக்கும் நிச்சயதார்த்தம் பண்ணிட்டா... எனக்கும் என் மருமக மஞ்சுளாவுக்கும் பெரிய பாரம் குறைஞ்ச மாதிரி இருக்கும்...''

பர்வதம் பேசி முடிக்கும் முன் கூட்டத்திலிருந்து கர கோஷம் கிளம்பி.. அந்த பங்களாவையே அதிர வைத்தது.

கவுதமின் முகம் அப்பட்டமாக மகிழ்ச்சியை வெளிப் படுத்தியது. அதுவரை கனன்று கொண்டிருந்த மனதில்... பாலை வார்த்தாற் போலிருந்தது.

'ஐயோ... இது என்ன கூத்து? பாட்டி ஒரு வார்த்தை கூட என்னிடம் கலந்து ஆலோசிக்காமல்... இப்படியொரு முடிவை எடுத்து விட்டாரே?'

அதிர்ச்சியில் வாயடைத்துப் போன சாம்பவி... சட் டென்று திரும்பி வசந்தனின் மீது பார்வையைப் பதித்தாள்.

அனிச்ச மலராய் முகம் சட்டென்று வாடிப் போனது. சொல்லொண்ணா சோகமும் ஏமாற்றமும் முகத்தில் வந்து படிந்ததும்... சாம்பவியின் பார்வையைத் தவிர்ப்பதற்காக வேறெங்கோ வெறித்தான் வசந்தன்.

கரகோஷம் அடங்கி பேச்சு சளசளப்பும் சிரிப்பொலி களும் கிளம்பத் தொடங்கியதும்... கூட்டத்திலிருந்து மெல்ல கழன்று தனது காரை நோக்கி நடந்தான் வசந்தன்.

அம்மா மஞ்சுளாவை ஏறிட்டாள் சாம்பவி. கண்களி லிருந்த ஜீவன் தொலைந்து போய்... விதியை நொந்தபடி தலை குனிந்து நின்றிருந்தாள்.



அதற்கு மேல் ஒரு கணம் கூட சாம்பவியால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. ஓட்டமும் நடையுமாய் சென்று வசந்தன் காரை கிளப்புவதற்குள் அவனைப் பிடித்து விட்டாள்.

''வசந்த்! எவ்ளோ பெரிய இக்கட்டுலே... பாட்டி என்னை மாட்டி விட்டுட்டாங்களே? அவங்களுக்கு என்ன புத்தி கித்தி பிசகிடிச்சா? எங்கப்பாவோட சாவுலே மர்மம் இருக்கு... மார்த்தாண்டாம் குடும்பத்து மேலே நமக்கு ஏற்பட்ட சந்தேகத்தையும் அரசல் புரசலா அவங்க காதுலே போட்டு வச்சீங்களே?

''எல்லாத்தையும் பாட்டி மறந்துட்டாங்களே? என் விருப்பு வெறுப்பு எதையும் கேட்காம... எப்படி அவங்க முடிவெடுக்கலாம்? எங்கம்மா... எப்போ என்ன நடக்கு மோன்னு பயந்து நடுங்கி செத்துட்டிருக்காங்க... எனக்கு எதுவும் வேணாம்...

''சபை ஜனங்க முன்னாடி இப்படியொரு குண்டைத் தூக்கிப் போடுவாங்கன்னு... நா சத்தியமா எதிர் பார்க்கலை வசந்த்.''

நா தழுதழுத்தாள்.

'கோடீஸ்வரிங்கற அந்தஸ்து, புகழ், கௌரவம், பதவி எதுவும் வேணாம். எல்லாத்தையும் தூக்கியெறிஞ்சுட்டு வர்றேன் என்னை ஏத்துப்பீங்களா வசந்த்?' என்று கேட்டுவிட அவளது உள்ளம் துடித்தது.

ஆனால் தொண்டையை விட்டு வார்த்தைகள் வெளி வர மறுத்து புரட்சி செய்தன.

நாலாபுறமும் பார்வையால் வலம் வந்தான் வசந்தன்.

''பொறுமையா இரு சாம்பவி... சொத்தே வேணாம்னு
உதறிட்டு ஓடப் பாக்கறியா? அறக்கட்டளை மூலமா
எத்தனையோ நல்ல காரியங்கள் செய்யலாம்.
'எத்தனையோ பேருக்கு உதவி பண்ணலாம். உயிருக்கு
உலை வைச்ச கழுகுங்க... இதை அனுபவிக்க விடலாமா?
''அத்தனை நிறுவனங்களையும் நீ நிர்வகிக்கக் கத்
துக்கோ... அதிகாரத்தை கையிலெடுத்துக்கோ... ஓட்டை,
ஊழல் எல்லாமே உன் கண்ணுலே சிக்கும்.
''கையும் களவுமா பிடிச்சு உன் பாட்டிகிட்டே மாட்டி
விடு... தைரியமா வெற்றிநடை போடு... பாட்டி ஒரு
முடிவெடுத்துட்டாங்கன்னா... அதுல ஒரு பெரிய அர்த்தம்
இருக்கும்.
''இப்போதைக்கு எந்த விதண்டாவாதமும் வேணாம்.
காரியத்துல கண்ணா இரு... ரொம்ப நேரம் நாம்ப தனியா
பேசினா... யாருக்காவது சந்தேகம் வரும். நான் வரேன்
சாம்பவி.''

அவ்வளவுதான். எங்கிருந்து தான் அவளுக்கு வைராக்கியமும், தைரியமும் வந்ததோ தெரியவில்லை.

மறுநாளிலிருந்து வெறி கொண்டவளைப் போல், கண்ணும் கருத்துமாய் கணினி முன் அமர்ந்து விட்டாள்.

சிறு கோடு போட்டாலே... ரோடு போட்டு விடும் அதி திறமைசாலியாக அவள் இருந்ததால்... தொழில் சூட்சுமங்களும், வியாபார நுணுக்கங்களும் விரைவிலேயே அவளது விரல் நுனிக்குள் அடங்கின.

டெண்டர் கோப்பு, பிராஜெக்ட் ரிப்போர்ட் ஆகியவற்றை தயாரித்து... அவற்றை வெற்றிகரமாக செயலாக்கி பெருமளவு லாபத்தை ஈட்டுமளவுக்கு அவள் மிகவும் தேறி விட்டிருந்தாள்.



அவளது விஸ்வரூப வளர்ச்சியைக் கண்டு கவுதம் விழி பிதுங்கித் தான் போனான். அவளது வேகமும் விவேகமும் அவனது அடி வயிற்றில் புளியைக் கரைத்தன.

சபை ஜனங்களுக்கு மத்தியில் இவள் கவுதமுக்குத் தான் என்று பாட்டி பிரகடனப்படுத்தியதை... அவ்வப் போது நினைவுக்குக் கொண்டு வந்து... சமாதானமடைந் தான் கவுதம்.

'சாம்பசிவம் அறக்கட்டளை'யில் ஏகப்பட்ட மோசடிகள் எஸ்.எஸ். நிறுவனங்களில் நடந்த ஊழல், குளறுபடிகள் சுருட்டல்... அனைத்தையும் சாம்பவி கண்களில் விளக்கெண்ணெயை விட்டுக் கொண்டு தேடிக் கண்டு பிடித்து ரகசிய கோப்பு ஒன்றைத் தயாரித்து... பாட்டிக்கு வெட்ட வெளிச்சமாக்கினாள்.

அந்தக் கோப்பை பார்த்து விட்டு பாட்டி கோபத்தில் கொந்தளித்து விடுவார் என்று நம்பி சாம்பவி ஏமாந்து தான் போனாள்.

பாட்டியின் இதழ்களில் சிறு புன்னகை இழையோடியது அவ்வளவுதான்! இடித்த புளியாக அமர்ந்திருந்தவரைக் கண்டு 'துசுக்' என்று மூக்கில் கோபம் ஏறி அமர்ந்தது.

''சாம்பவி! நம்ம எஸ்.எஸ். ஹாஸ்பிடலுக்கு... கூடிய சீக்கிரம் திறப்பு விழா நடத்தப் போறோம் இல்லையா?

''அதோட நிர்வாக இயக்குனரா... வசந்தனை உக்கார்த்தலாம்னு நெனச்சிருந்தேன். ஆனால் வசந்தன் வெளிநாட்டுக்கு... மருத்துவ ஆராய்ச்சிக்காக கிளம்பறானாம்.

''தன்னோட கூடப் படித்த நண்பனை வேணும்னா... அந்தப் பதவியில அமர்த்திக் கொள்ளுங்க'ன்னு சிபாரிசு செய்தான். அதான் அதைப் பத்தி யோசிச்சுட்டிருக்கேன்.''

அர்த்த பாவனையில் புன்னகைத்துவிட்டு அவளது விழிகளை ஊன்றிப் பார்த்தார் பர்வதம். விழிகளைத் துளைத்து... உள்ளத்தில் இருப்பதைக் கண்டறிந்து விடும் படியான பார்வை அது!

சட்டென்று விழிகளைத் தழைத்துக் கொண்டாள் சாம்பவி. அழுகை முட்டிக் கொண்டு வந்தது.

காலடியில் தரை நகர்ந்து செல்வதைப் போன்றிருந்தது.

## 15

பனித் துளிகள் ஒவ்வொரு புல் நுனிக்கும் மகுடம் சூட்டி இருந்தன. இளங்கதிரவன் ஒளி அத்தனை மகுடங்களையும் வைரமாய் தகதகக்க வைத்தது.

காட்டுத் தீயாய் பூத்திருந்த குல் மொஹர், மஞ்சளாய் சிரித்த சரக்கொன்றை... காற்றிலாடும் காய்களுடன் மா, கொய்யா... ஆங்காங்கே பலா மரங்கள்... செவ்விளநீர் குலைகளின் பாரம் தாங்காமல் சிரமப்படும் தென்னை...

வண்ண வண்ண நிறத்தில் ரோஜா, செம்பருத்திச் செடிகள்... பச்சைக் குடையாய் படர்ந்திருக்கும் ஜாதிக் கொடி...

பார்வையால் தோட்டத்தை வருடிக் கொடுத்தபோது மனசுக்குள் சந்தோஷம் வானவில் ஒன்றை வரைந்தது.

ஆனால்... இனம் புரியாத பாரம், இதயத்தை அழுத்தி அமுக்குவதை உணர்ந்தான் வசந்தன். சாம்பவியின் அழகு முகம் மனக் கண்ணில் ஒரு கணம் தோன்றி மறைந்தது.

பால்கனியில் நின்றிருந்தவன் சோர்ந்து போய் அப்படியே அருகிலிருந்த சாய்வு நாற்காலியில் சாய்ந்தமர்ந்தான்.



குளிர் காற்று... அவனது காய்ச்சல் கண்ட உடம்பைப் பதம் பார்த்து சிலிர்க்க வைத்துக் கொண்டிருந்தது.

இரண்டே நாட்களில் வசந்தன் அடித்துப் போட்டாற் போன்று துவண்டு போயிருந்தான்.

மூன்று நாட்களுக்கு முன்பு... அவனது நர்ஸிங் ஹோமுக்கு அருகில் நடந்த 'இரத்த தான முகாமில்' கலந்து கொண்டு முதல் நபராக இரத்த தானம் அளித்து விட்டு வந்த வசந்தனால்... சிறிது நேரம் கூட ஓய்வெடுக்க முடியவில்லை.

அடுத்தடுத்து வெளிநோயாளிகள் வந்து சேர்ந்த வண்ணம் இருந்ததால்... அனைவரையும் கவனித்து அனுப்பி விட்டுத் தான் அவனால் கிளம்ப முடிந்தது.

உதவி மருத்துவர் திடீரென்று ஏற்பட்ட உடல் நலக் குறைவால் விடுப்பு எடுத்துக் கொண்டு விட... ஒட்டு மொத்த வேலைப் பளுவும் அவனது தலை மீது அழுத்தியது.

கண்கள் இரண்டும் கபகபவென்று தீயாய் காந்தின.

அவனது கார் வீட்டை நோக்கி விரைந்து கொண்டிருந்த போது... தூவானம் தூறிக் கொண்டிருந்தது.

இன்னமும் பத்து நிமிட நடையில்... வீடு வந்து விடும் தொலைவில்... கார் திடீரென பழுதாகி கழுத்தை அறுத்தது.

கார் பானெட்டைத் திறந்து தனக்குத் தெரிந்த உத்திகளைக் கையாண்டு பார்த்தான் வசந்தன்.

ஊகூம்... கார் சாமானியத்தில் கிளம்ப மாட்டேன் என்று முரண்டு பண்ணியதும்... மெக்கானிக்கிற்கு 'செல்'லில் அழைப்பு விடுவித்து விட்டு... லிஃப்டுக்காக மலைப் பாதையில் வெகு நேரம் காத்திருக்கப் பிடிக்காமல்... விரைந்து நடந்தான்.

கரு மேகங்கள் கோபமாய் உறுமி குமுறி... மழை வலுக்கத் தொடங்கியது.

வீட்டிற்கு வந்து சேர்ந்தபோது வசந்தன் தொப்பலாய் நனைந்து விட்டிருந்தான்.

வேலம்மா சமைத்த இரவு உணவைக் கூட அவன் தொடவில்லை. தலையைத் துவட்டி உடையை மாற்றி படுக்கையில் சரிந்தவன் தான்...

மறுநாள் காலை கண் விழித்தபோது உடம்பு அனலாய் கொதித்துக் கொண்டிருந்தது.

தொடர்ந்து வந்த இரு நாட்களாக... படுக்கை அறையை விட்டு வெளியில் வர முடியாமல் முடங்கிக் கிடந்ததால்... பர்வதத்திற்கு தினப்படி 'செக்கப்' செய்ய இயலவில்லை.

இன்று வேலம்மா கொடுத்த சுக்கு காபியைப் பருகி விட்டு பால்கனியில் வந்தமர்ந்தவனுக்கு எரிச்சல் மண்டிக் கொண்டு வந்தது.

இன்றும் தன்னால் நர்ஸிங் ஹோமுக்குச் செல்ல முடியும் என்று தோன்றவில்லை.

தலையை இரண்டாகப் பிளந்து பெரிய கல்லை வைத்து தைத்து விட்டது போல்... தலை பாரமாக கனக்கவே எழுந்து படுக்கை அறைக்குள் நுழைந்தவனுக்கு தூக்கி வாரிப் போட்டது.

பதற்றமும் சோகமும் படர்ந்த முகத்துடன் சற்றே மூச்சிரைத்தபடி சாம்பவி... அவனது அறைக்குள் நுழைவாள் என்று அவன் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

வசந்தனின் அறையை அப்போது தான் துடைத்து விட்டு வெளியேறி இருந்தாள் வேலம்மா.



"இன்னமும் காய்ச்சல் விடலையா? வசந்த்."

பளிங்குத் தரையின் ஈரத்தை கவனிக்காமல்... பதற்றமாய் நடந்தவளுக்கு கால்கள் வழுக்க... தடுமாறி விழப் பார்த்தவளின் தோள்களை சட்டென்று தாங்கிப் பிடித்தான் வசந்தன்.

"பாத்து வரக்கூடாதா சாம்பவி?" அவளைப் பற்றியிருந்த கைகளை விலக்கிக் கொண்டே... விழிகளை ஊன்றிப் பார்த்தான்.

"அயாம் ஆல்ரைட் சாம்பவி."

சாம்பவியின் கண்ணோரங்களில் நீர் தயாராக இருந்தது. இருதயத்தின் துடிப்பு காதுக்குள் பெரிதாய் கேட்டது.

குரல் வளையில் கட்டை வைத்து தடுத்து விட்ட மாதிரி பேச முடியாமல் கண்ணீர் உகுத்தாள்.

உள்ளுக்குள் எப்படியோ துணிவு துளிர்த்தது போலும்!

"வ... வசந்த்" என்று அவனது பெயரை உச்சரித்தபடி அவனது தோளில் சட்டென்று சாய்ந்து விட்டாள்.

ஊசி இடம் கொடுத்தால் நூலுக்கு கொண்டாட்டம் தானே? சாய்ந்தவளைக் கட்டிக் கொண்ட வசந்த்... இதற்கென்றே யுக யுகமாய் தவமிருந்தவன் போல... அவளை இறுகத் தழுவினான்.

அணையை உடைப்பெடுத்துக் கொண்டு பெருகும் வெள்ளம் போல... இது காறும் வரை மூடி மூடி கட்டுக்குள் வைத்திருந்த காதலும் அன்பும் குபீரென்று வெளிப்பட்டு... அந்த இரு இளம் உள்ளங்களை தம் வசப்படுத்தின.

"வசந்த்... ஐ லவ் யூ" சாம்பவியின் குரல் கிசுகிசுப்பாக வெளிப்பட்டது.

"உண்மை தானா சாம்பவி? இது கனவில்லையே?" இளம் காது மடலுக்குள் அசைந்த அவன் உதடுகள் அவளை உருக்கின.

"இது நிஜம்... நிஜம் தான் வசந்த்" முணுமுணுத்தவளின் மோவாயை நிமிர்த்தி மெல்ல முத்தமிட்டான்.

உடம்பு முழுக்க பரவிய தகிப்பு அவளது கால்களைத் தொய்யச் செய்தது.

இருவருக்குமே மனதிற்குள் சந்தோஷ மழை பூப்பூ வாய் தூற ஆரம்பித்தது. நிலவோடு நிலவாக மேகத்தோடு மேகமாக பறப்பதைப் போல உணர்ந்தனர்.

இந்த உலகையே மறந்து வெகு நேரம் லயித்திருந்தவர்கள் வேலம்மாவின் குரலைக் கேட்டதும் தான் திடுக்கிட்டு விலகினார்கள்.

"ஐயா... சாம்பவி அம்மாவுக்கும் சேர்த்தே டிபன் கொண்டாந்துருக்கேன்" நாசூக்காக வாயிற்படியில் நின்றபடியே குரல் கொடுத்தாள்.

"உம்! சீக்கிரம் கொண்டாங்க வேலம்மா... என் கூட டிபன் சாப்பிடேன் சாம்பவி."

"டிபன் மட்டுந்தானா? மதியம் வரை இருந்த சாப்பாட்டை ஒரு பிடி பிடிச்சுட்டுத்தான் போவேன்."

"அட... பெரிய தொழிலதிபர்... பொன்னான நேரத்தை ஒதுக்கி... அதுவும் பாதி நாள் நம்ம வீட்டுலே இருக்கப் போறா... வேலம்மா... உங்க கைவரிசையைக் காட்டி ஜமாய்ங்க" சிரித்தான் வசந்தன்.

டிபன் தட்டுக்கள் அடங்கிய டிரேயை மோடாவில் வைத்துவிட்டு மறைந்தாள் வேலம்மா.



"என்ன திடீர்னு அமைதியாயிட்டே சாம்பவி?" என்று அவன் கேட்டதும் மெல்ல நிமிர்ந்தாள்.

அடங்கியிருந்த கண்ணீர் மீண்டும் துளிர்க்கட்டுமா என்று கேட்டது.

"இந்த மாதிரி பேசாதீங்க வசந்த்... பேசிப் பேசி என்னை ஏன் அந்நியப்படுத்துறீங்க?

"நீங்களும் என்னை விரும்பறீங்கன்னு... நான் என்னிக்கோ புரிஞ்சுகிட்டேன். ஆனா... அதை வெளிப்படுத்த ரொம்பவே தயங்குனீங்க...

"அதுக்குக் காரணம் என்ன? அந்தஸ்து தான் குறுக்கே வந்து நின்னு... உங்களையும் என்னையும் பிரிக்குதுன்னு நினைக்கிறேன். சொல்லுங்க வசந்த்?"

"என்னோட அன்பை முன்னமே நான் வெளிப்படுத்தியிருந்தா... உனக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கும் சாம்பவி."

"என்ன?" திக்கென்று அதிர்ந்து ஏறிட்டாள்.

## 16

அந்த பங்களாவின் பின்புறமும் அழகிய நந்தவனம் இருந்தது. புல்வெளிகளும், செடி கொடிகளுமாய்... ரம்யமாக இருந்தது.

மீன்கள் துள்ளிக் குதிக்கும் அல்லிக்குளம்... அதைச் சுற்றி சருகுகளுடன் உதிர்ந்த மகிழம்பூக்கள்... அல்லிக் குளத்தின் சுற்று சுவற்றின் மீது சாம்பவியும், வசந்தனும் அருகருகே அமர்ந்திருந்தனர்.

ஏலக்காய் பொடி தூவி வேலம்மா தயாரித்த தேநீர் மணமும் சுவையுமாகப் பருக இதமாக இருந்தது.

"டிபனும் சாப்பிட்டாச்சு... கீழே இறங்கி வந்து தோட்டத்துலே காலாற நடந்துட்டு... டீயும் குடிச்சாச்சு...

உம்... இப்பவாவது நான் கேட்டதுக்கு பதில் சொல்லுங்க வசந்த்.''

அவளது மென் கரத்தைப் பற்றி தனது கன்னத்தில் பொருத்திக் கொண்டான் வசந்தன்.

''அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்'னு சொல்வாங்க. மனசுலே காதல் பிறந்திடுச்சுன்னா... அது முகத்துலே காட்டிக் கொடுத்துடும்.

''தனக்கு மருமகளா வரப் போறவள்னு நெனச்சுத்தான்... மார்த்தாண்டம் வாலைச் சுருட்டிட்டு இருக்கான்.

''நாம 'லவர்ஸ்'னு தெரிஞ்சிருந்தா... இவ்ளோ நேரமும் உன்னை விட்டு வைப்பாங்களா? உன் மூலமா அவங்களுக்கு சொத்து வரப் போகுதுன்னு நம்பிட்டிருக்கிறதால தான்... நீ சுதந்திரமா தொழில் கத்துட்டு முன்னேறி இருக்கே.''

''உங்க தயக்கத்திற்கு அது மட்டும்தான் காரணமா வசந்த்?''

''உன்னோட யூகம் சரிதான் சாம்பவி... டாக்டர் மகாதேவனோட ஹாஸ்பிடல்லே முதன் முதலா உன்னை சந்திச்சப்பவே... நான் என் மனசைப் பறி கொடுத்துட்டேன்.

''உன்னோட திறமை, தொழில்லே நீ காட்டின அக்கறை, ஆர்வம், பொறுப்பு அன்பு, பணிவு... இதெல்லாம் என்னை ஈர்த்திடுச்சு.

''அதே சமயம் உன்னோட முகச் சாயல்... எஸ்.எஸ். குடும்பத்தோட வாரிசுன்னு பறை சாட்டுச்சு... என் கடமையை நான் செய்துட்டேன்.

''அதுக்கு அப்புறம் நான் என்னோட காதலை வெளிப்படுத்தினா என்ன நெனைப்பே? 'இத்தனை சொத்துக்கும்



ஆசைப்பட்டுத்தான் நம்மைக் காதலிக்கிறாரோ'ன்னு நீ தப்பா நெனச்சுட்டா?

''இதுக்குத் தான் அக்கறையா நம்மைக் கூட்டி வந்து வாரிசா... இங்கே உட்கார்த்தி வச்சாரோ?ன்னு உனக்கு சந்தேகம் தோணிட்டா... என்ன பண்றதுன்னு தான் என்னோட காதலை மூடி மறைச்சேன்.''

''ஆனாலும் உங்களுக்கு அழுத்தம் ஜாஸ்தி வசந்த்! உங்களை முதன் முறையா பார்த்தப்பவே எனக்குள்ளும் இரசாயன மாற்றம் ஏற்பட்டிருச்சு.... இதை எத்தனையோ வாட்டி சொல்லத் துடிச்சிருக்கேன்.

''ஆனா... ஏதோ ஒண்ணு சொல்ல விடாம தடுக்கும். எவ்ளோ பெரிய ஜீனியஸ் நீங்க... ஒரு பெண்ணோட மனசுல இருக்கறதைக் கூடவா புரிஞ்சுக்க முடியலை?

''எல்லாத்தையும் உதறிட்டு ஒரு சாதாரண நர்ஸா உங்க நர்ஸிங் ஹோமுக்கு வந்து உங்களுக்கு உதவணும். வீட்டுலே உங்க மனைவியா வாழணும்னு துடிக்கிறேன்.

''ஆனா நீங்க எஸ்.எஸ். ஹாஸ்பிடலின் நிர்வாகத்தை ஏற்க மறுத்துட்டு... வெளிநாட்டுக்குப் போய் மருத்துவ ஆராய்ச்சி செய்யலாம்னு முடிவெடுத்துட்டீங்களே?

''இப்ப தான் குழப்பமெல்லாம் நீங்கிடுச்சே... நிர்வாகத்தை ஏத்துக்கிட்டு இங்கேயே ஆராய்ச்சியை நீங்க தொடரலாமே?

''நானும் உதவியா இருப்பேன் இல்லையா?''

அவளது புறங்கையில் ஆசையாய் இதழ் பதித்து விட்டு முறுவலித்தான்.

''சரி... சாம்பவி.''

''எனக்கு மருத்துவக் கல்லூரியிலே சேர்ந்து படிக்க டாக்டராகணும்னு ஆசைப்பட்டேன். ப்ச்... எனக்கு கொடுப்பினை இல்ல...

''உடல் வேதனையைப் போக்கி... உயிர் காக்கற உன்னதமான தொழிலாச்சே... அதான் நர்ஸிங் கோர்ஸ்லே சேர்ந்து படிச்சேன்.

''வசந்த்! நீங்க ரிசர்ச் பண்ணணும்... அது சக்ஸஸ் அடையணும். பேரும் புகழும் அடைஞ்சு... பெரிய அளவில நீங்க வரணும்கிறது தான் ஆசை... அதுக்கு நான் உறுதுணையா இருப்பேன்.

''உங்க திறமைக்கு நீங்க ஓஹோன்னு வருவீங்க... எங்கப்பா பேர்ல ஒரு ஜெனரல் ஹாஸ்பிடல் ஒண்ணை தொடங்கணும். ஏழை, எளிய மக்களுக்கு சகல விதமான சிகிச்சைகளையும் இலவசமா செய்யணும்.

''பாட்டி பேர்லேயும் ஒரு அறக்கட்டளை ஆரம்பிச்சு... கல்வி உதவித்தொகை, ஊனமுற்றோருக்கு வேலை வாய்ப்பு, ஏழைப் பெண்களுக்கு திருமணச் செலவு... இது போன்ற காரியங்களைச் செய்யலாம்னு இருக்கேன்.

''எனக்கு உறுதுணையா என் கூடவே இருப்பீங்களா வசந்த்?''

''என்ன இப்படிக் கேட்டுட்டே? ஐ லவ் யூ ஸோ... மச் சாம்பவி'' குரலை ஏகத்திற்கும் தழைத்துப் பேசியவன்... அவளது கையை எடுத்துத் தன்னுடையதில் பொதிந்து வைத்தான்.

சில்லென்ற அவளது கை சூடான அவனதில் பட்டு சுகமாய் சிறைப்பட்டது.



அந்த வெப்பம் அவளை அதிர வைத்தது போல்... இவளது மென்மையும் குளிர்ச்சியும் அவனைப் பரவசப் படுத்தின.

''பூ போலவே இருக்கே சாம்பவி - மிருதுவாய் அழகாய்.''

உன்மத்தமான உதடுகள் இவளது காதில் கிசுகிசுத்து விட்டு உள்ளங்கையில் அழுந்த முத்தமிட்டன.

காதல் கனிய ஆசையுடன் அவளை ஊன்றிப் பார்த்து விட்டு... அதுவரை பொக்கிஷமாய் பற்றி வைத்திருந்த கைகளை நழுவ விட்டு எழுந்து கொண்டான்.

''சாம்பவி... கிளம்பு! நீ வந்தது... மார்த்தாண்டத்துக்கோ, கவுதமுக்கோ தெரிஞ்சுட்டா... ஆபத்துல முடியும். கையும் களவுமா அதுகளைப் பிடிச்சு போலீஸ்லே மாட்டி விடற வரைக்கும் நீ ரொம்பவே ஜாக்கிரதையா இருக்கணும்.''

''அந்த இரகசிய கோப்பை பாட்டிகிட்டே கொடுத்திருக்கேன். இன்னும் ஏன் மௌனமா எந்த நடவடிக்கையும் எடுக்காம இருக்காங்கன்னு... தெரியலை.''

''அதுல ஏதாவது அர்த்தம் இருக்கலாம்... நானும் கூட வரட்டுமா சாம்பவி?''

''இல்ல... நீங்க ரெஸ்ட் எடுங்க. பதட்டப்படாதீங்க. வசந்த் கவுதமோட அம்மா கோயம்புத்தூர்லே இருந்து வந்திருக்காங்க... கவுதமோட அக்கா தங்கச்சிகளும் வந்திருக்காங்க... வீடே ரெண்டு பட்டுப் போச்சு.

''இன்னிக்கு கார்த்தால அந்தக் கும்பல் குல தெய்வம் கோவிலுக்கு வேண்டுதல் நிறைவேற்ற போயிருக்காங்க. நல்லதாப் போச்சுன்னு அம்மா கிட்டே சொல்லிட்டு நான் இங்கே வந்துட்டேன்.''

''அம்மாவை தைரியமா இருக்கச் சொல்லு... சீக்கிரம் விடிவு காலம் வந்துடும்... அதுவரை ஜாக்கிரதையா இருக்கணும். சரியாடா?''

''சரி... வசந்த்.. நான் வரேன்'' காரிலேறி அமர்ந்து கொண்டு அவள் கையசைத்ததும் கார் விருட்டென்று கிளம்பி மறைந்தது.

வசந்தன் பயந்தது போலவே... இந்த விஷயம் வெளியில் கசிந்து அது பூதாகாரமாக வெடிக்கவும் செய்தது.

## 17

பால்கனியின் தரையில் ஒருக்களித்துப் படுத்திருந்தாள் மஞ்சுளா. வேப்ப மரக்கிளைகள் மகிழ்ச்சியுடன் கைகளை அசைத்து சாமரம் வீசின.

''அம்மா... என்னம்மா இது? இங்க வந்து படுத்திருக்கே? தரை சில்லுன்னு இருக்கு... வெறும் தரையில படுத்திருக்கே.. உடம்பு என்னத்துக்கு ஆகும்?''

''எனக்கு ஒண்ணும் ஆகாதும்மா... பசுங்கொடியா தளதளன்னு வளர்ந்து நிக்கிறியே? உனக்கு ஒண்ணும் ஆகக் கூடாதுன்னு தான்... நான் ரொம்ப பயப்படறேன்.''

மெல்ல எழுந்து கொண்ட மஞ்சுளாவின் கண்கள் இரண்டும் வீங்கி, கோவைப் பழமாய் சிவந்திருந்தன.

''ப்ச்! பகவான் மேல பாரத்தைப் போடும்மா... எல்லாம் நல்லபடியா நடக்கும்.''

மகள் சாம்பவியின் முகத்தில் தெரிந்த கூடுதல் பொலிவும் மலர்ச்சியும்... அவளது விழிகளில் தெரிந்த பளபளப்பும் மஞ்சுளாவுக்கு ஆயிரம் கதைகளைச் சொல்லின.

''வசந்தனைப் பாத்தியாம்மா? அவருக்கு காய்ச்சல் விட்ருச்சா?''

''இப்போ பரவாயில்லைம்மா'' வசந்தனைப் பற்றிய பேச்செடுத்ததுமே... மகளின் கன்னங்களில் செம்மை படர்ந்ததை மஞ்சுளா கவனிக்கத் தவறவில்லை.



''நடேசன் மாமாவுக்கு போன் பண்ணினேன். கிருஷ்ணாவுக்கு கால்லே எலும்பு முறிவு ஏற்பட்டு ஆஸ்பத்திரியில் இருக்கானாம்.''

''அவங்கவங்க செய்த பாவத்துக்கு ஏத்த கூலியை கடவுள் கரெக்டா குடுத்துடறார். இல்லையாம்மா?''

''உம்! நல்லா குடிச்சுட்டு தினமும் மாமா கிட்ட வந்து கலாட்டா செய்திருக்கான். நாம இருக்கற அட்ரஸை சொல்லும்படி அவரை வற்புறுத்தினானாம்.

''ஆனா... உங்க மாமா மூச்சே விடலை. தினமும் அவனா கத்தி அடங்கட்டும்னு மௌனமா இருந்திருக்காரு.

''குடி போதையில மாடி ரூம்லே இருந்து வெளியில எதுக்கோ வந்தானாம்... மாடிப் படியில அஜாக்கிரதையா இறங்கினான் போல... கால் தவறி படிகள்லே உருண்டு விழுந்துட்டானாம்.

''வலது கால்லே பெரிய அளவுல எலும்பு முறிவு ஏற்பட்டிருக்காம். பாவம்... அண்ணா! ஒரே மகனோட நிலைமையைப் பாத்துட்டு ரொம்பவே நொறுங்கிப் போயிருப்பாரு.

''மருமகளும் போயிட்டா... பச்சைக் களிமண்ணா பேத்தி கிடக்கறா... அதோட எதிர் காலத்தை நெனச்சுக் கூட பார்க்காம... இந்தப் பயல் தறி கெட்டு அலையறா'ன்னு சொல்லி வேதனைப்பட்டாரு.''

சாம்பவியின் மனமும் மெழுகாய் உருகியது.

இது காலம் வரை மாமாவை அண்டி வாழ்ந்தாகி விட்டது. கற்பகத்திடம் ஏச்சுக்களையும் பேச்சுக்களையும் வாங்கிக் கட்டிக் கொண்டு... வேலைக்காரியைப் போல சேவகம் செய்து வாழ வேண்டியிருக்கிறதே என்ற வேதனை வாட்டி எடுத்தது.

அவமானத்தில் உடல் கூசிக் குறுகியபோது 'அக
தியைப் போல அண்டி வாழும் இந்த அவல வாழ்க்கை
தேவையா?' என்று மனம் குமைந்தது.

'இந்த நரகத்தில் இருந்து எப்போது விடுபடுவோம்?'
என்று மனம் புழுவாய் துடித்தது.

ஆனால் இங்கு வந்த பின்பு....

பாட்டி பாசத்தைக் கொட்டி அவர்களைத் தலையில்
தூக்கி வைத்துக் கொண்டாடுகிறார் என்றாலும்...
தங்களுக்கு பாத்தியதைப் பட்ட வீட்டிற்கு வந்து சேர்ந்து
விட்டோம் என்ற நிம்மதி... நெல் முனை அளவு கூட
உள்ளூர முளைக்கவில்லை என்பது நிஜம்!

எந்த நேரத்தில் எது நடக்குமோ என்று பயந்து இதயத்
துடிப்பு எகிறியது.

இந்தக் கயவர்களைப் பற்றி எடுத்துச் சொல்லியும்...
செவிடன் காதில் ஊதிய சங்காய்... பாட்டி சிறிதும்
அசைந்து கொடுக்கவில்லை என்றபோது உள்ளூர எரிச்சல்
மண்டியது.

அதைப் பற்றி பேசுவதற்குக் கூட சாம்பவிக்கு அவர்
அவகாசம் தரவில்லை.

அத்தோடு விட்டாரா? ''நம்ம நிறுவனங்களை நீ
திறம்பட நிர்வாகிக்கணும். எக்காரணத்தைக் கொண்டும்
நீ தனியா போகக் கூடாது. கவுதம் கூட ஒரே கார்லே போ...

''ஒவ்வொரு நிறுவனத்துக்கும் அவனும் உன் கூடவே
வருவான். சரியா?''

உத்தரவிடும் தொனியில் உரிமையாய் பாட்டி அதட்
டியபோது சாம்பவியாய் மறுக்க முடியவில்லை.



'கூடிய விரைவில் இவள் மனைவியாகப் போகிறவள்'
என்ற உரிமையில் கோணலாய் சிரித்தபடி அவ்வப்போது
கவுதம் அவளைப் பார்வையால் அளவெடுத்தபோது...
கோபத்தில் மனம் எரிமலையாய் குமுறும்.

ஒவ்வொரு நிமிடமும் நகர்வதற்குள் திக் திக் என்ற
உணர்வில் நரக வேதனை அனுபவிக்க வேண்டியிருக்
கிறது.

முள் மேல் நின்று கொண்டிருப்பதைப் போன்ற
அவஸ்தை... மனதில் பலதையும் நினைத்து அலசிக்
கொண்டிருந்த மகளின் தோளைத் தொட்டாள் மஞ்சுளா.

''என்ன யோசிக்கிறே சாம்பவி?''

''பாவம் மாமா. தன்னோட குடும்பக் கவலை ஒரு
பக்கம் வாட்டி வதைச்சாலும்... நம்மளை நெனைச்சா
நிம்மதியா இருக்கும்.

''நாம இங்க வசதி வாய்ப்போட அமோகமா... எந்தப்
பிக்கல் பிடுங்கலும் இல்லாம ஓஹோன்னு இருக்கோம்னு
நெனச்சுட்டு இருக்காரே...''

''ஆமா... சாம்பவி... இத்தன வருஷமா நம்மை
நினைச்சு அவர் விசனப் பட்டது போதும். இனிமேலாவது
அவர் நிம்மதியா இருக்கட்டும்.''

''வாம்மா... பாட்டிக்கு பி.பி. செக் பண்ணணும்.
நியூரோபயான் இன்ஜெக்ஷன் வேற போடணும்...
வசந்தன் நாளைக்குத் தானே வருவாரு? அதான்...''

இருவரும் பர்வதத்தின் அறைக்குச் சென்றபோது அவர்
யாருடனோ மெல்லிய குரலில் போனில் பேசிக் கொண்
டிருந்தார்.

இவர்களைக் கண்டதும் ரிசீவரை வைத்து விட்டு முகம்
மலர்ந்தார்.

''உம்! நீ ரொம்ப கெட்டிக்காரி அம்மு! நீ ஊசி போட்டா எனக்கு கொஞ்சங்கூட வலிக்கவே இல்ல... வசந்தனும் இப்படித்தான் எனக்கு நோகாம ஊசி போடுவான்...''

என்றபடியே அவளது விழிகளை ஊன்றிப் பார்த்தார்.

குப்பென்று காது மடல்கள் சூடாக... குங்குமமாய் முகம் சிவந்து போனாள் சாம்பவி.

''வசந்தன் தம்பிக்கு நம்ம குடும்பத்து மேலே ரொம்பவே விசுவாசம்... தங்கமான மனசு... தம்பிக்கு நாங்க ரொம்ப ரொம்ப நன்றிக் கடன் பட்டிருக்கோம் அத்தே.''

''உம்... வசந்தனை நீயும் போய் பாத்துட்டு வந்திருக்கலாமே மஞ்சுளா?''

சாம்பவி சட்டென்று திடுக்கிட்டாள்.

'நான் வசந்தனை சந்தித்து விட்டு வந்த விஷயம்... பாட்டிக்குத் தெரிந்து விட்டதே? அவரிடம் நான் எதுவும் சொல்லிக் கொள்ளவில்லையே?

'எப்படி பாட்டி கண்டு பிடித்தார்? பாட்டி சிறந்த மதியூகி... வசந்தனை நான் உயிருக்கும் மேலாக நேசிப்பதையும் புரிந்து கொண்டிருப்பாரோ?

'இந்தளவுக்கு மதி நுட்பத்துடன் இருப்பவர்... ஏன் மார்த்தாண்டத்தையும், கவுதமையும் புரிந்து கொள்ளவில்லை?

'சகலத்தையும் உணர்ந்து கொண்டு எதற்கு மௌனமாக இருக்கிறார்?'

என்ன, ஏன் எதற்கு? என்கிற கேள்விகள் அடி வயிற்றில் வெட்டுக் கிளிகளாகத் தாவுவதை உணர முடிந்தது.

''கால நேரம் கூடி வரும்போது... எல்லாம் தெளிவா விளங்கிடும்.''



இவள் மனதில் உள்ளதைப் படம் பிடித்து அறிந்து கொண்ட தினுசில்... பாட்டி அகஸ்மாத்தாக பதிலளித்து விட்டு மந்தகாசமாய் புன்னகைத்தார்.

தாயும் மகளும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

## 18

கவுதம் குட்டி போட்ட பூனையாய்... குறுக்கும், நெடுக்குமாக உலாவிக் கொண்டிருந்தான்.

''பார்வதம் நம்ம முகத்துல கரியைப் பூசிட்டாளே? நம்ப வச்சு கழுத்தை அறுத்துட்டாளே? இப்ப என்னங்க பண்றது?''

கோபமும் அழுகையுமாய் கணவரை ஏறிட்டாள் விசாலம்.

''நம்ம காதுக்கு வந்த சேதியை மட்டும் வச்சு... நாம்ப எந்த முடிவுக்கும் வந்துரக் கூடாதுல்ல?

''பார்வதம் அம்மா வாயால எதையும் இன்னும் சொல்லலை? அதுக்குள்ளே என்னத்துக்கு அவசரப் படணும்?

''ஆக்கப் பொறுத்தவங்க... ஆறப் பொறுக்கணும்னு சொல்வாங்க இல்லையா? பார்ப்போம். கவுதமுக்கு இள ரத்தம்... குதிக்கிறான்.

''அவன் சொன்னதை வச்சுக்கிட்டு... எல்லாமே கை விட்டுப் போன மாதிரி அழுது புலம்பாதே விசாலம்.

''நம்மை மீறி எதுவுமே இங்க நடக்காது. நடக்கத்தான் விட்ருவோமா? நம்ம மேல பார்வதத்துக்கு அபார நம்பிக்கை இருக்கே?''

மீசையை முறுக்கியபடி மனைவியை ஆறுதல் படுத்திய மார்த்தாண்டத்தைக் கண்டதும்... கவுதமுக்கு 'கிர்'ரென்று கோபம் உச்சிக்கு ஏறியது.

''என்ன தாத்தா பேசறீங்க? அபார நம்பிக்கை முன்னே இருந்தது என்னமோ வாஸ்தவம் தான்...

''அந்த நம்பிக்கையை யாராலும் அசைக்க முடியாதுன்னு தான் நானும் நெனச்சுட்டிருந்தேன்.

''ஆனா இந்த வசந்தன் பயலால எல்லாமே கெட்டுப் போச்சே? நம்பிக்கையை தகர்த்தெறிஞ்சு தூள் தூளாக்கி... அப்படியே தரை மட்டமாக்கிட்டானே படுபாவி!''

''என்னத்துக்கு இப்போ பதட்டப் படறே கவுதம்? சாம்பவி அவனோட கண்ணுல பட்ருக்கா... வம்ச வாரிசு வறுமையில வாடுதேன்னு... நேரா இங்க கொண்டு வந்து பர்வதம் கையில புடிச்சுக் குடுத்துட்டான்.

''அந்தப் பயலுக்கு எப்பவும் நம்ம மேல ஒரு நல்ல அபிப்பிராயம் கிடையாதே? அவனை விட்டுத் தள்ளு!

''கொட்டாப் புளியாட்டம் வம்ச வாரிசு வளர்ந்து சொத்துக்கு உரிமை கொண்டாட வந்துடுச்சேன்னு... நான் ஒரு நிமிஷம் ஆடிப் போயிட்டேன்.

''அத்தனை சொத்தையும் என் பேரன் கவுதம் ஆளப் போறான்னு... ஆண்டாண்டு காலமா கண்ட கனவு பொய்யாயிடுச்சேன்னு கலங்கிட்டேன்.

''அடுத்து என்ன செய்யலாம்னு யோசிச்சுட்டிருந்தப்ப... பர்வதமே 'இந்த சொத்து கை விட்டுப் போகக் கூடாதுன்னு முடிவு பண்ணி சாம்பவியை உனக்கு கட்டி வைக்கப் போறதா... சபையில அறிவிச்சுட்டாங்க.

''எனக்கு அப்பாடான்னு ஆயிடுச்சு. இனிமே கவலை இல்லைன்னு நிம்மதியா மூச்சு விட்டேன்.''



பெருமிதத்துடன் முறுவலித்த முதியவரைக் கண்டு... கவுதமுக்கு 'கபகப'வென்று பற்றிக் கொண்டு வந்தது.

''தாத்தா! உங்களுக்கு ரொம்ப வயசாயிடுச்சு... லேசா மரை கழண்டுக்க ஆரம்பிச்சுடுச்சுன்னு நெனக்கிறேன்.

''பிரச்சினையோட தீவிரத்தைப் புரிஞ்சுக்கவே மாட்டீங்களா? நான் சொல்ற எதையும் காதுலே வாங்கிக்காம... நீங்க பாட்டுக்கு வியாக்கியானம் பேசிட்டிருக்கீங்களே?''

''என்னப்பா நீங்க? எம் புள்ளை ஏதோ விசனப்பட்டு பேசறான். என்னன்னு கேட்போமே?

''ஹூம்! என்னோட மத்த பசங்க தான் அஞ்சுக்கும் பத்துக்கும் அல்லாடுதுங்க... ஆனா கவுதம், பர்வதம் அம்மாவோட மனசுல இடம் புடிச்சுட்டானே... அத்தன சொத்தையும் ஆண்டு அனுபவிக்கப் போறான்னு நெனச்ச நெனப்புல மண்ணு விழுந்துடும் போலிருக்கே?''

கவுதமின் தாயார் செண்பகம் ஆற்றாமை தாளாமல் புலம்பத் தொடங்கினாள்.

''மைகாட்! கொஞ்சம் புலம்பறதை நிறுத்தும்மா! தாத்தா!... பர்வதம் பாட்டி, சாம்பவியை எனக்கே கட்டித் தர்றதா சொன்னதும்... சந்தோஷத்துல எனக்கு தலை, கால் புரியலை.

''ஆனா... சாம்பவியை நான் தினமும் கார்லே கூட்டிட்டுப் போனேன் இல்லையா? அவளும் நிறுவனங்களைப் பார்வையிட்டு தொழில் கத்துக்கிட்டா இல்லையா? அப்பவே எனக்குப் பொறி தட்டுச்சு!

''இன்னும் சில மாதங்கள்லே கணவனா வரப் போறவனாச்சே' அப்படிங்கிற கனிவோ, மரியாதையோ... சாம்பவி கிட்டே கிஞ்சித்தும் தெரியலை.

''வியாபார நுணுக்கங்களை வெறி பிடிச்சவளாட்டம் கத்துக்கிட்டாளே தவிர... என்னோட அருகாமையை அறவே வெறுத்தா...

''வலிய வலிய சிரிச்சுப் பேசினாக்கூட... பிடி கொடுக்காம நழுவிப் போனா... என்ன தான் கூச்ச சுபாவமா இருந்தாலும் இப்படியா முகத்திலடிச்சாப்பல நடந்துக்குவா? எனக்குள்ளே சந்தேகம் துளிர் விட்டுச்சு.

''நான் எதிர்பார்த்தாப்பல... கணினி முன்னாடி தனிமையில உட்கார்ந்து எல்லா கோப்புகளையும் குடைஞ்சு அக்கு வேறு ஆணி வேறா அலச ஆரம்பித்தாள்.

''பல லட்சங்களை நாம்ப முழுங்கி ஏப்பம் விட்டுருக்கோம்கிற விவரம்... அவளுக்கு கண்டிப்பா தெரிஞ்சிருக்கும். அநேகமா ஆதாரத்தோட பாட்டிம்மா கிட்டேயும் சொல்லி... நம்மை போட்டுக் குடுத்துருப்பா... தெரியுமா?''

''கொஞ்சம் பொறு கவுதம்! அப்படி அவ போட்டுக் குடுத்தும்... பர்வதம் நம்பினதா தெரியலையே?

''சின்னத் தப்பு கண்ணுல பட்டாக் கூட... பர்வதம் தாங்கிக்க மாட்டாங்களே? நெற்றிக் கண்ணைத் திறக்காத குறையா... 'தாம் தூம்'னு ருத்ர தாண்டவம் ஆடக் கூடியவங்களாச்சே?

''பல லட்சங்களை 'ஸ்வாஹா' பண்ணினது தெரிஞ்சும் ஏன் கம்முனு இருக்காங்க?

''இருபது வருஷத்துக்கும் மேலா... உன் மேல பாசத்தைப் பொழிஞ்சுட்டிருக்கிற பர்வதத்துக்கு... உன்னைக் கண்டிக்கவோ தண்டிக்கவோ எப்படி மனசு வரும்?

''வளர்த்த பாசம் கண்ணை மறைக்குது. அத்தோட... பேத்தியையும் உன் கையில ஒப்படைக்கப் போறாங்களே?



''நம்ம பேரன் கவுதம் பயலுக்கு இல்லாத உரிமையா? இதைப் போய் பெரிசு படுத்துவானேன்? அப்படிங்கிற எண்ணத்துல தான் கண்டும் காணாம நடந்துக்கிறாங்க...

''தவிர சாம்பவியாவது நேத்து தான் முளைச்சு வந்தா...

''ஆனா நீ பல வருஷமா 'பாட்டிம்மா... பாட்டிம்மா'ன்னு உரிமை கொண்டாடி... அவங்க பட்ட காயத்துக்கு மருந்தா இருந்தவனாச்சே?

''அவ்ளோ லேசுல விட்டுக் குடுப்பாங்களா?''

''ஐயோ தாத்தா! சாம்பவியை நான் கட்டிக்கிட்டா தானே இத்தனை சொத்தும் நம்ம கைக்கு வரும்?''

''ஆ... ஆமா! பர்வதம் தான் அதுக்குத் தயாரா இருக்காங்களே... அப்புறம் என்ன?''

''பாட்டிம்மா தயாரா இருந்தா போதுமா? சாம்பவி அதுக்கு சம்மதிக்கணுமே?''

''அ... அப்போ சாம்பவி வசந்தனை காதலிக்கிறான்னு முடிவே பண்ணிட்டியா? வசந்தனுக்கு காய்ச்சலாம்... நமக்கு உதவின மனுஷனாச்சேன்னு... ஒரு நன்றி விசுவாசத்துல... அவ பார்க்கப் போயிருக்கலாம் இல்லையா?''

''ஊகூம்! எனக்கென்னமோ அப்படி தோணவே இல்ல தாத்தா... வசந்தன் பாட்டிக்கு தினப்படி செக்கப் பண்ண வரும்போது... சாம்பவியோட முகத்தைப் பார்க்கணுமே...

''அந்த அழகான கண்கள்லே... நன்றி விசுவாசத்தையும் தாண்டி... கனிவும் காதலும் ததும்புறதா... என் உள் மனசுல பட்சி எச்சரிக்கும்.

''இதுநாள் வரைக்கும் தனியா எங்கேயும் போகாதவ வசந்தன் வீட்டுக்குப் போயி... ரொம்ப நேரம் கழிச்சு திரும்பியிருக்கா...

''திரும்பும்போது புது மணப்பெண் மாதிரி வெட்கம் கலந்த பூரிப்போட கார்லே வந்து உட்கார்ந்தாளாம். கார் டிரைவர் தான் நம்ம கையாளாச்சே?

''சாம்பவி என்னை உதாசீனப்படுத்தினதை நெனச்சா... என் உடம்பெல்லாம் அவமானத்தால திகுதிகுன்னு எரியற மாதிரி இருக்கு தாத்தா!

''கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாம போயிடுச்சேங்கிற கவலையை விட... ஒரு பொண்ணு என்னை நிராகரிச் சுட்டாளேங்கிற வேதனை... என்னை வேரோட சாய்ச்சுடும் போலிருக்கே...''

அவமானமும், ஆத்திரமும், ஏமாற்றமும் போட்டி போட்டுக் கொண்டு கவுதமை ஆட்டிப் படைத்து... அவனை கிட்டத்தட்ட ஒரு மிருகமாகவே ஆக்கி விட்டிருந்தன.

''இலவு காத்த கிளியா போறதுக்கு நான் என்ன இளிச்சவாயனா?

''அவங்கப்பன் ராஜதுரையை பரலோகத்துக்கு அனுப்பி வச்சவனாக்கும்... அப்பவே வம்ச வாரிசு தலையெடுக்காதபடி கருவறுத்திருக்கணும். ச்சே! முட்டாள் தனம் பண்ணிட்டேன். சரி... இப்ப ஒண்ணும் கெட்டுப் போகலை பேராண்டி!

''உன் கைவரிசையைக் காட்டு. களத்துல இறங்குவோம். ஒரு வயசுப் பொண்ணு, ஒரு நடுத்தர வயசு பொம்பளை, ஒரு கிழவி... இந்த மூணுக்கும் ஆம்பளைத் துணையே இல்ல...

''நாதியத்த கழுதைங்க... கவுதம்! என்ன பண்ணுவியோ தெரியாது... சொத்து முழுவதும் நாளைக்கே நம்ம கைக்கு வந்தாகணும்.



''சொத்து கைக்கு வந்ததும்... மூணு பேரையும் கார்லே உட்கார்த்தி மலைச் சரிவுலே உருட்டி விட்ரலாம். கோவிலுக்குப் போயிட்டு திரும்பற வழியிலே... விபத்து ஏற்பட்டுருச்சுன்னு சொல்லிடலாம்.

## 19

''சின்ன மேடம்! உ... உங்களை பர்வதம் அம்மாவும் மஞ்சுளா அம்மாவும் கூட்டிட்டு வரச் சொன்னாங்க.''

ஆங்கில நாவலில் மூழ்கிப் போயிருந்த சாம்பவி ஏறிட்டாள். ''இதோ வரேன்னு சொல்லுங்க.''

''இ... இல்ல உங்களைக் கையோட கூட்டிட்டு வரச் சொன்னாங்க.''

பதற்றமான முகம்... திரு திருத்த விழிகள்... ஒரு தினுசாய் நின்று கொண்டிருந்த வேலைக்காரி அஞ்சலையைப் பார்த்து முறுவலித்தாள்.

''சரி... வரேன்'' என்று நடந்த சாம்பவியை இடைமறித்தாள்.

''சி... சின்ன மேடம்! அந்தப் பக்கம் இல்ல... இப்படி வாங்க'' என்றபடி காரிடாரில் விரைந்து நடக்க ஆரம்பித்தாள்.

''பாட்டி ரூம் கீழே இருக்கே? இந்தப் பக்கமா கூட்டிட்டுப் போறீங்களே?''

காரிடாரில் வலது புறமாக வரிசையாய்... விசாலமான அறைகள்...

''என்னமோ தெரியலீங்கம்மா... அவங்க ஏதோ முக்கியமான விஷயத்தைப் பேசப் போறாங்களாம்.''

மழுப்பலாக பதிலளித்து விட்டு விரைந்து நடந்தாள்.

'இரவு மணி ஒன்பதரையாகிறது. பாட்டி ஒன்பது மணிக்கெல்லாம் பாதாம் பாலுடன் மாத்திரையை விழுங்கி விட்டுப் படுத்து விடுவாரே?

'ஒரு வேளை... அவளது காதல் சங்கதியை அறிந்து கொண்டு அதைப் பற்றி வெளிப்படையாகப் பேச நினைக்கிறாரோ?

'அம்மாவுக்கு என் மனம் புரியும். பாட்டியிடம் அம்மா என் ஆசையைப் பற்றி கோடி காட்டி விட்டாளோ?'

தேனாற்றில் விழுந்த எறும்பாய் மனம் குதியாட்டம் போட்டதில்... சற்றும் சிந்திக்க மறந்து விட்டாள் சாம்பவி.

காரிடாரின் கோடியிலிருந்த அந்த அறை வாசலருகே சட்டென்று நின்றாள் வேலைக்காரி அஞ்சலை.

''இங்க தான் இருக்காங்க. போங்க சின்னம்மா.''

சாம்பவி உள்ளே நுழைந்தது தான் தாமதம்... படா ரென்று கதவு சாத்தப்பட்டது.

'என்னது இது' சின்னதாய் சந்தேகம் முளை விட விதிர்த்துப் போய் திரும்பியவள் அதிர்ந்து போனாள்.

மார்பின் குறுக்கே கைகளைக் கட்டியபடி... அவளைக் குரூரமாகப் பார்த்துக் கொண்டிருந்தான் கவுதம்.

''க... கவுதம் நீங்களா? பாட்டிம்மா கூப்பிட்டாங்கன்னு தான்... இந்நேரத்துல இங்க வந்தேன். எதுக்கு... எதுக்கு. இந்த ஏமாத்து வேலை?

''கதவைத் திறந்து விடுங்க... நான் போகணும். எதுவா இருந்தாலும் காலையில பேசிக்கலாம்'' அதட்டினாள்.

பயத்தையும் அதிர்ச்சியையும் வெளிக்காட்டாமல் இருக்க அவள் பிரயத்தனப்பட்டு... தோல்வியைத் தழுவி னாள்.

''என்கிட்டே என்ன குறையைக் கண்டே? சொல்லு சாம்பவி.''



''எ... என்ன சொல்ல வரீங்கன்னு... பு... புரியலை.''

''புரியலையா? என்கிட்டே அழகில்லையா? அறிவில் லையா? திறமை இல்லையா?

''என்னை விட அந்த வசந்தன்... எந்த விதத்துலே உசத்தி? எதுக்காக என்னை நிராகரிச்சே? எனக்கு எவ்ளோ அவமானமா இருக்கு தெரியுமா? பதில் சொல்லு.''

கோபத்தில் கொக்கரித்தவனைக் கண்டு அரண்டு போனாள் சாம்பவி.

'இவன் என்ன ஹிஸ்டீரியா பேஷண்ட்டா? அல்லது 'சைக்கோ'வா? வசமாக சிக்கிக் கொண்டோமே? எப்படி தப்பிக்கப் போகிறேன் நான்?'

திகிலில் அவளது மேனி நடுங்கியது.

''கவுதம்! ப்ளீஸ்... நான் சொல்றதைக் கேளுங்க... உங்க கிட்டே குறையிருக்கிறதா... எந்தப் பெண்ணுமே நினைக்க மாட்டா... நான்... நான் இங்கே வரதுக்கு முன்னேயே... வசந்தனை நேசிக்க ஆரம்பிச்சுட்டேன்.

''வீ.ஆர்.ஹாஸ்பிடல்லே... சாதாரண நர்ஸா வேலை பார்த்தப்பவே அவர் கிட்டே என் மனசைப் பறி கொடுத்துட்டேன்... அதான் காரணம் கவுதம்... நம்புங்க.''

''என்னத்தை நம்பச் சொல்றே? இருபது வருஷத் துக்கும் மேலா... உன் பாட்டியை நம்பினதுக்கு... பட்டை நாமம் சாத்திட்டீங்களே?

''சபையில உன்னை எனக்குக் கட்டித் தரேன்'னு சொன் னது எல்லாம் வேஷம்தானே? பாட்டியும் பேத்தியுமா நாடகமா ஆடறீங்க? அந்தக் கிழவிக்கு முதல்லே சங்கு ஊதறேன்டி.

''இனியும் நான் ஏமாற மாட்டேன். ஏமாந்து மோசம் போக மாட்டேன்டி... நான் யாருன்னு காட்டுறேன்... பாருங்கடி?'' கர்ஜித்தான் கவுதம்.

அவன் தரக் குறைவாகப் பேசியதும் சாம்பவிக்கு 'விருட்'டென்று கோபம் தலைக்கேறியது.

''யாரு யாரை ஏமாத்தினது? யாரு மோசடி பண்ணினது? பல வருஷங்களா கூடவே இருந்து குழியைப் பறிச்சது யாரு? எங்கப்பாவோட உயிருக்கே உலை வச்சது யாரு? உங்க குடும்பத்தைக் கட்டிக் காப்பாத்தி... அரவணைச்ச அன்ன பூரணி எங்க பாட்டி... அவங்களையா வாய்க்கு வந்த படி பேசறே?

''உண்ட வீட்டுக்கே ரெண்டகம் பண்றியே? நாய்க்குக் கூட நன்றி இருக்கும். ஆனா... நீயும் உன் குடும்பமும்... அதை விடக் கீழான ஜென்மங்க.''

ஆத்திரத்தில் ஆவேசமாக வார்த்தைகளைக் கொட்டித் தீர்த்து விட்டாள்.

''உம்! நினைச்சேன்! இத்தனையும் உனக்குத் தெரிஞ்சிருக்கில்ல?'' என்றபடி அவளை நெருங்கி வந்தான்.

பாம்பை மிதித்து விட்டவளைப் போன்று நாலடி பின் வாங்கினாள் சாம்பவி.

மார்பு கூட்டுக்குள்... அம்பினால் துளைக்கப்பட்ட பறவையைப் போல் இதயம் துடிதுடித்தது.

''அந்தக் கடவுளே வந்தாலும் இந்த கவுதம் கிட்ட இருந்து... உன்னைக் காப்பாத்த முடியாது. தெரிஞ்சுக்கோ!''

அவளது சேலைத் தலைப்பைப் பற்றி இழுக்க முற்பட்டான்.



ரவிக்கையுடன் இணைத்துக் குத்தப்பட்ட ஸேஃப்டி பின் அவளது தோள்பட்டையை 'நறுக்' என்று பதம் பார்த்தது.

'மளுக்' என்று கண்களில் கண்ணீர் குளம் கட்டியது.

வலியைக் கூட பொருட் படுத்தாமல்... பற்களைக் கடித்துக் கொண்டு இழுத்து பலங் கொண்ட மட்டும் ஒரு அறை விட்டாள்.

'பளார்...' கவுதமுக்கு பொறி கலங்கி விட்டது.

ஏற்கனவே வெறி பிடித்தவனைப் போல் சித்தம் கலங்கியவனுக்கு... அறைபட்ட அவமானமும் சேர்ந்து கொள்ள அவனது ஆத்திரம் பன்மடங்காகி எல்லை மீறியது.

அவனது கைக்கு சிக்காமல் விசாலமான அறைக்குள் ஓடியவள்... தப்பிக்கும் வழி வகை தோணாமல் மிரண்டு போய் மூலையில் சுவற்றோடு ஒண்டி நின்றாள்.

''உனக்கு எவ்ளோ திமிர் இருந்தா... ஒரு ஆம்பிளையைக் கை நீட்டி அடிப்பே?'' கேட்டுக் கொண்டே அவளது கன்னத்தில் இடி போல் கையை இறக்கினான்.

அறைபட்ட வேகத்தில் சுவற்றில் மோதிக் கொண்டாள். ''ஆ... அம்மா... ஆ'' உதட்டில் பற்கள் பட்டு கடைவாயில் இரத்தம் 'குபுக்' என்று வழிந்தது.

கண்கள் சொருக மயங்கிச் சரிந்தாள் சாம்பவி.

அந்த அறையின் பால்கனி கதவை மெல்லத் திறந்து கொண்டு உள்ளே வந்த மார்த்தாண்டம்... சாம்பவியின் அருகே குனிந்து தொட்டுப் பார்த்துத் திடுக்கிட்டார்.

''டேய் கவுதம்! பலமா அடிபட்டுருச்சு போலிருக்கே... பின் மண்டையில இரத்தம் வருது... கடைவாயில இரத்தம் வழிஞ்சிருக்கு...

''கொஞ்சம் பொறுமையா இருன்னு சொன்னேன். கேட்டியா? செத்துட்டா போலிருக்கே? மூச்சு பேச்சு இல்லடா...''

''என்னது?'' என்றவனுக்கு... சர்வமும் பதறியது.

## 20

''ஐயோ... சாம்பவி! என் செல்லமே... அவர் போன பின்னாடி நீயே உலகம்னு வாழ்ந்தேனே?

''இப்படி ஆகும்னு பயந்து தானே... நான் யாரு கிட்டயும் மூச்ச விடாம மனசுக்குள்ளேயே மருகிட்டிருந்தேன்.

''நான் வேணாம்... வேணாம்னு தலைப்பாடா அடிச்சுக் கிட்டேனே? கேட்டியா? இந்த கதி ஆயிடுச்சே?

''அத்தே... என் தங்கத்தைப் பார்த்தீங்களா? தளதளன்னு இருந்தாளே? என் கண்ணே பட்டுடுச்சு போலிருக்கே? வேரோட பறிச்சுப் போட்ட கீரைத் தண்டாட்டம் கிடக்கிறாளே?''

மஞ்சுளா கல் மனதும் கரையும் வண்ணம் கதறினாள்.

பர்வதத்தின் அறையில்... அவரது கட்டிலில் சாம்பவி தலையில் போடப்பட்ட கட்டோடு... நிச்சலனமாய் கிடந்தாள்.

பர்வதத்தின் கண்களும் கொப்பளித்துக் கொண்டிருந்தாலும்... மனதை திடப்படுத்திக் கொண்டு... பேத்தியின் தலைமாட்டில் அமர்ந்திருந்தார்.

''மஞ்சுளா தைரியமா இரு... நம்பிக்கையைத் தளர விடாதே... அம்முவுக்கு ஒண்ணுமே ஆகாது. அவரு



சொன்னது பலிக்காம போகுமா? அதான்... உன் மாமனார் என் கனவிலே அசரீரி மாதிரி சொன்னாரே...?

''வாழையடி வாழையா நம்ம வம்சம் தழைக்கப் போகுது'ன்னு சொன்னாரே? அது எப்படிப் பொய்யாகும்?''

கம்பீரமான குரலில் அவர் அதட்டியதும்... சட்டென்று அழுகையை நிறுத்திவிட்டு நிதானித்தாள் மஞ்சுளா.

''எப்படி அத்தே? அந்தப் பாவிங்க தான் கெடு வச்சுட்டுப் போயிருக்காங்களே? வேலைக்காரங்களும் அவங்க சதிக்கு உடந்தையா இருக்காங்களே? இந்த பங்களாவை விட்டு ஈ காக்கா கூட தப்பிச்சுப் போக முடியாதே?''

மஞ்சுளா படபடத்தாள்.

''கொஞ்சம் பொறு மஞ்சு! பதறாதே... பதறாத காரியம் சிதறாதுன்னு சொல்வாங்க... இ... இதோ அம்மு இலேசா கண்ணைத் திறக்கறா பாரு... அந்த ஜக்குல இருக்கற தண்ணியைக் கொண்டா...''

சாம்பவி மெல்லக் கண்களை மலர்த்தினாள்.

'இது பாட்டிம்மாவின் அறையாச்சே? இங்கு எப்படி வந்தேன். கவுதம் கண்ணில் படவில்லையே?'

''அம்மு... கொஞ்சம் தண்ணி குடிம்மா... இப்போ வலி எப்படி இருக்கு?

பின் மண்டையில் வலி விண் விண் என்று தெறித்தது.

''நான் மயங்கி விழுந்ததும்... தலையில கட்டுப் போட்டு இங்க கொண்டு வந்து போட்டுட்டானா?... பாட்டிம்மா... கவுதம் என்ன சொன்னான் சொல்லுங்க?

''இந்த விபரீதத்தை நினைச்சுப் பார்த்தா... இந்த வலி எனக்கு ஒரு பொருட்டாவே படலை.'

''உனக்கு தலையில அடிபட்டு மயங்கி விழுந்திருக்கே... தாத்தாவும் பேரனும்... உனக்கு ஏதோ... ஆயிடுச்சுன்னு முடிவு கட்டி அரண்டுட்டானுங்க போல...

''விசாலம் ஓடியாந்து நாடி பார்த்திருக்கா... வலி தாளாம மயங்கி விழுந்திருக்கேன்னு தெரிஞ்சதும்... தலையில கட்டைப் போட்டு இங்க தூக்கிட்டு வந்தாங்க...

''உன்னை இந்தக் கோலத்துல பாத்ததும் எங்களுக்கு உயிரே போயிடுச்சு... டாக்குமெண்ட்ஸை ரெடி பண்ணிக் கொண்டு வந்தானுங்க... கையெழுத்துப் போடச் சொல்லி மிரட்டினாங்க...

''முரண்டு பண்ணாம நான் கையெழுத்துப் போட்டேன்.''

''பா... பாட்டிம்மா! சைன் பண்ணிட்டீங்ளா?''

''அம்மு... நீ தானடா எனக்குப் பெரிய சொத்து!''

''பாட்டிம்மா... இந்த தள்ளாத வயசுலே உங்களுக்கு எவ்ளோ மனக் கஷ்டம்? அப்புறம்... அந்த நன்றி கெட்ட மிருகம் வேறென்ன சொன்னான்?''

''அநேகமா... விடியக் காத்தால மூணு மணிக்கெல்லாம் நம்மைக் கார்லே ஏத்திக்கிட்டுப் போய்... மலை முகட்டுலே உருட்டி விட்ருவாங்க போல...''

''பாட்டிம்மா... இப்போ மணி பன்னிரண்டு ஆகுதே?''

பிரம்மாண்டமான சுவர்க்கடிகாரத்தில் அவளது விழிகள் படிந்து மீண்டன.



''தர்மத்தின் வாழ்வு தன்னை சூது கவ்வும். தர்மம் மறுபடியும் வெல்லும்னு சொல்வாங்க. ஆனா... நம்ம நிலைமை? எங்கப்பாவை சதி பண்ணிக் கொன்ன பாவிங்க... இப்போ நம்ம மூணு பேரையும் வேலை தீர்க்கப் போறாங்க...

''இந்த அராஜகத்தை யார் தட்டிக் கேட்கிறது? அநீதியே ஜெயிக்குதே பாட்டிம்மா... எனக்கு தாங்கலையே?''

குரலுடைந்து அழத் தலைப்பட்ட பேத்தியின் கூந்தலை மெல்ல வருடினார் பர்வதம்.

''தைரியமா இரு அம்மு! வசந்தன் உன்னைக் கூட்டிட்டு வந்த அன்னிக்கு... இந்த நரிங்களைப் பத்தி சொல்லி எச்சரிச்சான்.

''அப்பவே நான் உஷாராயிட்டேன். இந்தக் குடும்பம் கல்யாணத்துக்குப் போயிட்டு திரும்பறதுக்குள்ளே... இந்த பங்களாவுல உள்ள எல்லா அறைகள்லேயும் மைக்ரோ போனையும், ரகசிய காமிராவையும் செட் பண்ணிட்டேன்.

''ராஜதுரையை அந்தப் பாவிங்க தான் கொன்னாங்க அப்படிங்கிறதுக்கு ஆதாரம் வேணாமா? அதான்.''

''எல்லா வேலைக்காரங்களும் அந்த சதிகார நாய்களுக்கு துணை போயிட்டாங்களா பாட்டிம்மா?''

''இல்ல... அம்மு! சில விசுவாசமான வேலைக்காரங்களும் இருக்காங்க... அவங்க துணை போற மாதிரி பாவ்லா பண்ணினாங்க...''

''பாட்டிம்மா... உங்களை சந்திச்ச பின்னாடி தான் எனக்கு தைரியமே வந்தது... இப்போ நாம்ப எப்படித்

தப்பிக்கப் போறோம்? போன் கனெக்ஷன் அத்தனையையும் கட் பண்ணியிருப்பாங்களே?''

''கரெக்டா சொன்னே அம்மு! என் செல்பேசியைக் கூட எடுத்துட்டுப் போயிட்டானுங்க.. ஆனா... இப்படியொரு நிலைமை வந்தா உபயோகத்துக்கு இருக்கட்டும்னு... வசந்தன் இதை எனக்குப் பரிசளிச்சான்... பாரேன்!'' சேலை மறைப்பில் இடுப்பில் செருகி வைத்திருந்த மினி செல்பேசியை உருவி எடுத்தார்.

''வசந்துக்கு போன் பண்ணி வரவழைக்கலாமா பாட்டிம்மா?''

''ரெண்டு வாட்டி முயற்சி பண்ணிட்டேன். 'லைன்' கிடைக்கல... விசாலம் நிழல் போல என் கூடவே இருந்தாலும்... அவளுக்குக் கூடத் தெரியாம சில இரகசியங்களை நான் கடைப் பிடிச்சதுண்டு.

''இதோ இந்தக் கட்டிலுக்கு அடியில... நிலவறைக்குப் போற கதவு தரையோட தரையா பதிஞ்சிருக்கும்... அந்தக் கதவைத் திறந்து படிக்கட்டுகள்லே இறங்கி நடக்கணும்.

''இது உங்கப்பாவுக்கும் தாத்தாவுக்கும் மட்டும் தான் தெரியும். பல வருடங்களா மூடப்பட்டு கிடக்கிற பாதை... வழியில கொஞ்சம் இடர்ப்பாடு இருக்கலாம்.

''அந்த சுரங்கப் பாதை நேரா.. மலைக்காட்டு காளியம்மன் கோவில் மண்டபத்துக்கிட்டே முடியும்... அந்த தலையணைக்கு அடியில இருக்கற பென் டார்ச்சை கையில எடுத்துக்கோ நீயும் மஞ்சுவும் கிளம்புங்க.''

''என்ன பாட்டிம்மா இது? உங்களை விட்டுட்டு நாங்க நகர மாட்டோம். நீங்களும் சேர்ந்து வாங்க போகலாம்...



அதென்ன நமக்கு மூணு மணி வரைக்கும் கெடு வச்சிருக்கான்?''

''இந்த ஏரியாவுல ஊர்க்காவல் படையைச் சேர்ந்தவங்க ஜீப்புல அடிக்கடி ரோந்துக்கு வருவாங்க... கூர்க்கா வேற வருவான். அந்த அமளி துமளி அடங்கட்டும்னு... நம்மை விட்டு வச்சிருக்காங்க போல...''

''அத்தே... பேசிட்டிருக்க நேரமில்ல... நமக்கு ஏதாவது ஆனாலும் கவலையில்லை... ஆனா... சாம்பவி வாழ வேண்டியவள். அவளுக்கு ஏதும் ஆயிடக் கூடாது.''

நா தழுதழுத்தாள் மஞ்சுளா.

''அழாதேம்மா... பாட்டிம்மாவைப் பாரேன். எவ்ளோ திடமா யோசிக்கிறாங்க... பாட்டிம்மா சிறந்த மதியூகி... உங்க தைரியத்தையும் சமயோசிதத்தையும் பாராட்டறேன் பாட்டிம்மா.''

கண்கள் பனிக்க அவரது கரத்தைப் பற்றி கன்னத்தில் பதித்துக் கொண்டாள் சாம்பவி.

''உம்! அம்மு... இனியும் காலந்தாழ்த்த வேணாம். சீக்கிரமா கட்டிலை நகர்த்துவோம். அதுக்கு முன்னாடி இந்த அறைக் கதவை உட்பக்கமாவும் தாள் போட்டுரலாம்.''

அழகிய வேலைப்பாட்டுடன் அம்சமாய் திகழ்ந்த அந்தக் காலத்து தேக்கு மரக் கட்டிலை நகர்த்துவதற்குள்... மூன்று பெண்களின் தோள் பட்டைகளும் இற்றுவிட்டன.

தரையோடு பதிந்திருந்த நிலவறைக் கதவைத் திறப்பதற்குள் அவர்களுக்குப் போதும் போதுமென்றாகி விட்டது.

''சுரங்கப் பாதையில இறங்குறதுக்கு முன்னே... வசந்த்துக்கு ஒரு வாட்டி ட்ரை பண்ணிடலாம் பாட்டிம்மா.''

'நாட் ரீச்சபிள்' என்ற அறிவிப்பு வந்ததும்... மனதில் ஏமாற்றம் முற்றுகையிட.. நிலவறையில் கால் பதித்து இறங்கத் தொடங்கினார்கள்.

கும்மிருட்டில்... பென் டார்ச்சின் உதவியோடு மூணு பெண்களும் படிக்கட்டுகளில் மெல்ல இறங்கி நடந்தார்கள்.

பல வருடங்களாக... பராமரிக்கப் படாமலும், புழக்கம் இல்லாததாலும் படிக்கட்டுகள் ஆங்காங்கு பெயர்ந்து கிடந்தன.

காற்றோட்டமில்லாததால்... மூவருமே வியர்ந்து வழிந்தார்கள்.

படிக்கட்டுகள் முடிந்து சமதரை வந்தும்... அவர்களால் வேகமாக நடக்க முடியவில்லை.

தரை குண்டும் குழியுமாக அவர்களை அச்சுறுத்தியது.

சாம்பவியும், மஞ்சுளாவும் பாட்டியை கைத்தாங்கலாகப் பற்றியபடி நடந்தார்கள்.

நாசிக்குப் பிடிக்காத மக்கல் நெடி... பெரிய சிலந்தி வலைகள்... விருட்டென்று வெளவால் ஒன்று பறந்து வந்து முகத்தில் மோதியதும் வீலென்று அலறி விட்டாள் சாம்பவி.

அவ்வப்போது கிலியுடன் திரும்பிப் பார்த்தபடி நடந்தார்கள்.

''பாட்டிம்மா! இன்னும் ரொம்ப தூரம் நடக்கணுமா?''



''இ... இதோ சில்லுன்னு காத்து வருது பாரு சாளரத்து வழியா... வந்தாச்சு... அந்த 'திட்டிக்கதவை' திறந்தாக்க வெளியில போயிடலாம்.''

பற்களை இறுகக் கடித்தபடி திட்டிக் கதவின் தாழ்ப்பாளை விலக்கினாள் சாம்பவி. திட்டிக் கதவின் எதிரே பருத்த ஆலமரம்!

''பார்த்தியா? ஆலமர மறைவில் இப்படியொரு சுரங்கவழி இருக்கிறதை? யாரும் கண்டு பிடிக்க முடியாது. பாத்து... பூச்சி பொட்டு எதுவும் இருக்கப் போகுது... மஞ்சு! இப்படி வா... அதோ காளியம்மன் கோவில் மண்டபம்.''

மண்டபத்து தூணில் சாய்ந்து நின்றிருந்த வசந்தனைக் கண்டதும் தூக்கி வாரிப் போட்டது. அருகில் திருதிருத்தபடி அஞ்சலை!

''வசந்த் எப்படி உங்களுக்குத் தெரியும்?

''இந்த உலகத்துல நல்லவங்களும் இருக்காங்க சாம்பவி. இதோ.. இவங்க தான்... விசுவாசமான வேலைக்காரி அஞ்சலை. நீ அடிபட்டு மயங்கினதும் உன்னை பாட்டி அறைக்குத் தூக்கிட்டுப் போனதுமே... எனக்கு போன் பண்ணிட்டாங்க...

''நான் உஷாராகி எஸ்.பி.க்கு போன் பண்ணிட்டேன். முன் கூட்டி போட்ட திட்டப்படி பாட்டியும் நீங்களும் இந்த வழியா வருவீங்கன்னு காத்திருந்தேன். பாட்டி வரை படத்தை என்கிட்டே குடுத்து சுரங்கப் பாதையோட வழியைப் பற்றி ஏற்கனவே விளக்கியிருந்தாங்க.

''ஆதாரங்கள் கிடைச்சாச்சே? போலீஸ் அந்த நரிக் கூட்டத்தை இந்நேரம் ரவுண்டப் பண்ணியிருப்பாங்க... ஆமா... உனக்கு வலி அதிகமாயிருக்கா சாம்பவி?''

என்றபடி உரிமையாய் அவளது காயத்தைத் தடவிப் பார்த்தான்.

பாறாங்கல்லாய் மணதை அழுத்திய பாரம் இறங்கி... இறகு போல் மனம் இலேசாக... பெருமூச்சு விட்டபடி ஒரு கணம் விழிகளை மூடினாள் சாம்பவி.

''என்னாச்சு சாம்பவி?'' சட்டென்று பதறி இறுக அணைத்தான் வசந்தன்.

''அடுத்த முகூர்த்தத்துலேயே கல்யாணத்தைப் பண்ணிடலாம். வசந்தா... என் மருமக மஞ்சுளாவை சீக்கிரமா பாட்டியாக்கிடணும்.''

முகம் கொள்ளாப் பூரிப்புடன் வெட்கி விலகினாள் சாம்பவி.

குபீரென்று எழுந்த சிரிப்பொலியில் மலைக்கோவில் மண்டபமே அதிர்ந்தது.